Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 26 வெள்ளிக்கிழமை (10.08.2012) பக்கங்கள் 20 ஓசை – 314
















## சமூக விழிப்புணர்வுக் குழுக்கள் யாழ்ப்பாணத்தில் உதயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவில் அதிகரித்து வரும் சமூக சீரழிவைக் கட்டுப்படுத்துவதற்கும், சமூகம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் வன்முறைக் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் சட்டம் ஒழுங்கை மீண்டும் நிலைநாட்டுவதற்கும் வசதியாக 3 சமூக விழிப்புணர்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றது.

தொழில்நுட்ப ஆலோசனை வழங்குவதற்கு நிபுணத்துவக் குழுவும், திட்டங்களை அமுலாக்கம் செய்வதற்கு அதிகாரிகள் மட்டத்திலான குழுவும், இதற்கு மேலதிகமாக சிவில் சமூகப் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் யாழ். கிறீன் கிறாஸ் ஹொட்டலில் நேற்று இடம்பெற்ற சிவில் சமூக இணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த 3 சமூக விழிப்புணர்வுக் குழுக்களும் அமைக்கப்பட்டன. இக்கூட்டத்தில் பிரமுகர்கள் பலர் உரை நிகழ்த்தினர்.

சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் மீதான வன்முறை தொடர்பான சம்பவங்களை யாழ். பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்வதற்கு சிறுவர், பெண்கள் மீதான வன்முறை முறைப்பாட்டுப் பிரிவு பகுதி இதுவரை முறையாக இயங்கவில்லை. அத்துடன் முறைப்பாடுகளை தமிழில் பதிவுசெய்வதற்கு தமிழ் பெண் பொலிஸாரும் தற்போது இல்லாதிருக்கும் நிலையை மனித உரிமை ஆணைக்குழு எதிர்காலத்தில் நிவர்த்தி செய்யுமென மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இல்லத்து வன்முறை தடுப்புச் சட்டம் இங்கு முழுமையாக அமுல் செய்யப்படுமாயின்

19 ஆம் பக்கம் பார்க்க

### இன்று முதல் விலை குறைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் சீனி, பருப்பு, கருவாடு, ரின் மீன், சம்பா அரிசி, வெள்ளை அரிசி, நாட்டரிசி, சிவப்பு அரிசி ஆகிய 8 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை லங்கா சதோச நிறுவனம் இன்று முதல் குறைக்கப்படும் என அறிவித்துள்ளது.

### டெங்குநோயை அடையாளம் காண புதிய இயந்திரம்

(கொழும்பு)

டெங்கு நோயால் பீடிக்கப்பட்டவர்களை சரியாகவும் உடனடியாகவும் அடையாளம் காண வைத்தியசாலைகளுக்கு புதிய இயந்திரத்தை வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. நோயளர் ஒருவருக்கு டெங்கு உள்ளதா என இந்த இயந்திரத்தின் மூலம் ஒரு மணித்தியாலத்திற்குள் கண்டுபிடிக்க முடியும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## அபிவிருத்திக்கு யார் குந்தகம்

### நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

(வடமராட்சி)

உள்ளூராட்சி மன்றங்கள் பிரதேச அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது அரசு சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவற்றுக்கு எந்தவகையில் குந்தகமாக செயற்படுகின்றார்கள் என்று வல்வெட்டித்துறை நகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் பகிரங்கமாகக் கேள்வி எழுப்பினார்.

அபிவிருத்தித் திட்டங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குந்தகம் விளைவிக்கின்றனர் என்பது முற்றிலும் தவறான கருத்தாகும். இதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை நகரசபையின் 11 ஆவது மாதாந்தக் கூட்டம் கடந்த 08.08.2012 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நகரசபை தலைவர் அ.அனந்தராஜ் தலைமையில் நடைபெற்ற போதே இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டது.

அண்மையில் பொதுநலவாய நாட்டு பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கின் இன்றைய நிலவரம்; சுப்பிரமணியம் சுவாமியுடன் பேச்சு

(கொழும்பு)

பாதுகாப்புக் கருத்தரங்கில் பங்குகொள்ளும் முகமாக கொழும்புக்கு வருகை தந்துள்ள இந்திய ஜனதாக் கட்சியின் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஹோட்டல் தாஜ்சமூத்திராவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சந்திப்பின்போது இலங்கையின் குறிப்பாக வடக்கு கிழக்கு நிலவரங்கள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டறிந்த டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி இந்திய தமிழ் நாட்டு நிலவரங்கள் குறித்து எடுத்துக் கூறியதுடன் தமிழ்பேசும் மக்கள் குறித்த இந்திய

19 ஆம் பக்கம் பார்க்க



## வயோதிபப் பெண் கொலை கோப்பாயில் கோரம்

(கொழும்பு)

வீட்டில் தனியாக இருந்த வாயோதிபப் பெண் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு கோப்பாய் பழம் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் குமாரசாமி மங்கயற்கரசி (வயது - 70) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகிந்த வைத்தியபால தெரிவித்தார். குறித்த நபரின் நான்கு பிள்ளைகள் வெளி நாட்டில் வசித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 6.30 மணிக்கு அருகில் இருக்கும் பெண் ஒருவர் தனது வீட்டில் மீன்சாரம் தடைப்பட்டிருந்ததால் குறித்த நபரின் வீட்டுக்குச் தனது கையடக்கத் தொலைபேசியை சார்ஜ் ஏற்றுவதற்காக சென்றபோது அவர் கொலையுண்டிப்பதை தெரிய வந்துள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவுக்கு மின்சாரம்; வேலைகள் நேற்று ஆரம்பம்


(வேலணை)

கடந்த 23 வருடங்களுக்குப் பின்னர் மண்டைதீவுக் கிராமத்திற்கு இலங்கை மின்சார சபையினரால் கடல் வழிமூலமாக (கேபிள் மூலமான) மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த மின்சார விநியோகத்திற்கான வேலைகள் நேற்றைய தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்த வேலைத் திட்டத்தின் கீழ் இலங்கை மின்சார சபையின் வடக்கின் வசந்த திட்ட முகாமையாளர் சி.குலசிவனினால் வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மண்டைதீவுக் கிராமத்தினது மின்சாரத் தேவைகளை உடனடியாகப் பூர்த்திசெய்யுமாறு பல தடவைகள் பொது மக்களால் அமைச்சர் மற்றும் மின்சார சபையினது உயரதிகாரிகளை கேட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)



## முன்னாள் புலிகளுக்கு பொதுமன்னிப்பு இந்திய இராணுவ அதிகாரி கோரிக்கை

(கொழும்பு)


சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அடையாளம் காணப்பட்டிருக்கும் முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்று இந்திய இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய பாதுகாப்புக் கருத்தரங்கில் உரைநிகழ்த்தும்போதே அவர் மேற்படி கோரிக்கையை விடுத்தார்.

இந்தக் கருத்தரங்கில் தொடர்ந்தும் உரைநிகழ்த்திய மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா, போருக்குப் பின்னர் வடக்கில் நிலைகொண்டுள்ள படையினர் தொடர்பாக இந்தியாவுக்குக் கிடைத்துள்ள தகவல்களுக்கும், அரசின் தகவல்களுக்கும் இடையில் வேறுபாடு காணப்படுவதாகச் சுட்டிக்காட்டியிருந்தார். வடக்கில் படைக்குறைப்புத் தொடர்பாக அளிக்கப்பட்ட தகவல்களில் குழப்பம் உளள்ளதாகவும்,

19 ஆம் பக்கம் பார்க்க

# இயல்பான அமைதிச் சூழலுக்கு ஆப்பு வைக்க விரும்புகிறது கூட்டமைப்பு



அரசுத் தரப்பு வென்றுவிடக் கூடாது என்பதற்காகவே தாம் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறியிருப்பது அங்கு இயல்பான சூழலொன்று ஏற்படுவதை விரும்பாத அவர்களது அரசியல் செயற்பாட்டையே வெளிபடுத்துவதாக வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் பிரதேச அமைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் தெரிவித்தார்.

வெறுமனே உரிமைப் பிரச்சினைகளைக் கிளப்பி மக்களை உணர்ச்சியின் விளிம்பிற்குள் தள்ளிவிடுவதன் மூலம் வாக்கு வேட்டை நடாத்த விரும்பும் தமிழ் தேசியத் தலைமைகளை இனி மேலும் அவ்வாறானதொரு அழிவு அரசியலைத தொடரவிடாது நடைமுறைக்குச் சாத்தியமான வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்போர் நாட்டில் ஆரம்பித்த காலத்தில் இருந்து வெறுமனே வெறுப்பையும் விரக்தியையும் மக்கள் மனதில் விதைத்தன் மூலம் தமக்கான நாடாளுமன்ற ஆசனங்களைத் தக்க வைத்துக் கொண்ட இத்தலைவர்கள் எமது மக்கள் சந்தித்துள்ள பெரும் அழிவுகளிற்கும் இழப்புகளிற்கும் பின்னராவது அவர்கள் மனநிறைவுடன் சந்தோசமாக வாழ்வதற்கான ஒரு சூழலை ஏற்படுத்த எதிர்காலத்திலாவது தமிழ்த் தேசியத் தலைமைகள் முன்வர வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இன்று வடக்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கைப்பற்றியுள்ள பிரதேச சபைகளில் எமது மக்களுக்கான அபிவிருத்தியில் இவர்கள் காட்டிவரும் கரிசனையையும் செயற்பாடுகளையும் நோக்கும் போது கிழக்கு மாகாண சபையை இவர்கள் கைப்பற்றினால் கிழக்கு மாகாணத்தில் வாழுகின்ற மக்களையும், அவர்களுடைய அபிவிருத்தியையும் எவ்வாறான நெருக்கடிக்குள் தள்ளிவிடுவார்கள் என்பதை எம்மால் சரியாக ஊகித்துக்கொள்ள முடியும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் வடக்குக் கிழக்கு மாகாண சபையை புலிகள் விரும்பவில்லை என்பதற்காக அதனை நிராகரித்த தமிழர் விடுதலை கூட்டணியும், தமிழ் அரசுக் கட்சியும் எவ்வித அதிகாரத்தையும் கொண்டிராத இந்த மாகாண சபை எமக்கு எதற்கு எனக்கூறி அதனை நிராகரித்ததன் மூலம் தங்களை தூய்மையான அரசியல் தலைவர்களாகக் காட்டிக்கொண்டார்கள்.

வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டதன் பின்னர் இவை இரண்டும் இணைந்த மாகாண சபை தேர்தல் ஒன்றிலேயே தாம் போடடியிடுவோம் எனக் கூறிக்கொண்ட இவர்கள் அதனைக் கைவிட்டு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கோரி நின்றார்கள்.

பின்பு அதனையும் கைவிட்டு வடக்கு மாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கோரி நின்றதன் மூலம் தமது சொந்த அசைவற்ற ஆதனங்களை வரையறுக்கவும் அவற்றைப் பாதுகாக்கவுமே இந்த அதிகாரங்களைக் கேட்டு நின்றமை தெரிய வந்ததையடுத்து தாம் சுயநல அரசியல்வாதிகள் என்பதைத் தாமாகவே அம்பலப்படுத்திக் கொண்டார்கள்.

இப்போது கிழக்குத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமக்கான நியாயங்கள் எதனையும் கூறமுடியாத நிலையில் கிழக்கு மாகாண சபையை அரசு வென்று விடக்கூடாது என்பதற்காகவே இத தேர்தலைத் தாம் சந்திப்பதாக ஒரு கருத்தை முந்திக்கொண்டு முன்வைத்திருக்கிறார்கள்.

உரிமையின் பெயரால் வெற்றுக் கோஷங்களை நம்பி மீண்டும ஒரு அவலமான சூழலுக்குள் விழுந்துவிடாது தமிழ் மக்கள் எச்சரிக்கையுடன் இதனை தமக்கான தேர்தலாக எதிர்கொள்ள வேண்டும் என்பதை எமது கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எப்போதும் வலியுறுத்தி வருகின்றார். கிழக்கு மாகாண சபைத் தேர்தல் விடயத்தில் கிழக்கு மக்கள் தம் எதிர்கால வாழ்வை மேம்படுத்துவதற்கான ஒரு அரிய வாய்ப்பாகவே இத்தேர்தலைக் கருதிச் செயற்பட வேண்டும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அமைச்சரின் இந்த வேண்டுகோளை கிழக்கு மக்கள் தங்களுடைய கவனத்தில் கொண்டு நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தங்களுடைய வாக்குகளைச் சரியாகப் பயன்படுத்தி எதிர்கால வாழ்வை வளமுள்ள தாக மாற்றிக்கொள்ள வேண்டும் என தாம் கேட்டுக் கொள்வதாக வும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ். போதனா வைத்தியசாலையின் சவச்சாலையில் அடையாளம் காணப்படாத நிலையில் வைக்கப்பட்டிருந்த சடலம் வவுனியா குருமன்காட்டைச் சேர்ந்த வயோதிபர் ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

வவுனியா குருமன்காடு சமணகுளம் ஆச்சிபுரம் பகுதியைச் சேர்ந்த சரவணமுத்து அமிர்தநாதன் (வயது - 80) என்பவருடையதென உறவினர்களினால் நேற்று அடையாளம் காட்டப்பட்டு விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (பா)

## துர்க்காதேவிக்கு மஹோற்சவம் அடுத்த வாரம் ஆரம்பம்

(தெல்லிப்பளை)

வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் 2012 ஆம் ஆண்டின வருடாந்த மஹோற்சவத் திருவிழா எதிர்வரும் 18.08.2012 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் மஹோற்சவம் நடைபெறும எனவும் தேர்த்திருவிழா 28.08.2012 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கும் தீர்த்த உற்சவம் 29.08.2012 புதன்கிழமை காலை 8.00 மணிக்கும் நடைபெறும் எனவும் ஆலயத்திற்கு வரும் அடியார்கள் நகைகள் அணிந்து வருவதைக் குறைத்துக்கொள்ளுமாறும் திரு விழா முடிந்ததும் கோயில் வீதிகளில் தங்குவது, பொழுதுபோக்குகளில் ஈடுபடுவது தவிர்கக்கப்பட வேண்டும் எனவும் ஆலய பரிபாலன சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (148)

## உதைபந்தாட்டப் போட்டி

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் அழைக்கப்பட்ட யாழ். மாவட்ட முன்னணிக் கழகங்களுக்கிடையே உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்று வருகிறது.

இதில் இன்று 10.08.2012 நடைபெறும் போட்டிகளில் மாலை 3.30 மணிக்கு ஞானமுருகன் எதிர் டயமன்ஸ் மாலை 4.30 மணிக்கு சென்லூட்ஸ் எதிர் திக்கம் இளைஞர்கள் மோதவுள்ளனர். (18)



மகிந்த சிந்தனைத் திட்டத்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட மாடிக்கட்டடத்தைத் திறந்து வைப்பதற்கு வருகைதந்த விருந்தினர்களை அதிபர் திருமதி எஸ்.சந்திரேசன் தலைமையில் வரவேற்கப்படுவதையும், கட்டடத்தை திறந்துவைத்த அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ்.கிருஸ்ணசிங்கத்தினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும் காணலாம். (01)

## உதைபந்தாட்டப் போட்டி

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் போட்டிகள் 3.30 மணிக்கு ஞானமுருகன் எதிர் டயமன்ஸ் கழகமும், 4.30 மணிக்கு சென்லூட்ஸ் எதிர் திக்கம் இளைஞர்கள் கழகங்கள் மோதுகின்றன. போட்டிகள் மாலுச்சந்தி மைக்கல் விளையாடடுக் கழகத்தில் நடைபெறும். (18)

## கைவிடப்பட்ட புனரமைப்பு மக்கள் அசௌகரியம்

வடிகால் பாலங்கள் அமைக்க வீதியின் கரைப்பகுதியைத் தோண்டி எடுத்து விட்டு கடந்த இரு வாரங்களுக்கும் மேலாக மேற்படி வேலைகள் கைவிடப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ். காங்கேசன்துறை வீதியில் பிரதான அஞ்சலகத்தின் வடக்கு மற்றும் தெற்குப் பக்கங்களில் இரண்டு வடிகால் பால வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இருவாரங்களுக்கு மேலாக அரைப் பகுதி தோண்டிய நிலையில் இருந்து வருகிறது.

வாகனங்கள் மற்றும் மக்களின் பாவனையால் நெரிசலாக இருக்கும் அப்பகுதியால் மக்களோ, வாகனங்களோ பயணிக்க மிகுந்த அசௌகரியங்கள் ஏற்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி பாலவேலைகளைத் துரித கதியில் அமைத்து வீதியின் போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள சிரமங்களை அகற்றுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (68)


நல்லூர் கந்தனின் திருவிழாவை முன்னிட்டு சந்நிதி முருகன் வேக் சொப் வழங்கும் இலவச விசேட சேவை

இன்று முதல் எதிர்வரும் 17.08.2012 வரை

* எமது தொழில்நுட்ப வல்லுநர்களின் இலவச சேவை
* அசல் பஜாஜ் உதிரிப்பாகங்களிற்கு 10 வீத விலைக்கழிவு
* திருத்த வேலைகளிற்கு 10 வீத விலைக்கழிவு

இல. 241, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(வீரகாளி அம்மன் கோயில் அருகாமை)
தொ.பே. 0212228076, 0777110199, 0772018275

(C/1676)


## கண்காட்சி

(நல்லூர்)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை யாழ். மாவட்ட அலுவலகத்துடன் இணைந்து நடத்தும் சிறுவர் உரிமைகள், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சி எதிர்வரும் 15,16,17 ஆம திகதிகளில் காலை 8.00 மணி முதல் மாலை 10.00 மணிவரை நடைபெறவுள்ளது.

நல்லூர் ஆலய பின்புற வீதியில் திருவள்ளுவர் சிலைக்கு அருகாமையிலுள்ள ஜனசக்தி சிறுவர் பூங்கா வளாகத்தில் இடம்பெறும் இந்நிகழ்வில் சகலரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## ஆன்மிக அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிசன நடத்தும் ஆன்மீக அருளுரைகள் இன்று பத்தாம் திகதி வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் பதினெட்டாம் திகதி சனிக்கிழமை வரை தினமும் 7.00 மணிக்கு நல்லூர் வடக்கு வீதியில் உள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

தினமும் இந்நிகழ்வில் வடமாகாண சின்மயா மிசன் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆன்மீக அருளுரை வழங்குவார். இன்று மாலை 'கூத்தாடுதே மனம் என்ன கொடுமை' என்ற பொருளில் சுவாமிகள் உரை நிகழ்த்துவர். (10)



# ஆலயம் சார்ந்த பக்திப்பாடல்கள் சமய வளர்ச்சிக்கு சான்றாக வேண்டும்

## விரிவுரையாளர் ச.லலீசன்

(யாழ்ப்பாணம்)

தமிழழையும் பக்தியையும் வளர்ப்பதற்கு ஆலயங்கள் சார்ந்த இசைப் பாடல்களை துணையாக்கிக்கொள்ள முடியும் என கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் எஸ்.லலீசன் தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் மீது பாடப்பட்ட உலவிகுளப் பாமாலை இசைத தட்டு வெளியீட்டுவிழாவில் வெளியீட்டுரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல்லவர் காலத்தில் நாயன் மார்கள் தமிழையும் தமிழ் உணர்வையும் சமய நம்பிக்கைகளையும் வளர்த்தெடுப்பதற்கு பக்திப்பாடல்களை துணையாகக் கொண்டனர். இசைப்பாடல்களை எழுதுபவர்கள் ஆலயங்களின் வரலாறுகள், பெருமைகளை ஆவணப்படுத்தல் என்னும் அடிப்படைச் சிந்தனையுடன் பாடல்களை எழுத வேண்டும்.

தற்போது ஆலயங்கள் மீது பாடப்படும் இசைப்பாடல்கள் எதிர்காலத்தில் மண்ணின் சமய நிலை குறித்து வரலாற்றுச் சான்றாக அமைய வேண்டும். முன்னர் பக்திப்பாடல்களைப் பாடுவதற்கு தென்னிந்தியாவை நம்பி இருந்த நிலை காணப்பட்டது. எனினும் தற்போது நம்மவர்களின் தயாரிப்பில் சிறந்த பாடல்கள் இசை வெளியீடுகளாக வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் என அவா மேலும் தெரிவித்தார்.

ஓம்சக்தி வெளியீடாக மலர்ந்த குறித்த இசை இறுவெட்டின் முதற் பிரதியை விரிவுரையாளர் ச.லலீசனிடமிருந்து ஆலய மகோற சவ குரு சிவஸ்ரீ வி.கஜேந்திரக் குருக்களும் சிறப்புப் பிரதியை ஆலய நிர்வாகி இ.கணேசலிங்கமும் பெற்றுக்கொண்டனர்.

# தையல் இயந்திரங்கள் கையளிப்பு

(வவுனியா)

வவுனியா நாற்சதுர சுவிசேச சபையினால் வழங்கப்பட்ட தையல் மற்றும் தோல் உற்பத்தி பயிற்சி நெறிகளை நிறைவு செய்தவர்களுக்கான தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா தோணிக்கல் நாற்சதுர சுவிசேச சபையில் இடம்பெற்றது.

6 மாத காலபயிற்சி நெறியினை உள்ளடக்கிய இப்பயிற்சிகளில் 62 மாணவிகள் சித்தி பெற்றிருந்தனர். இவர்கள் தமது தொழிலினை செய்வதற்கும் மேம்படுத்துவதற்காகவும் இத் தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டதாக சபையின் உபதலைவரும் போதகருமான ரிபரன் நிரஞ்சன் தெரிவித்தார். (160)

# அபிவிருத்தி வேலைகள் பிரதேசசபையால் முன்னெடுப்பு

(நெடுங்கேணி)

வடக்கு கிழக்கு உள்ளூர் சேவை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (புறநெகும) 3ஆம் கட்ட வேலைகளை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதன் அபிவிருத்தி வேலைகளாக காவின்கிராய் வெள்ளை வாய்க்கால் வீதி, அல்வாய் மனோகரா வீதி, தம்பாள் ஒழுங்கை மணியகாரன் தோட்ட தெற்கு வீதி, உடுப்பிட்டி நெசவு சாலை வீதி, கலைமகள் சனசமூக வீதி, ஸ்ரீநாரதா வீதி போன்றன 2010ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட மக்கள் பங்கேற்பு திட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பிரதேச சபையின் நிதி மூலம் நெல்லியடி புதிய சந்தையில் 6,18,664 ரூபாவிற்கு புதிய கொட்டகை அமைத்தல், கொமமாந்துறை வீதி 7,55,085ரூபாவில் புனரமைக்கப்படவுள்ளதென வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் பொ. வியாகேசு தெரிவித்துள்ளார். (12)



# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று...

(நல்லூர்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் கார்த்திகைத் திருவிழாவான இன்று பிரம்மஸ்ரீ என்.சிவகுமார சர்மாவின் மெண்டலின் கச்சேரி இடம்பெறவுள்ளது. இதில் அணிசேர் கலைஞர்களாக வயலின் ஆர்.இராதாகிருஷ்ணன், மிருதங்கம் கே.கண்ணதாசன், தவில் எஸ்.அஜந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் ஆன்மிக சிந்தனையும் சமய சொற்பொழிவும் கலைநிகழ்வுகளில் தெய்வவாசகம் என்னும் விடயம் பற்றி சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகளில் மல்லாகம் பழம்பதி அறநெறிப்பாடசாலை, நீர்வேலி ஸ்ரீ கணேசா, அச்செழு மதுரை மீனாட்சி அம்மன் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

விசேட நிகழ்வாக செல்வி.கங்காநந்தியின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறும் "தெய்வீகப் பேருரைகள் கலை நிகழ்வு" களில் இன்று பேராசிரியர் அ.சண்முகதாஸ் "திருப்பெரும் வடிவம்" என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.

மகேஸ்வரன் மணிமண்டபத்தில் டான் தொலைக்காட்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கலைநிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இதே போல் மனோன்மணி அம்மன் ஆலயத்திலும் கலைநிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

சைவ மகாசபை நடாத்தும் தெய்வீக இசைப்பேருரை தொடரில் இன்று பிற்பகல் 6.30 மணி தொடக்கம் 7.30 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ நித்யானந்த சர்மா வழங்கும் கந்தபுராண சொற்பொழிவு இடம் பெறவுள்ளது. (42)

# விசேட வங்கிச் சேவை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மக்களின் நலன் கருதி மருதன் கேணியில் இயங்கும் இலங்கை வங்கி மருதங்கேணிக் கிளையில் இம்மாதம் தொடக்கம் நகை அடைவு பிடிக்கும் சேவை ஆரம்பித்துள்ளது,

இதற்கு முன்னர் இப்பிரதேச மக்கள் நகை அடைவு வைப்பதற்கு பருத்தித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி நகரங்களுக்குச் சென்றே நகை அடைவு வைத்து பணம் பெறமுடிந்தது. இதன் போது வீண் சிரமங்களை எதிர்கொள்ளவும் நேரிட்டது.

தற்போது எவ்வித சிரமமுமின்றி பணம் பெறக் கூடியதாகவுள்ளதாக வாடிக்கையாளர் ஒருவர் தெரிவித்தார்.

# கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் நிர்வாகசபைக் கூட்டம் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவனத் தலைவர் பா. இரகுநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதால் உரியவர்கள் குறித்த நேரத்திற்கு வருகை தருமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (109)


# பயிற்சி நெறி

(முல்லைத்தீவு)

இலங்கை செஞ்சிலுவைச்சங்க முல்லைத்தீவு மாவட்டக் கிளையினால் உப்புமா வெளி கிராமத்தில் 4 நாட்கள் கொண்ட அடிப்படை முதலுதவி பயிற்சி நெறி ஒன்று நடத்தப்பட்டது.

உப்புமாவெளி கிராமசேவையாளர் பிரிவிலுள்ள மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இப்பயிற்சி நெறி நடத்தப்பட்டுள்ளதுடன் இதில் 25 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (04)

# நல்லூர் முருகனுக்கு இன்று கார்த்திகைத் திருவிழா



## பேரருளைத் தந்திடுவான்!

ஆறுமுகனுதித்தே ஆணவத்தைப் போக்கியதைக்
கூறுந் திருக்கார்த்திகைவிழா - பேறுபெறப்
பேரொளியைத் தந்த பெருமானார் நல்லூரிற்
பாரொளியாய் நிற்பான் பணி

-நல்லூர் கந்தன் பாமாலை-

## கார்த்திகைக் கந்தனைத் தொழுதிடுவோம்!

கார்த்திகைத் திங்கள் கார்த்திகைத் திருநாள் கந்தன்
அருள் மழை பொழிந்திடும் திருநாளாம்
கதியென அடியவர் கந்தனின் கழலடியினை
சரணடைந்திடும் திருநாளாம்
கற்பனைக் கெட்டா கார்த்திகைப் பாலன் கந்தவேள்
கவலைகள் தீர்த்திடும் திருநாளாம்
காவற் பரம்பொருள் கருணைப் பரம்பொருள் கார்த்திகேயன்
கார்த்திகைக் கந்தனைத் தொழுதிடுவோம்

-தொல்புரத்தூர்.க.லோகேஸ்வரன்-

## கார்த்திகை ஊர்தியில் கந்தன் வருகிறான்!

தேசம் சுமக்கும் துயரம் தீர்க்க
தேவ தேவே எழுந்து வருக!
நாசம் விளைக்கும் சூரர் அழிய
நல்லைக் கந்தா எழுந்து வருக!
வேஷம் போடும் வீணர் ஒழிய
வேலைக் கையில் ஏந்தி வருக!
நேசம் வைத்து எம்மைக் காத்து
நிரந்தர தீர்வைத் தந்து ஆள வருக!

-வர்ணனைக் கலாநிதி.காரை.எம்.பி.அருளானந்தம்-




# கலாசார மடலுக்கு ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச செயலக கலாசாரப் பிரிவின் கலாசார விழாவினை முன்னிட்டு கலாசார செய்தி மடல் ஒன்று வெளியிடப்படவுள்ளதால் இம்மலருக்கான ஆக்கங்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் கோரப்பட்டுள்ளது.

ஆக்கங்கள் சொந்தப் படைப்பாக இருப்பதுடன் முன்னர் பிரசுரிக்கப்படாதவையாகவும், பிரதேசம் சார்ந்தவற்றைப் பிரதிபலிப்பவையாகவும், அமையவேண்டும். கட்டுரை 1000 சொற்களுக்கு உட்பட்டவையாகவும், கவிதை 10 செய்யுளடிகளுக்கு உட்பட்டவையாகவும், சிறுகதை 1000 சொற்களுக்கு உட்பட்டவையாகவும் அமைய வேண்டும்.

விடுகதைகள், செய்தித் துளிகள், குறுங்கதைகள் தொடர்பான ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன. ஆக்கங்கள் தாளின் ஒரு பக்கத்தை மட்டும் பயன்படுத்தி தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சில் பொறிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும் தகுதியான ஆக்கங் கள் மட்டுமே செய்தி மடலில் பிரசுரிக்கப்படும். மடல் ஆசிரியரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக கொள்ளப்படும்.

எனவே ஆக்கங்களை அனுப்புவோர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி அறிவித்துள்ளார்.

தன்னம்பிக்கை, தெளிவு, துணிச்சல் இந்த மூன்றும் தான் ஒருவனை எப்போதும் காப்பாற்றி வழிநடத்திச் செல்லும். - கன்ஃப்யூஷியஸ்

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## இன்னும் திருந்தாத 'செய்தி ஆய்வுகள்!'

கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான் என்கின்ற பழமொழி நமக்குத் தெரியும். தாம் நம்ப விரும்புகின்ற வதந்திகளை கேட்பதிலும், அதற்கு சோடனைகள் செய்து சுற்றுக்கு அனுப்புவதிலும் "திறில்" அடைந்துகொண்டிருக்கும் பிரகிருதிகள் நம் மத்தியிலும் உண்டு. பத்திரிகைகளையும் இணையத்தளங்களையும் மேய்கிறவர்களுக்கு, நம் மத்தியில்தான் இந்தப் பிரகிருதிகள் அதிகம் என்றும் முடிவு வரக்கூடும்.

இரணைமடுக்குளத்தில் விவசாயிகளுக்குத் தேவையான ளவு நீரின்றி வற்றிப்போனமைக்கு என்ன காரணம் என்ற "செய்தி ஆய்வில்" நம்மவர்கள் மீண்டுமொருமுறை தங்கள் ஊடகத் திறிலைக் காட்டி ஓய்ந்திருக்கிறார்கள். இரணைமடுக்குளம் அருகே இராணுவத்தினரின் முகாமிருக்கிறது. அது போதாதா... தமிழ் விவசாயிகள் கஷ்டப்படும்படியாக நீர் வற்றிப் போனதுக்கு வேறு காரணங்களைத் தேட வேண்டுமா என்ன?

தவளைக்கு நாலு கால்களையும் வெட்டிவிட்டு, நாலைந்து முறை 'ஜம்ப்... ஜம்ப்' என்று கத்திப்பார்த்துவிட்டு, எங்கள் ஆய்வு முடிவாக எதை எழுதுவோம்? 'கால்கள் இல்லாவிட்டால் தவளைக்குக் காது கேளாது' என்று எழுதுவதுதானே எங்கள் ஊடகக்காரர்களின் ஆய்வு முறைமை!

இரணைமடுக்குளத்தின் தலைமை நிர்வாகியிடமோ, குளத்தின் மூலமாக விவசாயிகளுக்கு முடிந்தளவு உச்ச பயனைப் பெற்றுத்தந்து விடுவதற்காக நிலங்களை அளந்தும் நீர்மட்டத்தை அளந்தும் வெயிலில் அலைந்து திட்டமிடல்களைச் செய்து கொண்டிருக்கும் நீர்வளப் பொறியியலாளர்களிடமோ ஏன் விவசாயிகளிடமோ கூடக் கேட்காமல் குளம் வற்றியது பற்றிய ஆய்வுக்கட்டுரைகளை எழுதிப் பிரசுரித்துவிடும் நம்ம ஊடக விற்பன்னர்களை என்ன சொல்ல?

இரணைமடுக்குளத்தை நிர்வகிக்கும் தலைமைப் பொறியாளரான சுதாகரனையும் விவசாயிகளையும் கேட்டு பிபிசி செய்தியில் விவரம் சொன்ன பிறகே, அதுவரை நம்மவர் போட்ட உணர்சசிகரக் கூத்துக்கட்டல்களின் வண்டவாளம் ஏனைய மக்களுக்கு வெளிக்கிறது. இம்முறை போதுமான மழையின்றிப் போனதால் குளத்திலிருந்து விவசாய நிலங்களுக்குப் போதிய நீரை வழங்க முடியவில்லையே தவிர, இராணுவத்தினர் கேட்டு நாங்கள் நீரைத திறந்துவிட்டோம் என்று சொல்வதெல்லாம் அபாண்டமான கட்டுக்கதை என்றார் சுதாகரன். ஒவ்வொரு துளி நீருக்காகவும் நாங்கள் எடுத்துக்கொள்ளும் பிரயத்தனங்களையும் சிரமங்களையும் அறியாது எங்கோ இருந்துகொண்டு கொச்சைப்படுத்தி எழுதி இவர்கள் என்ன காண்கிறார்கள் என்று வேதனைப்பட்டார் அவர்:

ஒன்றுமட்டும் உண்மை. இவர்கள் இப்படிப் பொய்யான திரிபுபடுத்தல்களை, உண்மைக்கு மாறான போலி உணர்ச்சியேற்றலகளைச் செய்து செய்துதான் நமது உண்மையான உரிமைக் கோரிக்கைகளையும் மெய்யான பிரச்சினைகளையும் பிறர் நம்பமுடியாதவாறு நீர்த்துப்போகச் செய்தார்கள். யதார்த்தங்களை மறைத்து இட்டுக்கட்டல்களும் போலிக் கொந்தளிப்புகளுமாய்ப் பொங்கி எல்லாவற்றையும் பாழடித்தார்கள்.

ஏதாக இருந்தாலும் அதன் உண்மைநிலைகளை சமநிலை தளம்பாத மனப்பக்குவத்துடன் ஆராய்ந்து அறத்தோடும் நியாயத்தோடும் சாத்தியபூர்வமாயும் பிரச்சினையின் தீர்வுக்கு வழி தேட முயல்பவர்களை அமுக்கிவிட்டுச் சும்மா கூச்சலிடுவதே தமிழ்த் தேசியம் என்று மக்களை நம்பச்செய்து வருகிறார்கள். அரச – இராணுவ வெறுப்புடன் கலந்து எந்தப் பொய்யைச் சொனனாலும் ஒத்தூதுவதொன்றே விடுதலைக்கான பயணம் என்று நம்பும் கிணற்றுத் தமிழர்களாக நம்மை மாற்றிவிடும் எத்தனங்களிலேயே இருக்கிறார்கள்.

உண்மைகளையும் யதார்த்தத்தையும் நேர்நோக்கிப் பார்க்கக் கூசுபவர்களாகவும், பொய்யான திறில்களோடு திருப்தியடைய விரும்புபவர்களாகவுமே இன்றும் நம் ஊடகங்களும் இணையத்தளங்களும். எனில், தொடரும் நம் துயரை முடிப்பது எங்ஙனம்?

- ஆசிரியர்

# 42, 800 பட்டதாரிகளுக்கு அரச நிறுவனங்களில் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வைத்த யோசனைக்கு அமைய 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் செயற்திட்டம் அமைச்சரவையின் அனுமதியுடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை 42 ஆயிரத்து 800 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருப்பதாக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனிவரட்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த யோசனைக்கு அமைய 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் செயற்திட்டம் அமைச்சரவையின் அனுமதியுடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டின் பின்னர் முதன்முறையாக பெரும் எண்ணிக்கையான பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு வழங்கும் செயற்றிட்டத்தில் கட்சி பேதம் பார்ப்பதாகவும் பாரபட்சம் பார்த்தே வேலைவாய்ப்பு வழங்கப்படுவதாகவும் எதிர்க்கட்சிகள் போலிப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன.

இவர்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் முற்றுமுழுதும் போலியானவை என்றும் அமைச்சர் ஜோன் செனிவரட்ன குறிப்பிட்டார். அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் செயற்றிட்டத்தில் எந்தவித அரசியல் பாரபட்சமும் காட்டப்படவில்லை

நீண்டகாலமாக பட்டச்சான்றிதழ்களுடன் வேலைவாய்ப்பின்றி இருந்தவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆறு மாத பயிற்சிக் காலத்தின் பின்னர் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும். பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு 16478 பட்டதாரிகள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளதுடன்- மாகாணசபைகளுக்கு 4170 பட்டதாரிகளும்- விவசாய அமைச்சுக்கு 2560 பட்டதாரிகளும்- அரச பொதுநிர்வாக அமைச்சுக்கு 1500 பட்டதாரிகளும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இலங்கையில் தற்பொழுது மூன்று வீட்டுக்கு ஒரு வீட்டில் பட்டதாரிகள் உள்ளனர். 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்கு முன்னர் பட்டம் பெற்றவர்களுக்கே நாம் தற்போது வேலை வாய்ப்புக்களை வழங்கியுள்ளோம்.

2010 ஆம் ஆண்டு பட்டம் பெற்றவர்களுக்கு 2013 ஆம் ஆண்டிலும்- 2011 ஆம் ஆண்டு பட்டம் பெற்றவர்களுக்கு 2014 ஆம் ஆண்டிலும் வேலைவாய்ப்புக்களை வழங்க அரசாங்கம் திட்டங்களைத் தயாரித்திருக்கின்றது.

சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கும் பட்டதாரிகளுக்கு தற்போது மாதாந்தம் அடிப்படைச் சம்பளமாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. இவர்கள் நிரந்தரமாக்கப்பட்டதும் அடிப்படைச் சம்பளம் 15 ஆயிரம் ரூபாவுடன் ஏனைய கொடுப்பனவுகளையும் சேர்த்து மாதாந்தம் 23500 ரூபாவைப் பெற்றுக் கொள்வார்கள்.

வேலைவாய்ப்புப் பெற்ற பட்டதாரிகளில் அதிகமானவர்கள் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுடைய பிரதேசங்களில் பொருளாதார நிலைமை மேலும் விருத்தியடைந்து அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

வேலைவாய்ப்புப் பெற்றிருக்கும் அனைத்துப் பட்டதாரிகளும் நிரந்தர நியமனம் பெற்ற பின்னர் சாதாரண அரசாங்க உத்தியோகத்தர்களைப் போன்று விடுமுறைகள் மற்றும் இடமாற்றங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சகல வசதிகளையும் கொண்டுள்ளார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# செயற்கை அவயவங்கள் உற்பத்திக்கு ஜப்பான் 3.7 மில்லியன் உதவி

(கொழும்பு)

செயற்கை அவயங்களை உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் வழங்கல் அளவை விஸ்தரிப்பதற்காக ஜப்பானிய அரசாங்கம் சுமார் 3.7 மில்லியன் ரூபா நிதியுதவியை நேற்றுமுன்தினம் வழங்கியுள்ளது.

சமூக நலத்திட்ட நன்கொடை உதவியாக அடிமட்ட மனித பாதுகாப்புக்கான நன்கொடை திட்டத்தின் கீழ் இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியின் மூலம் குறித்த நிறுவனத்திற்கு தேவையான மேலதிக இயந்திரங்களும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

இலவசமாக செயற்கை உபகரணங்களை தேவையானோருக்கு வழங்கி வரும் கொலம்போ பிரெண்ட இன்நீட் சங்கத்தினால் கொழும்பில் செயற்கை உறுப்பு தயாரிப்பதற்கான செயற்பட்டறைகளை நிறுவுவதற்கும் விருத்தி செய்வதற்குமாக இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் ஊடாக வருடாந்தம் 1,000 பேரை சமூகத்தில் மீளிணைந்து கொள்ளவும் சமூக சூழ்நிலைகளை மேம்படுத்திக்கொள்ளவும் நேரடியாக உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நன்கொடை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் கைச்சாத்திடப்பட்டது. இதில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் நொபுஹிதொ ஹொபொ மற்றும் கொலம்போ பிரெண்ட இன்நீட் சங்கத்தின் தலைவி கல்யானி ரணசிங்க ஆகியோர் கையெழுத்திட்டனர்

# எம்.பிக்களின் வரப்பிரசாதங்களை மன்னார் நீதவான் மீறியுள்ளார்

(கொழும்பு)

மன்னார் நீதவான், நாடாளுமன்ற உறுப்பினர்களின் வரப்பிரசாதங்களை மீறிச் செயற்பட்டுள்ளதாக சபாநாயகர் சமால் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றில் ஆற்றும் உரை தொடர்பில் வெளிநபர்கள் அச்சுறுத்தல் விடுக்க முடியாது. மன்னார் நீதவான், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுசெய்ன் பாருக்கை அச்சுறுத்தியதாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"நீ நாடாளுமன்றில் என்னைப் பற்றி பேசினாய் அல்லவா", "போராட்டத்தில் நீ கலந்து கொண்டாய் அல்லவா" - என மன்னார் நீதவான் தம்மை அச்சுறுத்தியதாக ஹுசெய்ன் பாருக் தெரிவித்துள்ளார்.


இதேவேளை, 78 நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் அடிப்படையில் இதனை வரப்பிரசாத பிரச்சினையாக கருதப்பட முடியாது என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.


வரப்பிரசாத பிரச்சினை ஏற்பட்டிருந்தால் அதற்காகக் குரல் கொடுக்கத் தயார். எனினும் இது வரப்பிரச்சாத பிரச்சினையா அல்லது நீதிமன்றத்தின் மீது அழுத்தம் பிரயோகித்த சந்தர்ப்பமா என ரணில் கேள்வி எழுப்பியுள்ளார்.


எனினும், 78 நிலையியற் கட்டளை இதற்கு பொருந்தாது எனவும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் கௌரவத்தை பாதுகாக்க வேண்டியது தமது பொறுப்பு எனவும் சபாநாயகர் சமால் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றில் ஆற்றிய உரை தொடர்பில் எவராலும் கேள்வி எழுப்ப முடியாது. இது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.









# யுத்தப் பிரதேசத்தினூடு ஒரு சுற்றுலாப் பயணம்...

- நாமினி விஜேதாஸ கட்டுரையிலிருந்து

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான கடினமான சுற்றுலாப் பயணம். இங்கு பலரையும் கவரும் பிரதான கவர்ச்சிப் பொருட்கள் எல்.ரீ.ரீ.ஈ யினருடைய சிறைக் கூடங்கள், பிரபாகரனால்பயன்படுத்தப்பட்ட நிலத்துக்கு அடியிலுள்ள இரண்டு பதுங்கு குழிகள், அவற்றில் ஒன்று நிலத்துக்கு அடியில் நான்கு தட்டுகளாக கட்டப்பட்டுள்ளது, திறந்த வான் போரைப்பற்றிய ஒரு அருங்காட்சியகம், எல்.ரீ.ரீ.ஈ தலைவர்களின் பொழுதுபோக்குக்கு மட்டுமன்றி கடற்புலிகளின் பயிற்சிக்காகவும் பயன்படுத்தப்பட்ட ஒரு நீச்சல்குளம்,கடற்புலிகளின் தலைவர் சூசையின் வீடு, புலிகளினால் கடத்திச் செல்லப்பட்ட ஜோர்தானிய கப்பலான பாரா - 3 யின் உடைந்த துருப்பிடித்த பாகங்கள் மற்றும் இறுதி யுத்தம் நடைபெற்ற வட பகுதி கடலோரத்தை சூழவுள்ள நீண்ட கடற்பிரதேசம் என்பனவே.

வெகு சமீப காலம்வரை இந்த இடங்கள் வெளியாட்களின் வருகைக்கு மட்டுப்படுத்தப் பட்டிருந்தன. ஆனால் இப்போது அந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு விட்டன, நாட்டின் ஏனைய பகுதியை சேர்ந்த இலங்கையர்கள் அங்கு செல்வது பெருகி வருகிறது. (உங்கள் வாகனங்களை சில உள்செல்லும் மற்றும் வெளியேறும் இடங்களில் இன்னமும் நீங்கள் பதிவு செய்தாக வேண்டும், அதைத்தவிர வேறு சம்பிரதாயங்கள் கிடையாது.)

அது முதுகெலும்பு முறியத்தக்க ஒரு பயணம் நிச்சயமாக மாரடைப்பு ஏற்படலாம். பிரதான பாதையில் இன்னும் வீதிக் கட்டுமான வேலைகள் இடம்பெற்று வருகின்றன. உட்பகுதி வீதிகள் குண்டும் குழியுமாக சமச்சீரற்று உள்ளன. சூட்டைப் போல தூசியும் எல்லா இடமும் படர்ந்து பரவும்.

சுற்றுலாப் பயணிகள் பெரும்பாலும் பேருந்துகளிலோ அல்லது வான்களிலோ அவற்றின் யன்னல்களை திறந்தபடியே வருகிறார்கள். அவர்களிடையே வயதான ஆண்கள் மற்றும் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளும் உள்ளார்கள்.

அனுராதபுரத்தில் இருந்துவரும் அப்படியான ஒரு கூட்டத்தினர் பயங்கரமான வாகன குலுக்கலில் அகப்பட்டிருந்தாலும் எங்கள் புகைப் படக் கருவியை நோக்கி வாய்நிறை புன்னகை புரிந்தார்கள். அவர்கள் முகம் முழுவதும் அடர்த்தியான தூசு படிந்திருந்தது. அவர்களின் வாகனத்தின் பின்பக்கம் முழுவதும் ஆட்களுடன் சேர்த்து சமைப்பதற்கு, படுப்பதற்கான உபகரணங்கள், தண்ணீர் கொள்கலன்கள்மற்றும் உணவுப் பொருட்கள் என்பன நிறைந்திருந்தன. உண்மையில் இந்த வருகையாளர்களில் அநேகர் தங்களுக்கு தேவையான சகலதையும் தாங்களே எடுத்து வருவதால் நெல்லிச் சாறு, புழுக்கொடியல் அல்லது பழங்கள் போன்ற சில்லறைப் பொருட்களை மட்டும் இங்கு வாங்குகிறார்கள்.

விசுவமடுவில் உள்ள பிரபாகரனின் பதுங்குகுழி ஒன்றுக்குள் உட்செல்லுவதற்காக மக்கள் வரிசையில் நின்றிருந்தார்கள். இந்த பதுங்குகுழி இரண்டு தட்டுகள் ஆழத்தில் உள்ளது. வான்வெளி தாக்குதல் காரணமாக அதன் அடர்ந்த கொன்கிரீட் சுவர்களில் ஒன்றில் ஒரு நீண்ட வெடிப்பு காணப்படுகிறது. அதன் அருகில் சென்றால் அந்தப் பள்ளத்தை நன்கு காணலாம்.

பிரபாகரன் அந்த இடத்தில் இருந்தபோது பயன்படுத்திய வீட்டுக்கு அருகில்தான் அந்த பதுங்கு குழி அமைந்துள்ளது. வானத்திலிருந்து பார்க்கும் ஒரு விமானி ஒரு பிரமாண்டமான தண்ணீர் தொட்டியைத்தான் பார்ப்பார். ஆனால் அதன் அடியில்தான் அந்த பதுங்குகுழி உள்ளது. அது கெட்டியான குண்டு துளைக்காத இரும்புக் கதவுகளை கொண்டுள்ளது. அதனுள் ஒரு விரிவுரை அரங்கு, உணவருந்தும் பகுதி, கழிப்பறைகள், அலுவலக அறை மற்றும் ஒரு படுக்கை அறை என்பன உள்ளன. அது குளிரூட்டப்பட்டிருந்ததாக இராணுவத்தின் வழிகாட்டி ஒருவர் தெரிவித்தார். இப்போது அது துர்நாற்றம் வீசுவதுடன் இருட்டாக உள்ளது. அந்த படுக்கை அறையினுள் பெரிய ஒரு ஒட்சிசன் உருளை மற்றும் ஆயுதங்கள் வைப்பதற்கான ஒரு தனியிடம் என்பன உள்ளன. இரகசிய ஆவணங்கள் வைப்பதற்காக பயன்பட்ட அலுமாரி இப்போ வெறுமையாக காட்சியளிக்கிறது.

பதுங்குகுழியினுள் இருந்த அநேக பொருட்கள் இராணுவத்தினரால் அப்புறப்படுத்தப்பட்டு விட்டது, ஆனால் பிரபாகரன் தனது இன்சுலின் குப்பிகளை வைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கொள்கலன் இன்னமும் ஒரு மேசைமேல் உள்ளது. மாற்றுத் திறனாளியான ஒரு எல்.ரீ.ரீ.ஈபோராளியினால் செதுக்கப்பட்டு புலிகளின் தலைவருக்கு அவரது 45ஆவது பிறந்த நாளின்போது பரிசளிக்கப்பட்ட சிறுத்தையின் சிற்பமும் படுக்கை அறையின் பின்புறம் வைக்கப் பட்டிருந்தது.

பிரபாகரனின் தேவிபுரம் பதுங்குகுழிக்குள் செல்வதற்காக மிக நீளமான வரிசை காணப்பட்டது. நிலத்தடியில் உள்ள நான்கு தளங்கள்முழுவதும் பரந்து அமைக்கப்பட்ட அறைகளை கொண்டுள்ள இதன் கட்டட அமைப்பு பிரமிக்க வைக்கின்றது. அது பல குளியலறைகளை கொண்டிருப்பதுடன் குளிரூட்டப்பட்டும் உள்ளது. பிரதான மாடிப்படிகளுக்கு மேலதிகமாக ஒவ்வொரு தளத்தையும் இறுதியில் நிலப்பரப்பையும் அடைவதற்கான இரகசிய மாடிப்படி வசதிகளும் உள்ளன. தப்பிச்செல்லும் பாதைகளை பற்றி எல்.ரீ.ரீ.ஈயின் தலைவர் தெளிவான மனப்பக்குவத்துடன் இருந்திருக்கிறார்.

மக்கள் கூட்டம் இராணுவத்தினரால் கட்டுப்படுத்தப்பட்டாலும் கூட, இந்தப் பதுங்குகுழியின் விளிம்புவரை சனக்கூட்டம் நிறைந்து வழிந்தது. அது கடுமையான வியர்வையை வழிந்தோட வைத்தது. வெளிச்சம் வேண்டி குழந்தைகள் உரத்து அழுதார்கள், களைப்படைந்த வயதானவர்கள் படிகளில் தடுமாறி விழாமலிருக்கப் பாடுபட்டார்கள். இவற்றை பிரபாகரன் தனக்கும் தன்னை சுற்றியுள்ள நெருக்கமானவர்களுக்காகவும் கட்டியிருந்தார், இன்று அதன் குறுகிய வாசலினை எத்தனை பேர் மிதித்துச் செல்லுகிறார்கள் என்பதை அவர் அறிய நேர்ந்தால் தனது மரணத்துக்குப் பின் நடைபெறும் நிகழ்வுகளை எண்ணி அவரது கல்லறையே சுழலும்.

இங்கேயும் கனமான கொன்கிரீட் சுவர்கள் மற்றும் குண்டு துளைக்காத கதவுகள் உள்ளன. இந்த கட்டடத்துக்குள் பிரபாகரன் நேராகவே வாகனம் ஓட்டிச் செல்வதற்கு வசதியாக ஒரு அடித்தள வாகனத் தரிப்பிடம் மற்றும் ஒரு கோடைகால வாசஸ்தலம் என்பனவும் உள்ளன. அதன் உள்ளே ஒரு துப்பாக்கி சுடும் பயிற்சி இடம், மெய்ப்பாது காவலர்கள் தங்குவதற்கான இடங்கள், மற்றும் நாய்க் கூடுகள் என்பனவும் உள்ளன. அதே கட்டடத்துள் மரணச் சடங்கு நடத்தும் ஒரு அரங்கு மற்றும் மெது ஓட்டப் பயிற்சிக்கான ஒரு பாதையும் உள்ளது.

சிங்களவர்களுக்கு மட்டும்தான் இந்த இடங்களுக்கு செல்ல அனுமதி உள்ளது என்கிற ஒரு நம்பிக்கை தமிழர்களிடையே நிலவுகிறது. இது உண்மையில்லை. இராணுவம் அப்படியான ஒரு வேறுபாட்டை செய்யவில்லை. எனினும் இங்கு வருகைதரும் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் எண்ணிக்கை, சிங்களவர்களைக் காட்டிலும் மிகக் குறைவு என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். மற்றும் எல்லா விளம்பரப் பலகைகளும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே மிளிருகின்றன - முல்லைத்தீவு என்கிற பெயர் கூட.

எல்.ரீ.ரீ.ஈ யின் நீச்சல் குளத்தை பார்வையிடச் செல்வதற்கு முன்னர் ஒரு வயதான மனிதர் உரத்த குரலில் எதையோ முறையிட்டிருந்தார். வாகனங்கள் எல்லாம் வாசலுக்கு முன்னால் நிறுத்தப்படுவதால், மக்கள் இறங்கி நீண்டதூரம் நடந்து போகும்படி கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். பதுங்குகுழிக்குள் மேலும் கீழும் இறங்கி அவர்கள் ஏற்கனவே களைப்படைந்துள்ளார்கள். சில நொடிகளுக்கு பின்னர் பிரபாகரன் ஒருகாலத்தில் மூழ்கி எழுந்த அந்த நீச்சல் குளத்தை பார்த்து அவர்கள் ஆச்சரியப் பெருமூச்சு விட்டார்கள். அது 83 அடி நீளமும் 22 அடி ஆழத்தையும் கொண்டிருந்தது.

காலியில் இருந்து வந்திருந்த ஒரு வயதான பெண்மணி தனது பேருந்தை நோக்கி மெதுவாக நடந்து போகையில், இந்தப் பயணம் இவ்வளவு கடினமாக இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டார். ஆனால் தான் கட்டாயம் வரத்தான் வேண்டும் என்று அவர் சொன்னார். அவரது கிராமத்திலிருந்த அநேக மனிதர்கள் எல்.ரீ.ரீ.ஈ யுடன் சண்டையிட்டு மடிந்துள்ளார்கள், என்ன நடந்தது என்பதை எப்போதாவது அறிந்து கொள்வதற்கு இதுதான் ஒரு நெருங்கிய வாய்ப்பு என்றார்.


இந்த சுற்றுலாவின் போது சூசையின் வீட்டுக்கான ஒரு விஜயமும் இடம்பெற்றிருந்தது. சில இரகசிய வழிகளை தவிர வேறு விசேடம் எதுவும் அங்கிருக்கவில்லை (அவரது உடைகள் உள்ள அலுமாரிக்குள் இருந்து ஒரு வெளியேறும் சுரங்க வழி உட்பட). மற்றும் அவரது தோட்டத்தில் உள்ள ஆழமான குழியொன்றில் 50 கிலோ தங்கம் இருந்ததாம். “இனி அந்த தங்கத்துக்கு என்ன நடந்தது என்று என்னைக் கேட்க வேண்டாம்” என்று அந்த இராணுவ வழிகாட்டி சொன்னார்... அவர்கள் அதை எடுத்தபோது நானும் உடனிருந்தேன், ஆனால் அவை இப்போது எங்கே என்று எனக்கு எதுவும் தெரியா...

அந்த பயணத்தில் மிகவும் குடல் கலக்கும் பகுதியாக இருந்தது இறுதிப் பயணம் நடந்த பாதை. ஷெல்களும் குண்டுகளும் மாரியாய் பொழிந்து வீடுகளையும் வெளிகளையும் அழித்து இயற்கையை சூறையாடிய அந்தக் காட்சி, எரிந்து கருமையான மரங்கள், மெலிந்த கால்நடைகள், மற்றும் உடைந்த வாகனக் குவியல்கள் என்று பயங்கரமாக காட்சியளித்தன. அங்கே ஒவ்வொரு மைலுக்கும் இடையே முற்றான அழிவு தெரிந்தது.

அந்தப் பிரதேசமே தீண்டப்படாத ஒன்றாக இருந்தது, ஆனால் யுத்தம் நடந்த அந்த இருண்ட நாட்களில் இருந்து இப்போது சுற்றுலா பிரதேசமாக தளிர்விடுகிறது. இன்னும் கண்ணிவெடி அகற்றல், மீள்கட்டமைப்பு, மீள்குடியேற்றம் மற்றும் தீவிரமான உளவியல் - சமூக சேவை உதவிகள் என்று அநேக வேலைகள் செய்வதற்காக உள்ளன.

# புலம்பெயர்ந்துள்ள தமிழர்களால் இலங்கை மீது பொருளாதாரப் போர்

## அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு



(கொழும்பு)
புலிகள் தோற்கடிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இலங்கை தற்போது பொருளாதாரப் போரை எதிர்கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான இலங்கை இராணுவத்தின் பாதுகாப்புக் கருத்தரங்கில் கலந்கொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு கூறியுள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மீதான இந்தப் பொருளாதாரப் போரை, வெளிநாடுகளில் உள்ள, பெரும்பாலும் புலம்பெயர் தமிழர்களால் உருவாக்கப்பட்ட குழுக்களே மேற்கொண்டு வருகின்றன.

புலம்பெயர் குழுக்கள் இலங்கையின் பொருளாதாரத்தை இலக்கு வைத்து, சுற்றுலாப் பயணிகளைப் புறக்கணிக்குமாறு வற்புறுத்துகின்றன.

வெளிநாட்டு தீர்வு ஒன்றுக்காக இலங்கையின பிரச்சினையை அனைதுலக மயப்படுத்தப்படுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்து கவலை அடைகின்றோம். தேசியப் பிரச்சினைக்கு இலங்கை நாடாளுமன்றத்தின் ஊடாக உள்நாட்டுத் தீர்வு ஒன்று எட்டப்படும்.

வடக்கிலிருந்து படையினரை முற்றாக வெளியேற்ற வேண்டும் என்று விடுக்கப்படும் கோரிக்கைகளை ஏற்க முடியாது. அதற்குப் பதிலாக, வடக்கில் நிலை கொண்டுள்ள படையினரின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.




நாட்டில் புதிதாக பதிவு செய்யப்படும் வாகனங்களிற்கு மூன்று ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட இலக்கத் தகடு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 12 வருடங்களின் பின்னர் புதிய வகை வாகன இலக்கத் தகடு அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆணைக்குழு செயற்திட்டம் சாத்தியமானது இல்லை



(கொழும்பு)
உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் தேசியசெயற்திட்ட அமுலாக்கம் சாத்தியமாகும் எனத் தாம் கருதவில்லை என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரைகளை அரசாங்கம் ஒருபோதும் விரும்பவில்லை.

சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்தும் நோக்கிலேயே இந்த ஆணைக் குழு நிறுவப்பட்டது.

வடக்கு இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளதாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கில் இராணுவத்தின் பிரசன்னத்தைக் குறைகக தேசியசெயற்திட்டங்களை அமைக்க வேணடிய அவசியமில்லை, தேவை என்றால் உடனடியாகக் குறைக்கமுடியும்.

நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுக்காது அவற்றுக்கு கால அவகாசம்கோருவது பொருத்தமற்றது.

ஜெனிவா பிரதிநிதிகளை திருப்திப்படுத்தும் நோக்கில் நாட்டை ஆட்சி செய்ய முடியாது அதில் தமக்கு உடன்பாடு கிடையாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 63 பேர் பிணையில் விடுதலை

சட்டவிரோதமான முறையில் படகில் அவுஸ்ரேலியா செலல முயற்சித்தபோது சிலாபம் பரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட 63 பேரையுமு தலைக்கு 10 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்வதாக கொழும்பு பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலி நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

இதனைத் தவிர மாதத் தின இறுதி ஞாயிறு தோறும் காலை 9 மணி முதல் 12 மணி வரையில் கையொப்பமிட வேண்டும் எனவும் உத்தரவிட்டார். இந்த ஆட்கடத்தலின் சூத்திரதாரிகள் எனச் சந்தேகிக்கப்படும் நால்வரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். இந்த வழக்கு எதிர்வரும் நவம்பர் 09 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

# புதையல் தோண்டிய ஏழு பேர் கைது



(கொழும்பு)
வெலிக்கந்தை, குருலுபெந்த பிரதேசத்தில் புதையல் தோண்டத் தயாரான இராணுவச் சிப்பாய் ஒருவர் உள்ளிட்ட ஏழு பேரை வெலிக்கந்த பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இராணுவச் சிப்பாய் திபுலாகல பிரதேசத்தில் வசித்து வருபவர் எனவும், ஏனையவர் குருணாகல், பொத்துஹெர, ஆனமடுவ, ஹோமாகம பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவர்களிடமிருந்து புதையல் தோண்ட பயன்படுத்தப்படும் உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# கொழும்பு - யாழ் சேவையில் ஈடுபடும் 50 பேருந்துகளுக்கு அனுமதி இல்லை

(கொழும்பு)
கொழும்பிலிருந்து யாழுக்கு 50 தனியார் பஸ்கள் அனுமதிப்பத்திரமின்றி போக்குவரத்தில் ஈடுபடுவதாக . தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் இவ்வாறான 70 பஸ்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததாக ஆணைக்குழுவின் தலைவர் ரோஷன் குணவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது அனுமதிப் பத்திரமின்றி போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களின் எண்ணிக்கை 50 ஆக குறைவடைந்துள்ளது.

அனுமதிப்பத்திரமின்றி போக்குவரத்தில் ஈடுபடுவதை தடுப்பதற்கான அமைச்சரவைப் பத்திரமொன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து அனுமதிப்பத்திரமின்றி போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அத்துடன் இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அனுமதிப்பத்திரம் இன்றி போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு இரண்டரை இலட்சம் ரூபா அபராதமும் இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நுகர்வோர் அதிகாரசபை முற்றுகை 6 மாதத்தில் 600 இலட்சம் வருமானம்

(கொழும்பு)
நுகர்வோர் அதிகார சபை 2012 ஜனவரி மாதம் முதல் ஜுலை 31 ஆம் திகதி வரையிலான ஆறு மாத காலப் பகுதியில் நாட்டின் பிரதான நகரங்களில் மேற்கொண்ட திடீர் முற்றுகைகள் மூலம் 600 இலட்சம் ரூபாவை வருமானமாக பெற்றுள்ளது.

இக்கால பகுதியில் சுமார் 20070 திடீர் முற்றுகைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் குறிப்பிட்ட கடை உரிமையாளர்களிடமிருந்து அபராதமாகவே 600 இலட்சம் பெறப்பட்டதாக கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சு தெரிவிக்கின்றது.

கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோவின் பணிப்புரையின் பேரில் கொழும்பு -கண்டி- கம்பஹா-குருநாகல்-மாத்தளை -புத்தளம் ஆகிய பிரதான மாவட்டங்களிலேயே நுகர்வோர் அதிகார சபையினால் இந்த திடீர் முற்றுகைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதிக விலைக்கு பொருட்களை விற்றல்-கட்டுப்பாட்டு விலை காட்சிக்கு வைக்கப்படாமை, பொருட்களை பதுக்கி வைத்தல், காலவதியான பொருட்களை விற்பனை செய்தல் போன்ற குற்றச்சாட்டின் பேரிலேயே மேற்படி கடை உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும் அமைச்சு மேலும் தெரிவிக்கிறது.

# ஹெலிகொப்டர் பித்து



(கொழும்பு)
அரசாங்கத்தற்கு ஹெலிகொப்டர் பித்துபிடித்துள்ளதாகவும் தேர்தல் பிரசாரங்களுக்கு முனெப்போதுமில்லாத வகையில் அரச வளங்கள் துஷபிரயோகம் செய்யப்படுவதாகவும் ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினரான கரு ஜயசூரிய கூறியுள்ளார்.

பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் போன்று குறுகிய தூரப்பயணங்களுக்குகூட அவர்கள் ஹெலிகொப்டர்களை பயன்படுத்துகின்றனர்.

வெளிநாட்டு கடன்கள் மூலம் மேலும் 14 ஹெலிகொப்டர்களை அரசாங்கம் வாங்கவுள்ளது. யுத்தம முடிந்த நிலையில்லை. இது பொதுச்சொத்தை விரயமாக்கும் நடவடிக்கையாகும். யுத்தத்தின் பின்னர் இவ்வளவு அதிக எண்ணிககையான ஹெலிகொபடர்களை வாங்குவது அவசியமா? சுற்றுலாத்துறை தேவைக்காக அரசாங்கம் ஹெலிகொப்டர்களை வாங்குகிறது என்பதை மக்கள் நம்பத் தயாரில்லை.

17 ஆவது திருத்தச் சட்டம் இல்லாத நிலையில் நீதியான, சுதந்திரமான தேர்தலை உத்தரவாதப்படுத்த முடியாது.

நீதியான சுதந்திரமான தேர்தலுக்கு சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு அவசியமாகும். தற்போதைய அரசாங்கத்தில் தேர்தல் திகதியை நியமிப்பவர் தேர்தல்கள் ஆணையாளர் அல்லர், சோதிடர்களே இத்திகதிகளை நியமிக்கின்றனர் என அவர் மேலும் தெரிவிததார்.

# நீதித்துறை நடவடிக்கை நாடாளுமன்றில் பேச முடியாது

(கொழும்பு)
நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின்படி, நீதிதுறை அதிகாரியொருவரின் நடத்தை குறித்து நாடாளுமன்றத்தில் பேச முடியாது என அமைச்சர் றிஷாட் பதியுதீனை அரசாங்கத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டார எச்சரித்தார்.

மன்னார் மாவட்ட நீதிபதி குறித்து அமைச்சர் றிஷாட் பதியுதீன் உரையாற்றியபோது சபைகசு ஜனக பண்டார தலைமை தாங்கினார். ஜனக பண்டார முன்னாள் நீதிபதியாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சரை நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டார பல தடவை எச்சரித்தார். எனினும் தான் நீதித்துறை அதிகாரிகளை மதிப்பதாக அமைச்சர் கூறினார். ஆனால், எந்தவொரு நபரும் தீர்ப்பொன்று குறித்து திருப்தியடையாவிட்டால் அதைவிட உயர்ந்த நீதிமன்றத்திடம் மேன்முறையீடு செய்யலாம் என அவர் கூறினார்.

மன்னார் சம்பவம் குறிதது அமைச்சர் பேசிய அனைத்தையும் ஹன்சார்ட்டிலிருந்து நீக்குவதாக சபைக்குத் தலைமை தாங்கிய ஜனக பண்டார அறிவித்தார்.

# மக்கள் மீது அக்கறையுடையோரே பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்

## – சாவகச்சேரி நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் –



(சாவகச்சேரி)

மக்கள் மீது அக்கறை கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்தோடு செயற்பட்டு வரும் அரசியல்வாதிகளினால் மட்டுமே மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க முடியும் என சாவகச்சேரி நகரசபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் தென்மராட்சி அமைப்பாளருமான சூசைமுத்து அலெக்ஸாண்டர்(சாள்ஸ்) தெரிவித்தார். நேற்று முன்தினம் தனங்கிளப்பில் புதிதாக அமையப்பெற்ற பண்டிதமணி பாலர் பாடசாலை கட்டடத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த கால அழிவுகளில் இருந்து நாம் மீண்டெழுந்து வளமான எதிர்காலத்தினை உருவாக்கிக் கொள்வதற்கு அரசினதும் மற்றும் பிற நாட்டு நிறுவனங்களினதும் உதவிக்ள் இன்றியமையாததாகவுள்ளது.

அத்துடன் தனங்கிளப்பு பிரதேசத்தில் உள்ள குடிநீர் பிரச்சினை மற்றும் கட்டாக்காலி (மாடு) பிரச்சினை என்பனவற்றிற்கு தீர்வுகாணப்பட வேண்டும். இப்பிரதேசம் சாவகச்சேரி பிரதேச சபைக்குரியதாகையால் அவர்கள் இப்பிரச்சினை தொடர்பாக மக்களின் நலனை கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும்.

மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு அத்திவாரமாக காணப்படுவது முன்பள்ளிக் கல்வி ஆகும். ஆகவே அவர்கள் சிறந்த பெறுபேற்றை அடைவதை அவர்களின் முறையான முன்பள்ளிக்கல்வியின் ஊடாகவே பெறமுடியும். அத்துடன் இம் முன்பள்ளி சுவிஸ் நாட்டு மக்களின் வரிப்பணத்தினால் அமையப்பெற்றதால் அம்மக்களிற்கு நன்றி தெரிவிக்கின்றேன். என்றார்.

இந்நிகழ்வில் சுவிஸ் நாட்டு அதிகாரி மார்டீன் ஸ்ருடர், மற்றும் கோயிலாக்கண்டி இராணுவ பொறுப்பதிகாரி, கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர், அயல் பாடசாலை சமூகம், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (153)

# சிரமதானம்

(நெடுங்கேணி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை ஊழியர்களும் நெல்லியடிப் பொலிஸாரும் இணைந்து தமது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் மேற்கொள்ளவுள்ளனர். (12)

# ரமழான் சிந்தனை



*ஈமான் கொண்டவர்களே அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்.*

*அவனது தூதரை விசுவாசியுங்கள், அவ்வாறு செய்வீர்கள் என்றால் அவன் தனது அருளிலிருந்து இருமடங்குகளைத் தருவான்.*

*மேலும் உங்களுக்கு ஒளியொன்றையும் கொடுப்பான். அதனைக் கொண்டு நடப்டீர்கள்.*

*அல்ஹதீத்: 28*

(105)

# முரசின் இன்றைய பலன்

**(10.08.2012 – வெள்ளிக்கிழமை**

**நந்தன வருஷம் ஆடி மாதம் 26 ஆம் திகதி. அட்டமி. பிற்பகல் 2.31 வரை.**
**நட்சத்திரம் பரணி. காலை 8.30 வரை. சித்தயோகம். அட்டமி நவமி.**
**இராகுகாலம் 10.34 - 12.04 வரை. சுபநேரம் 06.04 - 7.34 வரை.**
**எமகண்டம் 3.05 - 4.35 வரை. குளிகன் காலம் 7.35 - 9.05 வரை.**
**நல்லூர் கந்தசுவாமி கார்த்திகை உற்சவம் மாலை.**

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| **மேடம்** | முயற்சி வெற்றி, சரளமான பணப்புழக்கம், பிரயாண அனுகூலம், குடும்பத்தில் மதிப்பு. |
| **ரிஷபம்** | சுலபநன்மை, சகோதரர் அனுசரணை, நினைத்தது ஈடேறும், குடும்ப சுகம். |
| **மிதுனம்** | சுலப நன்மை, மனதில் தெளிவு, காரிய சாதனைகள், கடனால் மனஉழைச்சல். |
| **கடகம்** | பதவி இலாபம், உறவினருடன் அன்னியோன்யம், இருப்பிடத்தில் போட்டி, கடன் குறையும். |
| **சிம்மம்** | ஆபரண இலாபம், காரியானுகூலம், மனக்கசப்பு தீரும், பாராட்டுக்கள் கிடைக்கும். |
| **கன்னி** | கவலைகள், உடல் ஆரோக்கியம் நன்று, ஸ்திரிகளால் தொல்லை,முட்டுக்கட்டை அகலும். |
| **துலாம்** | கடின உழைப்பு, புதிய வாழ்க்கை ஆரம்பமாகும், தொழிலில் தடங்கல், விசாரணைகள். |
| **விருச்சிகம்** | நிதானம் தேவை, கனவுகள் நனவாகும், வேலைப்பளு அதிகரிக்கும், முன்னேற்றம். |
| **தனுசு** | குடும்ப சுகம், காரிய வெற்றியும் இலாபமும், ஸ்திரிகளால் நன்மை, திடீர் தனவரவு. |
| **மகரம்** | வாழ்கையில் கஷ்டம், கல்வியில் சுறுசுறுப்பு, கடமையில் அவதானம், இடமாற்றம். |
| **கும்பம்** | பிரயாணம்,புகழ் வந்து சேரும், உடல் நல னில் கவனம், குடும்ப அன்னியோன்யம். |
| **மீனம்** | புகழ்ச்சி, தடைப்பட்டவை கிடைக்கும், பயணத்தில் கவனம், கல்வி நிமித்தம் வெளிநாடு. |

# சாரணர் கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(பருத்தித்துறை)

இலங்கை சாரணர் சங்கத்தினால் 74 ஆவது கலைக் கூறு iV குருளைச் சாரணர் உயர் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை மீரிகம லீ தசநாயக்க செயற்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கற்கை நெறிக்குரிய தகுதியாக 21 வயது பூர்த்தி அடைந்திருப்பதுடன் கலைக்கூறு ii இற்கு பின் கலைக்கூறு iv ஆம் பயிற்சிக்கு செல்வதற்கு முன் தமது குழுவில் தாமே பயிறசியளித்த குருளைச் சாரணர்கள் ஐந்து பேருக்கு வெண்கலத் தாரகையை வழங்கியிருக்க வேண்டும்

மேலும் 2012 வருடத்திற்குரிய நியமன ஆணைப் பத்திரத்தை பெற்றிருத்தல் அவசியமாகும். கற்கை நெறிக்கான கட்டணமாக 1750 ரூபா அறவிடப்படும். இதற்கான விண்ணபபப்படிவத்தை தகுதியுடையவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன் தேசிய சாரணர் தலைமையகத்திற்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 118 ஆவது கலைக்கூறு iv சாரணர் உயர் கற்கை நெறிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இதற்குரிய தகுதியாக 21 வயது பூர்த்தியடைந்துள்ளதுடன் கலைக்கூறு II இற்கு பின் கலைக்கூறு IV பயிற்சிக்கு செல்வதற்கு முன் தமது துருப்பில் பயிற்சியளித்த சாரணர்கள் 5 பேருக்கு சாரணர விருதை வழங்கியிருக்க வேண்டும். 2012 ஆம் வருடத்திற்குரிய நியமன ஆணைப்பத்திரத்தை பெற்றிருத்தல் வேண்டும.

இதற்குரிய கட்டணமாக 2 ஆயிரம் ரூபா அறவிடப்படும். உரியவர்கள் விண்ணப்பத்தை நாளை சனிக்கிழமைக்கு முன்னர் தேசிய சாரணர் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்குமாறு·தேசிய சாரணர் பயிற்சி ஆணையாளர் அறிவித்துள்ளார். (109)

# உபகரணங்கள் அன்பளிப்பு

(முல்லைத்தீவு)

செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவு மாவட்ட கிளையினால் முள்ளியவளை காட்டு விநாயகர் அறநெறிப்பாடசாலையில் கல்வி கற்று வரும் மாணவர்களின் கற்றல் விருத்திக்காக தளபாட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவு மாவட்ட நிறைவேற்று அதிகாரி சி.யதீஸ்வரன் வழங்கிவைத்தார். (04)


# பயிற்சியை பூர்த்தி செய்த 200 பேருக்கு சான்றிதழ்

(வவுனியா)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினூடாக தொழிறபயிற்சியைப் பெற்றுக்கொண்ட 200 பேருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா நகர சபை மண்டபத்தில் வைத்து சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது.

மின்னியல், ஒட்டுவேலை, தையல், தோல்வேலை, அலுமினியம் பொருத்துதல், கணினி வன்பொருள், குளிரூட்டி மற்றும் வாயூசீராக்கி திருத்துதல் போன்ற பயிற்சி நெறிகள்ள நிறைவு செய்தவர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தது.

இதன்போது வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் வடமாகாண உதவிப்பணிப்பாளர் ரி.வினோதராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (160)



பாடசாலை பிள்ளைகளுக்கு பசுப்பால் வழங்கும் திட்டத்தின் கீழ் ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலையில் இடம்பெற்ற ஆரம்ப வைபவத்தில் மாணவர்களுக்கு பால் வழங்குவதைக் காணலாம்.

(104)



வெனிசுலா, கரகாஸ் பகுதியில் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற ருபன் லிமர்டோவிற்கு உயர்ந்த மரியாதையான தென் அமெரிக்க சுதந்திர வீரரான சைமன் பொலிவர் உடைய வாளை வெனிசுலா அதிபர் ஹூகோ சாவேஸ் வழங்கினார்.

## கவலையடையும் சீனா



லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின் தடை தாண்டல் ஓட்டப் பந்தயத்திலிருந்து எதிர்பாராத நிலையில் லியு ஸியாங் வெளியேற நேரிட்டமை குறித்து சீனா கவலை வெளியிட்டுள்ளது.

இது குறித்து சீன மக்களும், விளையாட்டு இரசிகர்களும் பெரும் ஏமாற்றம் அடைந்ததாகவும் சீன ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. 110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டப் பந்தயம் ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் சீனாவின் லியு ஸியாங் திடீரென உபாதைக்குள்ளாகியிருந்தார். இதனால் எதிர்பார்த்த இலக்கை அடையமுடியாமல் லியு ஸியாங் போட்டியிலிருந்து வெளியேறியுள்ளார். 2004 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் இவர் தங்கப்பதக்கம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரேசில், மெக்சிக்கோ இறுதியில் மோதல்

ஒலிம்பிக் ஆண்கள் கால்பந்து போட்டியின் இறுதிப் போட்டியில் விளையாட பிரேசில், மெக்சிகோ அணிகள் தகுதி பெற்றன. அரையிறுதியில் தென் கொரியாவுடன் மோதிய பிரேசில் அணி 3-0 என்ற கோல் கணக்கில் அபாரமாக வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. மற்றொரு அரையிறுதியில் ஜப்பான் அணியுடன் மோதிய மெக்சிகோ 3,1 என்ற கோல் கணக்கில் வென்றது. உலக கோப்பையை 5 முறை வென்று சாதனை படைத்துள்ள பிரேசில் அணி, ஒலிம்பிக்கில் இதுவரை தங்கப் பதக்கம் வென்றதில்லை என்பதால், இறுதிப் போட்டியில் சாதிக்கும் உறுதியுடன் களமிறங்குகிறது.கால்பந்து இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இப்போட்டி நாளை இலங்கை நேரடிபடி இரவு 7.30 மணிக்கு நடைபெறும்.. தென் கொரியா , ஜப்பான் அணிகள் வெண்கலப் பதக்கத்துக்காக இன்று நள்ளிரவு மோதுகின்றன.

## அதிக பதக்கம் வென்ற பிரித்தானிய வீரர்

ஒலிம்பிக் போட்டிகளில் அதிக பதக்கங்களை வெற்றிகொண்ட பிரித்தானியர் என்ற சிறப்பை சைக்கிளோட்ட வீரர் சேர் கிறிஸ் ஹோய் பெற்றுள்ளார். லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின் சைக்கிளோட்டப் பிரிவில் தங்கப் பதக்கம் வெற்றிகொண்டதை அடுத்து அவருக்கு இந்த சிறப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. இதுவரை இவர் 6 தங்கப் பதக்கங்கள் ஒரு வெள்ளிப்பதக்கம் உள்ளடங்கலாக 7 பதக்கங்களைப் பெற்று பிரித்தானிய வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

## 200 மீற்றரில் அமெரிக்காவுக்குத் தங்கம்



லண்டன் ஒலிம்பிக் மைதானத்தில் நடைபெற்ற பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்பந்தய போட்டியில் அமெரிக்காவின் அல்லிசன் பெலிக்ஸ் 21.88 வினாடிகளில் கடந்து தங்கப் பதக்கத்தை தட்டிச்சென்றார்.

22.09 வினாடிகளில் கடந்த ஜமேக்கா வீராங்கனை செல்லி ஆண் பிராசெர் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

மூன்றாவதாக வந்த அமெரிக்கா வீராங்கனை கார்மேலிட்ட ஜெட்டர் 22-14 வினாடிகளில் பந்தய இலக்கை கடந்து வெண்கலப் பதக்கத்தை பெற்றார்.

## மீண்டும் பட்டம் வெல்வேன்

ஒலிம்பிக் பட்டத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக ரஷ்யாவின் முன்னணி கோலூன்றிப் பாய்தல் வீராங்கனை யேலேனா இசின்பயோவா தெரிவித்துள்ளார்.

2016 றியோ ஒலிம்பிக் விழாவில் தங்கப் பதக்கத்தை வெற்றிகொள்ள எதிர்பார்த்துள்ளதாக 30 வயதான யேலேனா இசின்பயேவா கூறியுள்ளார்.

பீஜிங் மற்றும் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் உலக சாதனையுடன் தங்கப் பதக்கங்களை யேலே-னா இசின்பயோவா வெற்றிகொண்டிருந்தார்.

எனினும் இம்முறை லண்டன் ஒலிம்பிக் போட்டியில் அவர் வெண்கலப் பதக்கத்தையே வெற்றிகொண்டிருந்தார்.

2013 ஆம் ஆண்டு மொஸ்கோவில் நடைபெறவுள்ள உலக சம்பியன் ஷிப் போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளதாக ஜெலேனா இசின்பயோவா தெரிவித்துள்ளார்.

# பிரிட்டனில் காணாமற்போன கமரூன் ஒலிம்பிக் வீரர்கள்

கமரூன் நாட்டைச் சேர்ந்த ஒலிம்பிக் போட்டியாளர்கள் 7 பேர் பிரிட்டனில் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் குத்துச்சண்டை போட்டியாளர்கள் ஐவரும் அடங்குகின்றனர். இவர்கள் அனைவரும் பொருளாதார காரணங்களுக்காக ஐரோப்பாவில் தங்கியிருக்க தீர்மானித்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

மகளிர் உதைபந்தாட்ட அணியைச் சேர்ந்த மாற்று கோல்காப்பாளரான ட்ருசில்லே என்கோகா முதலாவதாக காணாமல் போனதாக கமரூன் ஒலிம்பிக் குழுவினர் கூறியதாக ரோய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

பின்னர் நீச்சல் போட்டியாளர் ஒருவரும் குத்துச்சண்டை போட்டியாளர்கள் ஐவரும் ஒலிம்பிக் கிராமத்திலிருந்து காணாமல் போயுள்ளனர். முதலில்வதந்தி என கருதப்பட்ட விடயம் உண்மையாகியுள்ளது என கமரூன் விளையாட்டுத் துறை அமைச்சுக்கு அனுப்பிய கடிதமொன்றில் அந்நாட்டு ஒலிம்பிக் குழுவின் தலைவர் டேவிட் ஒஜோங் தெரிவித்துள்ளார்.

## தகுதி நிக்கம் செய்யப்பட்டவர் தங்கம் வென்று சாதனை



தடகளத்தில் 800 மீற்றர் ஓட்டத்தில் உத்வேகத்துடன் செயல்படவில்லை என்று தகுதி நீக்கம் செய்யப்பட்ட அல்ஜீரிய வீரர் தவுபிக் மக்லோபி, கிடைத்த 2ஆவது வாய்ப்பை பயன்படுத்தி 1500 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். லண்டன் ஒலிம்பிக்கில் கடந்த திங்கட்கிழமை நடந்த 800 மீற்றர் ஓட்டத்திற்கான தகுதி சுற்றில் கலந்து கொண்ட அல்ஜீரியா வீரர் தவு-பிக் மக்லோபி, பந்தய தூரத்தை முழுமையாக நிறைவு செய்யவில்லை. மெதுவாக ஓடிய அவர் பிறகு அந்த ஓட்டத்தில் இருந்து பாதியில் விலகினார். இதையடுத்து, நம்பகத் தன்மையான உண்மையான முயற்சியை வெளிப்படுத்த தவறியதாக, எஞ்சிய ஒலிம்பிக்கில் பங்கேற்பதில் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.போட்டி நடுவர்களின் பரிந்துரையின் பேரில் சர்வதேச தடகள சம்மேளனம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. இந்த முடிவுக்கு அல்ஜீரியா கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தது. அவர் வேண்டுமென்றே அவ்வாறு நடந்து கொள்ளவில்லை, அவருக்கு இடது கால் முட்டியில் காயம் ஏற்பட்டுள்ளது என்று டாக்டர்கள் அறிக்கை சமர்பித்தனர். சிகிச்சை எடுத்துக் கொண்டு அடுத்த போட்டியில் அவரால் பங்கேற்க முடியும் என்றும் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தனர். டாக்டர்களின் அறிக்கையை ஏற்றுக்கொண்ட சர்வதேச தடகள சம்மேளனம் அவரை ஒலிம்பிக்கில் தொடர அனுமதி அளித்தது. அடுத்த 24 மணி நேரத்தில் நடந்த ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டத்தில் களம் புகுந்த அவர், எல்லோரும் வியக்கும் வண்ணம் மின்னல் வேகத்தில் ஓடி தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார். தவுபிக் 3 நிமிடம் 34.08 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்தார். 2ஆவது இடத்தை பிடித்த அமெரிக்காவின் லியோனல் மான்ஸனோ (3 நிமிடம் 34.79 வினாடி) வெள்ளிப்பதக்கமும், மொரோக்கோவின் அப்டாலாதி இகுடெர் வெண்கலமும் (3 நிமிடம் 35.13 வினாடி) பெற்றனர்.



## உசைன் போல்ட் தகுதி

ஆடவருக்கான 200 மீற்றர் ஓட்டத்தின் இறுதிப் போட்டிக்கு அதிக வேக வீரரான ஜமைக்காவின் உசைன் போல்ட் தகுதி பெற்றுள்ளார்.அரையிறுதிப் போட்டியில் 20.18 செக்கன்களில் போட்டித் தூரத்தை நிறைவுசெய்த அவர் இலகுவாக இறுதி போட்டிக்கு முன்னேறினார்.

இதேவேளை மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் 20.01செக்கன்களில் போட்டித் தூரத்தைக் கடந்த உலக சாம்பியனா யோகான் பிளேக் இறுதிச் போட்டிக்கு தகுதி பெற்றார்.

இறுதிப் போட்டி இன்று இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பறிபோனது ஆஸியின் முதலிடம்

சர்வதேச ஒரு நாள் அணிகளுக்கான தரவரிசையில் அவுஸ்ரேலிய அணி முதலிடத்தை இழந்து நான்காவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. முதலிடத்தை இங்கிலாந்து அணி பிடித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி), ஒருநாள் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. முதலிடத்தில் இருந்த அவுஸ்ரேலிய கடந்த 10 ஆண்டுகளுக்கு பின்னர் 4ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணி முதலிடத்திலும், தென்னாப்ரிக்க அணி இரண்டாம் இடத்திலும், இந்திய அணி 3ஆம் இடத்திலும், இலங்கை அணி 5ஆம் இடத்திலும் உள்ளன.

மேலும் இருபது -20 தரவரிசைப் பட்டியலில் தென்னாப்பிரிக்க அணி முதலிடத்திலும் இங்கிலாந்து 2ஆம் இடத்திலும் இலங்கை அணி 3ஆவது இடத்திலும் உள்ளன.

## இலங்கை பிரீமியர் லீக்கில் கிறிஸ் கெய்ல் இல்லை

இலங்கையின் முதலாவது சிறிலங்கா பிறீமியர் லீக் தொடரின் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் அதிரடி ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்டுள்ள உடற்தகுதிப் பிரச்சினை காரணமாகவே அவர் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்துக்கெதிராக இடம்பெற்ற டெஸ்ட் தொடரின் போது அவருக்கு ஏற்பட்ட காயம் காரணமாக முழுமையான உடற்தகுதியுடன் காணப்படாத நிலையில் அவர் இத்தொடரில் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொடரில் அவர் ஊவா நெக்ஸ் அணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றவிருந்த நிலையில் அவரது இழப்பு பெரியது எனத் தெரிவித்த ஊவா நெக்ஸ் அணி நிர்வாகம், ஆனால் ஏனைய வீரர்கள் அவரின் இடத்தை நிரப்பி எஸ்.எல்.பி.எல். தொடரை வென்று கொடுப்பார்கள் என நம்பிக்கை வெளியிட்டுள்ளது. கிறிஸ் கெயில் தவிர, பாகிஸ்தானின் அப்துர் ரெக்மான், மேற்கிந்தியத் தீவுகளின் ஃபிடல் எட்வேர்ஸ் ஆகியோரும் இத்தொடரில் பங்குபற்ற மாட்டார்கள் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

# முரளி மீதான விமர்சனமே அணியை ஒன்றுபடுத்தியது

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் வைத்து இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் பந்தை எறிவதாக குற்றஞ்சாட்டப்பட்ட நிகழ்வு இலங்கை அணியை ஒற்றுமைப்படுத்தியதாகவும் போராடும் குணத்தை அணிக்குள் கொண்டு வந்ததாகவும் இலங்கைக்கு உலக கிண்ணத்தைப் பெற்றுக்கொடுத்த தலைவரான அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

1994ஆம் ஆண்டளவில் உலகக் கிண்ணம் தொடர்பான தனது கனவு ஆரம்பித்தது என தெரிவித்த அர்ஜுன ரணதுங்க, அப்போதைய கிரிக்கெட் சபை தலைவரான காமினி திசாநாயக்க உலக கிண்ணம் குறித்துத் தனக்கு நினைவுபடுத்திக் கொண்டிருப்பார் எனத் தெரிவித்தார்.

எனினும் 1995ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவில் முரளிக்கு இடம்பெற்ற சம்பவங்கள் அணியை ஒற்றுமைப்படுத்தியதோடு போராட்ட குணத்தை அதிகரித்ததாக தெரிவித்தார்.

ஓர் அணியாக போட்டிகளை வெற்றிகொள்ள தொடங்கியதும் ஏராளமான தடைகள் குறுக்கேவந்ததாக தெரிவித்த அர்ஜுன ரணதுங்க, அத்தருணங்களில் அணியை ஒற்றுமைப்படுத்தியிருக்க முடிந்திருக்கவில்லை என தெரிவித்தார்.

ஆகவே முரளியின் பந்தெறியும் குற்றச்சாட்டு அணிக்குள் நிச்சயமான ஒற்றுமையை கொண்டு வந்ததாகத் தெரிவித்தார்.

அணியில் அரவிந்த டீ சில்வா, ரொஷான் மஹாநாம, ஹஷான் திலகரட்ண, அசங்க குருசிங்க மற்றும் தான் ஆகியோர் அணியின் சிரேஷ்ட வீரர்களாக்க் காணப்பட்டதாக தெரிவித்த அர்ஜுன, அந்த 5 வீரர்களும் தன் கையின் 5 விரல்கள் என தான் அடிக்கடி குறிப்பிடுவதாகத் தெரிவித்தார்.

அணியிலுள்ள அனைவருக்கும் ஒவ்வொரு பொறுப்பு வழங்கப்பட்டு கடமைகள் பகிர்ந்தளிக்கப்பட்டதாகத் தெரிவித்த அர்ஜுன ரணதுங்க, அரவிந்த டீ சில்வாவிற்கு மாத்திரம் பொறுப்பேதும் வழங்கப்படவில்லை என தெரிவித்தார்.

அரவிந்த டீ சில்வாவை மகிழ்ச்சியாக இருக்க விட விரும்பியதாகத் தெரிவித்த அர்ஜுன ரணதுங்க, அதற்குப் பதிலாக சதங்களைத் திருப்பித் தருமாறு அவரிடம் தெரிவித்தாகத் தெரிவித்தார்.

## ஜோன் ரைட் பாய்ச்சல்

நியூஸிலாந்து அணியின் பயிற்சியாளர் பொறுப்பிலிருந்து விலகிய ஜோன் ரைட் மேற்கிந்திய அணிக்கு எதிரான தொடரில் ஒரேயொரு ஒருநாள் போட்டியில் மட்டும் வெற்றி பெற்று மீதியைத் தோற்ற நியூஸிலாந்து அணி மீது கடும் ஆத்திரமடைந்துள்ளார்.

துடுப்பாட்ட வீரர்களுக்கு பொறுப்பு வேண்டும். மைதானத்தில் ஆடும்போது செய்யும் செயல்களுக்கு வீரர்கள் பொறுப்பேற்க வேண்டும். ஆட்டமிழந்த பிறகு நான் அப்படித்தான் ஆடுவேன் நான் சரியாக செயல்படுத்தவில்லை என்ற கூற்றுக்களால் நடந்ததை மூடி மறைக்கக்கூடாது. சுய பரிசீலனையில் கடுமையாகவும் நேர்மையாகவும் இருக்கவேண்டும். அணி வீரர்களும் தலைவர் போலவே நேர்மையாக இருப்பது இன்னமும் சிறந்தது. அப்போதுதான் ஒரு மோசமான ஷொட்டை ஆடி ஆட்டமிழந்து வரும்போது ஓய்வறையில் சக வீரர்கள் நமது ஆட்டத்தை விமர்சிப்பார்கள் என்ற பயம் இருக்கும் என்றார் ஜோன் ரைட்.

## விளையாட்டு உபகரணம் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியால்யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. அதன் ஒரு கட்டமாகக்கடந்த ஆறாம் திகதி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் வைத்து ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தலைமையில் விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நிர்வாக ஒருங்கிணைப்பாளர் வசந்தன், சட்டத்தரணி ரங்கன் ஆகி யோர் வழங்கி வைத்தனர்.

# கைதடி சனசமூக நிலைய ஆண்டு நிறைவு கரப்பந்து கலைமதி, இந்து இளைஞர் இன்று பலப்பரீட்சை



கலைமதி அணி



இந்து இளைஞர்

(கைதடி)

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 57ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத்தொடரின் இறுதிப் போட்டிகள் இன்றைய தினம் இரவு 7.30 மணிக்கு மின்னொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண ரீதியாக ஒரு போட்டியும், தென்மராட்சி ரீதியாக இன்னொரு போட்டியுமாக இரண்டு பிரிவுகளாக இத்தொடர் நடத்தப்பட்டது. இதில் வடமாகாண அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முதலாவது அரையிறுதியில் ஆவரங்கால் மத்தி அணியும் புத்தூர் கலைமதி அணியும் மோதின. முதல் செட்டை ஆவரங்கால் மத்தி கைப்பற்றியபோதும் பின்னர் சுதாகரித்துக்கொண்ட கலைமதி அணி தொடர்ந்து இடம்பெற்ற மூன்று செட்களையும் வென்று 3-1 என்ற கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொறு அரையிறுதியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், அச்சுவேலி ஸ்ரார் அணியும் மோதிக்கொண்டன. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தென்மராட்சி ரீதியாக இடம்பெறவுள்ள இறுதிப் போட்டிக்கு மட்டுவில் ஐங்கரன் அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதவுள்ளன.

இன்றைய போட்டியின் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட மெய்வல்லுநர் பயிற்றுநர் கே. முகுந்தன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட பயிற்றுநர் எஸ். சதீஸ், யாழ். மாவட்ட கரப்பந்தாட்டத் தலைவர் கி. மனோகரன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி விளையாட்டு உத்தியோகத்தர் எல். அனுராகாந்தன், யாழ்ப்பாண விளையாட்டு உத்தியோகத்தர் ரி. நித்தில நாயகம், குரசாமி வித்தியாலய ஆசிரியர் எஸ். மதியழகன், யாழ். கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் எஸ். அப்புத்துரை உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டித் தொடர் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் ஒத்துழைப்புடன் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டி நிகழ்வில் சகல கரப்பந்தாட்ட இரசிகர்களையும் கலந்துகொள்ளுமாறும் போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எஸ்.பி.93)

விளையாட்டுச் செய்திகள்

## மழலைகளின் விளையாட்டு விழா

(ஆனைக்கோட்டை)

நவாலி மதிஒளி சனசமூக நிலையமும் மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடத்திய பிரசாத் ஞாபகார்த்த மதிஒளி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நவாலி மதிஒளி முன்றலில் நடைபெற்றது.

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி. உமாசுதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொது முகாமையாளர் ஜே.பி. குணரத்தினம், சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் தொகுதி அமைப்பாளர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) ஈ.பி.டி.பி. மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் க. நடராசா, அராலி இந்துக் கல்லூரி ஆசிரியர் க. பிரதீபன், யாழ். வட்டு. இந்துக்கல்லூரி ஆசிரியர் க. மோகனதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (104)

## தொடரை வென்றது மகிழ்ச்சி – டரன் சமி

நியூசிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை வென்றது மகிழ்ச்சி என மேற்கிந்தியத்தீவு அணியின் தலைவர் டரன் சமி தெரிவித்தார். மேற்கிந்தியத்தீவு அணியில் தற்போது நல்ல திற மையான வீரர்கள் பலர் உள்ளனர். இதன் மூலம் வலுவான அணியாக எமது அணி திகழ்கின்றது. இலங்கையில் இடம்பெறவுள்ள ருவென்ரி -20 கிரிக்கெட் தொடரில் கிண்ணம் வெல்வது எமது இலக்கு இதற்கான சிறந்த அணியை நாம் கொண்டுள்ளோம் என்றார்.

## கரப்பந்து இறுதிப் போட்டி விரைவில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச்சங்கம் நடாத்திய வடமாகாணக் கரப்பந்தாட்டப்போட்டியின் இறுதிப்போட்டி அடுத்த மாதம் முதற் பகுதியில் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

'ஏ','பி' என இரண்டு பிரிவுகளாக இடம்பெற்ற இப்போட்டித் தொடரில் 'ஏ' பிரிவின் இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் ஆவரங்கால் மத்திய அணியும் மோதவுள்ளன. 'பி' பிரிவின் இறுதிப் போட்டியில் நீர்வேலி ஐக்கிய அணியும் அச்சுவேலி ஸ்ரார் அணியும் மோதவுள்ளன.

இப்போட்டிகளில் வெற்றியீட்டும் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்படும் என யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தலைவர் கி.மனோகரன் தெரிவித்துள்ளார். (93)

## ஆரம்பமே அமர்க்களம்



(வவுனியா)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற ரென்னிஸ் போட்டியில் வவுனியா சைவப்பிரகாச மகாவித்தியாலய அணி சாதனை படைத்துள்ளது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான ரென்னிஸ் போட்டி அண்மையில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் வவுனியா மாவட்டம் சார்பாக முதன் முறையாக ரென்னிஸ் போட்டியில் பங்குபற்றிய சிவப்பிரகாச மகாவித்தியாலயப் பெண்கள் அணி குழுப் போட்டியில் சம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளதுடன் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றும் தகுதியையும் பெற்றுள்ளது.

வவுனியா மாவட்டம் சார்பாக முதன் முறையாக ரென்னிஸ் போட்டியில் காலடி எடுத்து வைத்துள்ள சைவப்பிரகாச மகாவித்தியாலய அணி ரென்னிஸ் போட்டிக்கான பயிற்சி ஆடுகளம் இன்றி தன்னம்பிக்கையுடன் வடமாகாணப் போட்டிகளில் பங்குகொண்டு சம்பியன் பட்டம் வென்றமை ஏனைய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளது என்றும் பாடசாலைக்கான ரென்னிஸ் கள வசதிகளைச் செய்துகொடுக்கும் பட்சத்தில் மேலும் ரென்னிஸ் போட்டியில் சாதிக்க வழிவகுக்கும் என்றும், இதனை சம்பந்தப்பட்டோர் கருத்தில் எடுத்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் விளையாட்டு ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

## தேசிய மட்ட குத்துச் சண்டை வெண்கலம் வென்று ரமேஷ் சாதனை

(டொறிங்டன்)

தேசிய மட்ட குத்துச் சண்டைப் போட்டியில் பருத்தித்துறையைச் சேர்ந்த ரஞ்சிதநாதன் ரமேஷ் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். விளையாட்டு அமைச்சினால் நடத்தப்பட்ட தேசிய மட்ட குத்துச் சண்டை போட்டி கடந்த 3,4,5ஆம் திகதிகளில் கொழும்பு டொறிங்டன் உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இதில் வடமாகாணத்தில் இருந்து ஆறு போட்டியாளர் கலந்து கொண்டதுடன் தேசிய அளவில் அதிகளவிலானோர் பங்குகொண்டனர். அல்வாய் வடக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த ரஞ்சிதநாதன் ரமேஷ் 70 - 75 கிலோ எடைப் பிரிவில் போட்டியில் பங்குகொண்டார்.



தனது திறமையை சிறப்பான முறையில் வெளிப்படுத்திய ரமேஷ் மூன்றாமிடத்தைப் பிடித்துக்கொண்டதுடன் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொர்ண்டார்.

தேசிய மட்டத்தில் வெண்கலப்பதக்கம் வென்ற ரமேஷுக்கு விளையாட்டு ஆர்வலர்கள் பலர் பாராட்டுத் தெரிவித்ததுடன் தொடர்ந்தும் திறமைகளை வெளிப்படுத்தி தேசிய மட்டத்தில் சாதனை படைக்க வேண்டும் என்றும் வாழ்த்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.தேசிய மட்டத்தில் ரமேஷ் வெண்கலப்பதக்கம் வென்றமை இளம் வீரர்கள் குத்துச்சண்டைப் போட்டியில் பங்குகொள்ளும் ஆர்வத்தை மேலும் தூண்டும் எனவும் விளையாட்டு ஆர்வலர்கள் குறிப்பிட்டனர்.(எஸ்.பி,116)

/ முதல் ஒலிம்பிக் போட்டியில் 13 நாடுகள் கலந்துகொண்டன. 2012 இந்த லண்டன் ஒலிம்பிக்கில் மொத்தம் 205 நாடுகள் கலந்து கொண்டுள்ளன.

2012 LONDON

இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை.


/ டென்னிஸ், டேபிள் டென்னிஸ், தடகளம், பளுதூக்குதல், ஹொக்கி, மல்யுத்தம் என மொத்தம் 26 விளையாட்டுகள் ஒலிம்பிக் போட்டியில் இடம்பெற்றுள்ளன.

/ தங்கம், வெள்ளி, வெண்கலம் என மொத்தம் 302 பதக்கங்கள் லண்டனில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் வழங்கப்படவுள்ளது. இதில் தடகளம் உள்பட அனைத்து விளையாட்டுகளும் அடங்கும்.

# லண்டன் ஒலிம்பிக்!

/ மாற்றுத்திறனாளிகளுக்கான பரா ஒலிம்பிக் இயக்கம் இங்கிலாந்தில் உள்ள ஸ்ட்ரோக் மேண்ட்வில் என்ற இடத்தில் தான் தொடங்கியது. 1948ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான தடகளப் போட்டிகள் முதன்முதலில் அங்குதான் நடைபெற்றன.

/ ஒலிம்பிக் போட்டிகளின் வரலாறு குறித்து இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் விதமாகவும், அவர்களை விளையாட்டுகளின் பக்கம் ஈர்க்கும் விதமாகவும் சர்வதேச அளவிலான நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. 19 நாடுகளைச் சேர்ந்த 12 மில்லியன் குழந்தைகளை இந்த நிகழ்ச்சி சென்றடைந்துள்ளது.



/ ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் ஸ்டேடியம் 80,000 பேர் அமரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை உருவாக்குவதற்காக 10,000 தொன் உருக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

/ லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகளில் புதியதாக பெண்கள் குத்துச்சண்டை சேர்க்கப்பட்டுள்ளது. இதில் குத்துச்சண்டை வீராங்கனைகள் 3 விதமான போட்டிகளில் பங்கேற்கலாம்.

/ 1908ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் முதன் முதலாக கயிறு இழுக்கும் போட்டி நடைபெற்றது. ஒலிம்பிக் போட்டியில் கயிறு இழுக்கும் விளையாட்டு அதுவே முதலும் கடைசியுமாக அமைந்துவிட்டது.


/ 1908ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் தொடக்க நாள் அணிவகுப்பில்தான் தடகள வீரர்கள் முதன்முதலாக கலந்துகொண்டனர்.

/ லண்டன் 2012 ஒலிம்பிக்போட்டிக்காக விசேடமாக புதிய ரயில் சேவை தொடங்கப்பட்டுள்ளது. "ஜாவ்லின்" என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ரயிலில் ஒரு மணி நேரத்திற்கு 25,000 பயணிகள் பயணிக்கலாம்.

# A.V.M. ராஜன்

- R.P. ராஜநாயஹம்

ஜெமினி கணேசன் சாயலில் சிவாஜி கணேசன் போல நடித்தால் எப்படி இருக்கும். அது தான் AVM ராஜன். 1963ஆம் ஆண்டு எஸ்.எஸ்.



ஆர் - விஜயகுமாரி - ரங்காராவ் - எம்.ஆர். ராதா நடித்த "நானும் ஒரு பெண்" படத்தில் அறிமுகமானவர் ஏ.வி.எம் ராஜன். அவரிடம் ஒரு ஸ்டைல் இருந்தது. தமிழ் திரை கண்ட பட்டதாரி நடிகர்களில் ஒருவர். இசை வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவர்.

பி.யு.சின்னப்பா, ஜெமினிகணேசன், ஏ.வி.எம் ராஜன் மூவரும் புதுக்கோட்டைக்காரர்கள்!

திருமணமாகி குழந்தை உள்ள நிலையிலேயே கடுமையாகப் போராடி திரைக் கதாநாயகனாக வாய்ப்பைப் பெறமுடிந்தது. தனக்கு முன் சினிமாவில் நடித்து, நானும் ஒரு பெண் படத்தில் இவர் "ஏமாறச் சொன்னது நானோ?" எனப் பாடி கிண்டல் செய்த புஷ்பலதாவை இரண்டாவதாக திருமணம் செய்தார்.

பெயர் சொல்லும்படியாக 1965இல் "என்னதான் முடிவு?" "வீர அபிமன்யு" படங்கள். 1966இல் பாலச்சந்தர் படம் "மேஜர் சந்திரகாந்த்" படத்தில் ரஜினிகாந்த் என்ற பாத்திரம். இந்தப் பெயரைத்தான் பின்னால் சிவாஜிராவுக்கு "அபூர்வ ராகங்கள்" படத்தில் அறிமுகப்படுத்தியபோது பாலச்சந்தர் வைத்தார்.

மேஜர் சந்திரகாந்தில் "நேற்று நீ சின்ன பப்பா! இன்று நீ அப்பப்பா!" இந்தப் பாடல் ஏ.வி.எம். ராஜன் - ஜெயலலிதாவுக்கு.

1967ஆல் "பந்தயம்" படம் - ஜெமினியுடன் இணைந்து நடித்தார் - இந்தப் படம் ஏ.வி.எம். ராஜனை உயர்த்தியது. பூரிப்பான அந்த முகத்துடன் "இரவு நடக்கின்றது என் இதயம் மலர்கின்றது." பாடலுக்கு அவர் நடிப்பு ரொம்ப பிரமாதமாக இருக்கும்.

"துணைவன்" ஸ்ரீதேவி குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான தேவர் படம். அதில் கதாநாயகன் ராஜன். முருகபக்தன். சிவாஜியுடன் "கலாட்டா கல்யாணம்", "தில்லானா மோகனாம்பாள்". எம்ஜிஆருடன் "எங்கள் தங்கம்"

துலாபாரம் படத்தில் - "பொங்கல் பிறந்தாலும் தீபம் எரிந்தாலும் ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே" பால்குடம் படத்தில் எஸ்.பி.பி யின் "மல்லிகைப் பூ வாங்கி வந்தேன் புன்னகையின் நினைவாக"


ஜெயலலிதாவுடன் அனாதை ஆனந்தன், புட்டண்ணாவின் இருளும் ஒளியும். ரவிச்சந்திரனுடன் "ஏன்", "ஜீவநாடி", புகுந்த வீடு.

ஜெய்சங்கருடன் "மன்னிப்பு" "தாய்க்கு ஒரு பிள்ளை". இந்தப் படங்களில் யார் பெயரை முதலில் போடுவது என்ற ஈகோ பிரச்சினை. டைட்டிலில் இருவர் பெயரையும் போடவில்லை.

"திருமகள்" என்று ஒரு படம். ஜெமினி, பத்மினி, லட்சுமி யெல்லாம் நடித்த படம். அதில் "உள்ளங்கள் பல விதம், எண்ணங்கள் ஆயிரம், உறவுகள் வளர்வதற்கு மனம் தானே காரணம்" பாட்டில் சிவகுமார் காலை மாற்றி மாற்றி ஸ்டெப் வைப்பது பார்க்க சகிக்காது. ஆனால் ராஜன் சரணத்தில் ஸ்டைலாக நடந்தவாறே "அழித்தால் அழிவதில்லை ஆனந்த நினைவுகளே" என்ற வரியில் தியேட்டரில் அப்ளாஸ் தூள் பறக்கும்.

ஏ.எம்.ராஜா மீண்டும் பாட வந்த போது ஜிக்கியுடன் ஜெமினிக்கு ரங்கராட்டினத்தில் "முத்தாரமே! உன் ஊடல் என்னவோ." பாடினார்.

ஏவிஎம் ராஜனுக்கு புகுந்த வீட்டில் "செந்தா மரையே! செந்தேனிதழே! பொன்னோவியமே! கண்ணே வருக!" வீட்டு மாப்பிள்ளையில் "ராசி நல்ல ராசி! உன்னை மாலையிட்ட மன்னன் சுகவாசி" "மலரே நீ என் மலரல்ல! நான் உன் வண்டல்ல" தாய்க்கு ஒரு பிள்ளையில் "சின்னக்கண்ணனே! நீ பிள்ளையென நான் தந்தையென ஒரு பந்தம் வந்தது நெஞ்சில் பாசம் வந்தது." என்று பல பாடல்கள் ஏ.எம்.ராஜா தான் பாடினார்.




படங்களில் பேதி மருந்து சாப்பிட்டு விட்டது போல் ஒரு முழி. சமயத்தில் திருட்டு முழி போலவே இருக்கும். ஒரு நிமிஷம் 'two toilet' போய் விட்டு வந்தால் சிரமம் குறைந்து விடும் என்பது போல ஒரு restlessness. சிரிப்பதற்கே கூட தேவையேயில்லாமல் ரொம்பத்தான் டென்ஷன் ஆவார். ஏதோ மலையை தூக்கி சுமப்பது போல, இந்த ரோலை நான் ரொம்ப பிரயாசையுடன் செய்கிறேனாக்கும் என்ற தோரணை. இரசிகப்பெருமக்களுக்கு ஆயாசமும் சலிப்பும் வருமா வராதா?

மார்க்கெட் போன பின் ஏ.வி.எம் ராஜனுக்கு தயாரிப்பாளர் ஆக ஆசை வந்தது. கே பாலாஜி ஸ்டைலில் நாம் சிவாஜி படங்களின் தயாரிப்பாளராக ஜெயிப்போமே என்று. அது தான் சனியன்.


"லாரி டிரைவர் ராஜாக்கண்ணு" படம். சிவாஜி கதாநாயகன். சொந்தப்படம் எடுத்துக் கடனாளியாகி சொத்தெல்லாம் கரைந்து போய்விட்டது.

புஷ்பலதா அப்போது படங்களில் துணை நடிகையாகி தேங்காய் சீனிவாசனுக்கும், மேஜர் சுந்தரராஜனுக்கும் ஜோடியாக நடிக்க வேண்டிய நிலையாகி விட்டது. சரியாக அந்த நேரத்தில் புஷ்பலதா கேட்டார். "சாமி சாமின்னு அலைஞ்சீங்களே. இப்பவாவது இனிமேலாவது ஏசுவை நம்புறீங்களா?"

ராசுக்குட்டி ஷூட்டிங் போது மனோரமா சொன்னார். "புஷ்பலதா கிறிஸ்தவப் பெண் என்பதால் ராஜனை மாற்றி விட்டாள்."

"ஏசுவின் அடிமை" என்றே தன்னைப் பற்றி பிறகு ராஜன் சொல்லிக்கொண்டார். "ஏவிஎம் ராஜன் செத்துவிட்டான். நான் இப்போது ஏசுவின் அடிமை."

பூமித்தாய் உருவாக்கிய அதிசயங்களில் ஏரிகளும் முக்கியமானவையே. தண்ணீர் பாய்ந்து வந்து நிறைகிற வெற்றிடமோ, பள்ளமோ நாளடைவில் ஏரியாகி விடும். தண்ணீர் ஊறி மண் வழியே வெளியேறாத நிலமும், அணைக்கட்டுகளுக்குப் பின்னால் உள்ள இடங்களும்தான் ஏரிக்கு ஏற்றவை. பூமித்தட்டின் நடனமும் பனிக்கட்டி உருகுதலுமே பல ஏரிகள் ஏற்பட காரணம். படிப்படியாக பூமித்தட்டு மேலே எழும்போது அணைகள் போன்ற அமைப்புகளும், கன்னாபின்னா வென இயக்கம் ஏற்படும்போது அகன்ற, ஆழமான ஏரிகளும் உருவாகின்றன. ஆபிரிக்காவையும் ஆசியாவையும்




வெட்டியதுபோல பிரிக்கும் ரி∴ப்ட் பள்ளத்தாக்கு, பல கன்னாபின்னா ஏரிகள் அமையக் காரணமாக இருந்தது.

உதாரணம் சாக்கடல் என்றழைக்கப்படுகிற டெட் ஸீ, நயஸா ஏரி. உருகும் பனிக்கட்டிப்பாறைகள் தரையைத் தேய்த்து, சுத்தம் செய்து பள்ளங்களை உருவாக்குகின்றன. அதோடு அங்கே நிறைய வீழ்படிவுகளையும் கொண்டுவந்து சேர்த்து, ஒரு முகடு அல்லது வரப்பு போன்ற அமைப்பையும் ஏற்படுத்தி விடுகின்றன. இதனால் இயற்கை அணைக்கட்டுகள் உருவாகின்றன. வட அமெரிக்காவின் பிரமாண்ட ஏரிகளும், ஐரோப்பாவின் ஆல்பைன் ஏரிகளும் இப்படித் தோன்றியவையே.

# விழாக்கள்

| | |
|---|---|
| ஒரு வருடம் நிறைந்தால் | - காகித விழா |
| ஐந்து வருடம் நிறைந்தால் | - மர விழா |
| பத்து வருடம் நிறைந்தால் | - தகரம் அல்லது அலுமினிய விழா |
| பதினைந்து வருடம் நிறைந்தால் | - படிக விழா |
| இருபது வருடம் நிறைந்தால் | - பீங்கான் விழா |
| இருபத்தைந்து வருடம் நிறைந்தால் | - வெள்ளி விழா |
| முப்பது வருடம் நிறைந்தால் | - முத்து விழா |
| நாற்பது வருடம் நிறைந்தால் | - மாணிக்க விழா |
| ஐம்பது வருடம் நிறைந்தால் | - பொன் விழா |
| அறுபது வருடம் நிறைந்தால் | - வைர விழா |
| எழுபத்தைந்து வருடம் நிறைந்தால் | - பவள விழா |
| நூறு வருடம் நிறைந்தால் | - நூற்றாண்டு விழா |

# பூச்சாண்டி அரசியல் - 3

**- ராஜன் குறை -**


ஜெயமோகன்

நாட்டு அரசாங்கத்தை பலவீனமாக்குவதில் அந்நிய நிதிக்கு என்ன அக்கறை இருக்க முடியும்? இந்திய அரசு

இந்திய அரசும், இந்திய அரசியல் கட்சிகள் அனைத்தும் அந்நிய நிதியை பெரிதும் விரும்புகின்றன. FDI (Foreign Direct Investment) என்ற நேரடி அந்நிய மூலதனமே இந்திய பொருளாதார வளர்ச்சியின் மூல நாடி. மைக்ரோசா.:ட் அதிபர் பில்கேட்ஸ் இந்தியா வந்த போது ஒரு அரசருக்கு உரிய மரியாதையும், கவனமும் அவருக்கு தரப்படவில்லையா? பாரதிய ஜனதா கட்சியின் கர்நாடக முதல்வர் எடியூரப்பா அந்நிய முதலீடு பெருமளவில் கிடைக்க தமிழக கோவில்கள் பலவற்றில் விசேஷ பூஜைகளும், அர்ச்சனைகளும் செய்யவில்லையா? சி.பி.ஐ(எம்) முதலமைச்சர் புத்ததேவ் அந்நிய முதலீட்டினை பெற கடுந்தவம் புரியவில்லையா? எல்லா அரசியல் கட்சிகளுமே வளர்ச்சிக்கு முதலீடு தேவை, முதலீடு பெருமளவில் வேண்டுமென்றால் அது அந்நிய முதலீடாக இருந்தால்தான் சாத்தியம் என்பதில் முழு உடன்பாட்டுடன் இயங்கி வருகின்றன. அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில் பொருளாதார வளர்ச்சி மற்றும் வளர்ச்சி சார்ந்த பிம்பம் ஒரு புறம், கையூட்டு கமிஷன்கள் ஒருபுறம் என்ற இருவித கவர்ச்சிகள் அனைவரையும் இயக்குகின்றன.

இப்படிப்பட்ட நிலையில் தாங்கள் முதலீடு செய்யும் நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை குறைப்பதில், அந்த வலுவாக இருந்தால்தானே அவர்கள் தொழில் இங்கு நன்றாக நடக்கும்? அவர்கள் முதலுக்கு நல்ல இலாபம் கிடைக்கும்?

ஒருவேளை ஜெயமோகன் சொல்வதை இப்படி எடுத்துக் கொள்வோம். அந்நிய நிதி மூலங்கள் இந்திய அரசினை கைக்குள் வைத்திருக்க பல்வேறு அதிருப்திகளை வளர்த்து வைத்துக்கொள்ள விரும்புகின்றன, தேவைப்பட்டால் அவற்றை தூண்டிவிட்டு பெரிதாக்க விரும்புகின்றன என்கிறார் ஜெயமோகன். நைஜீரியா விஷயத்தில் இதை குறிப்பிட்டுள்ளார். வேண்டுமென்றால் பெரிதுபடுத்திக்கொள்ள வசதியாக அதிருப்திகளுக்கு கருத்தியல் அடிப்படைகளை உருவாக்கி வைத்துக்கொள்ள வேண்டுமென்பதால் இந்த அந்நிய நிதிகள் அறிவாளிகளையும், கல்வியாளர்களையும் வந்தடைகின்றன என்று அவர் நினைக்கிறார். அவர்களும் ஆதரவு அளிப்பவர்களுக்கு விசுவாசமாக இருக்க விரும்பவதால் கருத்தியல் அடிப்படைகளை உருவாக்கித் தருகின்றனர் என்பதே அவர் வாதம்.

இது எவ்வளவு அடிப்படையற்ற கற்பனை என்பதை புரிந்துகொள்ள அந்நிய நிதி என்பதை அளவு ரீதியாக முதலில் கவனித்தால் போதும். இந்திய பட்ஜெட்டில் வரவு செலவு கணக்கு காட்டப்படும் பணம் பதினாலு இலட்சம் கோடி. ஒரு ஆண்டில் இந்தியாவில் முதலீடு செய்யப்படும் அந்நிய நிதி குத்துமதிப்பாக 12,500 கோடி முதல் 15,000 கோடி ரூபா என்று கூகுள் தகவல்களிலிருந்து சொல்ல முடிகிறது. ஒரு ஆண்டில் மட்டும். ஒரு தொழிற்சாலை தொடங்கவே முந்நூறு கோடி, ஐநூறு கோடி என்று செலவாகிறது. தமிழ் சினிமாவே கூட நூறு கோடி முதலீட்டில் எடுக்கத் துணிகிறார்கள். அரசியல்வாதிகள் பெறும் கையூட்டுக்களைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. அவர்களது சொத்துக்களெல்லாம் பிரமிப்பூட்டும் எல்லைகளில் இருக்கின்றன. இதெல்லாம் அந்நிய நிதியின் உள்வரத்து தோற்றுவித்த பொருளாதார நடவடிக்கைகளின் விளைவு என்று கூறப்படுகிறது. இப்படி ஆயிரக்கணக்கான கோடிகளில் வரும் நிதிக்கும், ∴போர்ட் ∴பவுண்டேஷன் வழங்கும் நிதிக்கும் என்ன ஒப்பீடு? அரசு சாரா நிறுவனங்கள் (NGO) எவ்வளவு கோடிகள் பெறுகின்றன? எனக்குத் தெரிந்து ஒரு தனிப்பட்ட நபர் அல்லது அமைப்பு பெறும் நிதி என்பது இலட்சங்களில்தான் இருக்கிறது. அப்படியே ஒரு அமைப்பு சாரா நிறுவனத்திற்கு சில கோடிகள் கிடைத்தாலும் அவர்கள் அதை ஆயிரக்கணக்கானோருக்கு பகிர்ந்தளிக்க நேர்கிறது. ஏதோ ஒரு சில பேர் கார்களில் போய்விட்டு வருவதை பார்த்துவிட்டு "ஆஹா, அயல்நாட்டு பணம், அயல்நாட்டு பணம்" என்று கூவுபவர்கள் ஒரு அரசியல் கட்சியின் மாவட்டச் செயலாளர் வகை வகையான பத்து கார்கள் முன்னும் பின்னும் வர பவனி வருவதை என்னவென்று சொல்கிறார்கள் என்று புரியவில்லை.

எதற்காக இந்த ஒப்பீடு என்றால் ஆயிரக்கணக்கான கோடிகளை நேரடியாக முதலீடு செய்து இந்தியாவின் முதலாளி வர்க்கம், அதிகார வர்க்கம், அரசியல்வாதிகள் வர்க்கம் எல்லோருடனும் நேரடியாக பேரத்தில் இருக்கும் அந்நிய நிதி மூலங்கள் அவர்கள் ஒத்துழைப்புடன் இந்தியாவில் எதை வேண்டுமானாலும் நேரடியாக செய்துகொள்ளலாம். குறிப்பிட்ட கட்சி ஒத்துழைக்கவில்லையென்றால் அதை கவிழ்த்துவிட்டு ஒத்துழைக்கும் கட்சியின் ஆட்சியை கொண்டு வரலாம். (சுப்பிரமணியம் சுவாமி சொல்வதை விகடனில் படித்தீர்களா? நினைவிலிருந்து சொல்கிறேன்: "சோனியா பிஜேபி ஆட்சியை கவுத்து எனக்கு ஆட்சியை பிடிச்சுகொடுங்கோன்னு கேட்டா(ர்)! ஜெயலலிதாவும் கேட்டா(ர்)! நான் டீ பார்ட்டி வைச்சேன்". எவ்வளவு வெளிப்படையாக பேசுகிறார் இந்த மனிதர்) எந்த ஆட்சிக்கும் தலைவலி தர எந்த பகுதியிலும் எந்த ஒரு குட்டி அரசியல்வாதியையும் தூண்டிவிட்டு பிரச்சினை செய்யலாம். தேவைப்பட்டால் ஆயுதங்களை கூட தருவித்துக் கொடுக்கலாம். அந்நிய நிதி என்பது ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான கோடிகளின் விளையாட்டு என்பதால் அது பாதாளம் வரை நேரடியாகப் பாயும்.

இப்படியிருக்க அரசை கட்டுக்குள் வைத்திருக்க ஆய்வாளர்களுக்கு சுண்டைக்காய் பணம் கொடுத்து, அவர்கள் ஆய்வை திசை மாற்றி, கருத்தியலை உருவாக்கி, அதை ஊடகத்துள் செலுத்தி, பின்னர் இந்திய அரசிற்கு சிக்கலை ஏற்படுத்தும் திட்டம் கொக்கு தலையில் வெண்ணெய் வைத்து பிடிக்கும் சாமர்த்தியமாக இருக்கிறது. என்னவோ அரசியல்வாதிகளும், அதிகார வர்க்கமும், தேசிய முதலாளிகளும் இந்த தேசத்தை பாதுகாக்க துடிப்பது போலவும், அறிவுஜீவிகள் மட்டுமே காசு வாங்கிக்கொண்டு காட்டிக் கொடுப்பது போலவும் ஜெயமோகனின் பூச்சாண்டி அரசியல் காமெடி ∴பிலிம் காட்டுகிறது. உண்மை என்னவென்றால் தேசமென்பது மக்கள் என்று கொண்டால் அறிவு ஜீவிகள் மட்டுமே அவர்கள் நலனை பேச முனைகிறார்கள். அதிகாரப் பரவலில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை பேசுகிறார்கள். வறியவர்கள் சந்திக்கும் அநீதியின் கோர தாண்டவத்தை மனசாட்சியின் குரலாக ஒலிக்கிறார்கள். தேசத்தை அந்நிய நிதி மூலங்களுடன் சேர்ந்து சுரண்டும் கும்பலுக்கு அது பிடிக்காததால் இவர்களை தேச விரோதிகள் என்கின்றன. ஜெயமோகனின் இடம் என்ன என்பதை அவர் தீர்மானிக்கட்டும். வாசகர்கள் முதலில் என்ன நடக்கிறது என்பதில் தெளிவு பெற வேண்டும்.

**(தொடரும்)**

# திருட்டுக்கு சன்மானம்!



நியூயோர்க் நகரில் பிரபலமான நீதிபதியாகப் பணியாற்றிய ஃபியாரெல்லா லா கார்டியா என்பவர் வித்தியாசமான தீர்ப்புகள் வழங்கி மக்களைக் கவர்ந்தவர். அவரை எல்லோரும் "லிட்டில் ஃபிளவர்" என்று பிரியமாக அழைப்பார்கள்.

ஒருநாள் இவர் முன்னே ஓர் ஏழைக் கிழவனைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். ஒரு கடையில் ரொட்டித் துண்டு திருடியதாகப் பொலிஸ் அவரைப் பிடித்து வந்திருந்தது.

"ஐயா, எனக்குப் பசி தாங்கவில்லை. அதனால்தான் ரொட்டி திருடினேன்..." என்றார் அந்தக் கிழவர்.

"நீங்கள் எதற்காகத் திருடினாலும் குற்றம் குற்றம்தான். மன்னிப்பு கிடையாது. உங்களுக்குப் பத்து டொலர் அபராதம்..." என்று தீர்ப்பளித்த நீதிபதி, "உங்களிடம் காசு இல்லை என்பது தெரியும். ஆகவே நானே அதைக் கட்டுகிறேன்.." என்று சொல்லி தன் கோட்டுப் பையிலிருந்து பத்து டொலர் எடுத்துக் நீதிமன்ற குமாஸ்தாவிடம் கொடுத்தார்.

அத்துடன் அவர் நிற்கவில்லை. "பசிக் கொடுமை தாங்காமல் ஒருவர் ரொட்டி திருடினார் என்றால் இந்த ஊருக்கு அவமானம். ஆகவே இங்கே நீதிமன்றத்தில் கூடியிருக்கும் ஒவ்வொருவருக்கும் அரை டொலர் அபராதம் விதிக்கிறேன்..." என்றார்.

அந்தத் தீர்ப்பின்படி கோர்ட் குமாஸ்தா தன் தொப்பியை எல்லோரிடமும் நீட்ட ஒவ்வொருவரும் அரை டொலர் போட்டார்கள். சேர்ந்த பணத்தை "இந்தாருங்கள்..." என்று அந்தக் கிழவரிடம் கொடுத்தார் நீதிபதி லிட்டில் ஃபிளவர்!

தண்டனையை எதிர்பார்த்துவந்த கிழவர் நாற்பத்தேழு டொலருடன் குஷியாக வெளியேறினார்.

- "நாலு மூலை" என்ற நூலில் ராகி.ரங்கராஜன்

# எண்ணெய் எடுக்க பருப்பு!



குவார் என்ற ஒரு வகை பருப்பு இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் நிறைய விளைகிறது. ஏழை விவசாயிகளால் தம் கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தவே இது பயிரிடப்பட்டு வந்தது. இந்த குவார் பருப்புக்கு இன்று உலகச் சந்தையில் பெரும் கிராக்கி உண்டாகியிருக்கிறது.

காரணம், ஏதோ இது அருமையான உணவு என்று எண்ணி உலகம் வாங்குகிறது என்று நினைத்தீர்களானால் அது பெரும் தவறாகும். அமெரிக்காவில் கடந்த பத்தாண்டுகளில் நிலத்தடி எண்ணெயை வெளிக் கொணர முயற்சி செய்யத் தொடங்கி இருக்கிறார்கள். இந்த எண்ணெய் மேற்காசிய எண்ணெய்க் கிணறுகள் போலவோ, கிழக்காபிரிக்காவின் கிணறுகள் போலவோ நேரடியாக நிலத்தடியில் இருந்து குழாய்கள் மூலம் வெளியேற்றப்படக் கூடியதல்ல. மாறாக நிலத்தை வெடித்துப் பிளக்கச் செய்து அந்தப் பிளவுகளில் குழாய்களைப் பொருத்தி, அக்குழாய்கள் மூலம் நீரையோ, வேறு இரசாயனப் பொருட்களையோ நிலத்தில் அழுத்தத்தோடு பாய்ச்சினால் எண்ணெய் இன்னொரு புறம் மேலே வரும். அந்த மண்ணில் இருக்கும் எண்ணெயை வெளியேற்ற கடினமான ஒரு பொருள் ஆனால் எளிதில் குழாய்கள் மூலம் பாய்ச்சக் கூடியதாக இருப்பதாக வேண்டும். அது குவார் பருப்பு என்று அமெரிக்கர்கள் கண்டதன் விளைவு இன்று குவார் பருப்புக்கு பெரும் சந்தை உருவாகியிருக்கிறதாம்.



# பார்க்காத முகங்கள்!

நடிகர்திலகம் சிவாஜிகணேசனுக்கு வெறும் மேக்கப் டெஸ்ட் மட்டுமே எடுத்து, படத்தில் இடம்பெறாத சில வேடங்கள்.




# யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்

## எமது பாடசாலை பற்றி...

ஆசைப்பிள்ளை என அழைக்கப்படும் உயர் திரு. வே. சரவணமுத்து அவர்கள் தனது உழைப்பின்மூலம் பெற்ற பணத்தையும், ஊர்மக்களிடம் சேர்த்த பணத்தையும் ஒன்றாக்கி 1962ஆம் ஆண்டு இப்பாடசாலையைக் கட்டிமுடித்தார்.

தினமும் மாற்றமடையும் இன்றைய உலகிலே நாளைய உலகைக்கட்டி எழுப்பும் மாண வர்களை வெற்றிகரமான பாதையிலே வழி நடத்தும் முக்கிய பணியைச் செய்து வருகின்றது எம்பாடசாலை.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 50 வருடங்கள் பூர்த்தியாகப்போகும் நிலையிலே எம்பாட சாலை பல்வேறு சாதனைகளை தன்னகத்தே கொண்டுள்ளமைக்கு இப்பாடசாலை சமூகம் முக்கிய காரணமாகின்றது. மாணவர்களைக் கல்வியில் மட்டுமல்லாது. இணை பாடவிதான செயற்பாடுகளிலும் வெற்றியடையச்செய்து இல்லப்போட்டிகள் முதல் இலக் கியப் போட்டிகள் வரை வலயம், கோட்டம் காண வைத்து வெற்றியடையச்செய்தமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்பகாலங்களிலே குறைந்த மாணவர்களையும் சிறிய கட்டடத்தொகுதியையும் கொண்டு இயங்கிய பாடசாலை இன்று 550 மாணவர்களையும், 32 பெண்ஆசிரியர்களை யும், 8 ஆண் ஆசிரியர்களையும் கொண்டு மிகச் சிறப்பாகச் செயற்பட்டுவருவதுடன் கலைப்பிரிவுடன் 2010ஆம் ஆண்டிலிருந்து வர்த்தகப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

போதுமான கட்டட வசதிகள் இன்மையால் பெரும் நெருக்கடிக்குள்ளான எமது பாடசாலை கல்வித்திணைக்களத்தின் ஒத்துழைப்பினூடாகவும், ஊழியர்களின் ஒத்துழைப்பினூடாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உதவிகளினூடாகவும் அதிபரின் விடாமுயற்சியாலும் மேலும் இருமாடிகள் கொண்ட கட்டடம் அமைக்க முடிந்தது.





6S செயற்திட்டக் குழு அங்கத்தவர்கள்


என்றுமில்லாதவாறு எமது பாடசாலையில் 3ஏ பெறுபேறுகள் பெற்று பல்கலைக்கழகத்திற்கு மாணவியர் தெரிவு செய்யப்பட்டமையும் கல்வி முன்னேற்றத்தையே பறைசாற்றுகின்றது.

2011ஆம் ஆண்டு 6S திட்டத்தின் பாடசாலைகளில் ஒன் றாகத் தெரிவு செய்யப்பட்டு30 பாடசாலைகளில் 4ஆம் இடத்தைப் பெற்றமையும் இங்கே சுட்டிக்காட்டுவதற்குரிய துடன் ஜெய்க்கா திட்டத்தின் 5S நடைமுறையும் இன்று பாடசாலையில் நிகழ்த் துகையில் உள்ளமை மாணவர்களை வினைத்திறனுடை யவர்களாக்குகின்றது.

எமது பாடசாலை 1000 பாடசாலைகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டு முன்னேற்றத்தின் அடுத்தபடிக்கு முன்னேறுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.











எமது பாடசாலையை தூய்மைப்படுத்தல் திட்டம்



எமது நாட்டை செழுமையான நாடாக மாற்றியமைக்கும் செயலொழுங்குத் திட்டம்...



## அதிபர் திரு. சண்.வாமதேவன்

யாழ்.கோண்டாவில் இராமகி ருஷ்ண மகாவித்தியாலயத்தில் 1934ஆம் ஆண்டு உபஅதிபராகப் பதவியேற்ற திரு. சண்.வாமதேவன் அவர்கள் 2001ஆம் ஆண்டு அதிபர் பொறுப்பேற்று இன்று பாடசாலையினை அண்ணார்ந்து பார்க்கும் உயரத் திற்கு கொண்டு சென்றுள்ளார். "தொழிலே முழுமூச்சு எனும் கொள்கை கொண்டு செயலாற்றிவரும் எமது அதிபர் பாடசாலை ஆரம்பநிலையில் இருந்து இன்று வரை இவ்வாறான தொரு மாற்றத்தைப் பெறுவதற்கு பெரும் பாடுபட்டார். என்றே சொல்ல முடியும்.

பாடசாலைக்குள் கல்விமுன்னேற்றத்திலும் சரி இதர முன்னேற்றங் களிலும்சரி தனது அனுபவத்தினூடாகவும் ஆழ்ந்த சிந்தனையினூடாகவும், வெற்றிபெறச்செய்ய முழுமையாகத் தன்னை அர்ப்பணித்தார் என்றே கூறவேண்டும். பாடசாலை முன்னேற்றம் பெற கல்வித்திணைக்களத்தின் உதவியினையும், அமைச்சர் டக்ளஸ் தேவாந்தாவின் உதவியையும் பெறுவதற்கு பெரு முயற்சிகள் செய்து இன்று பாடசாலையின் இவ் நிலைக்கு முக்கிய கருத்தாவாக அதிபர் விளங்குகின்றார்.

இவர் பாடசாலை அபிவிருத்தி தொடர்பாகக் கூறியபோது கலைப்பிரிவுடன் செயற்பட்ட பாடசாலையில் 2010ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெறுவதுடன் எதிர்வரும் காலங்களில் கணித, விஞ்ஞானத்துறைகளும் ஆரம்பிக்க முனைவதாகவும் இதற்கு விஞ்ஞான ஆய்வுகூடம் தேவையாக உள்ளதாக கூறிய அவர் இப் பொழுது கட்டப்பட்ட மண்டபத்திற்கு மேலும் இருமாடிகள் கட்டுவதற்கு உதவி கோரியிருப்பதாகவும் சுறினார். அத்துடன் மாணவர்கள் கல்வித்துறையில் வளர்ச்சி கண்டதுபோல விளையாட்டுத்துறையிலும்வளர்ச்சிகாண விளை யாட்டுத்துறை ஆசிரியர் தேவைப்படுவதாகவும் கூறினார்.

# மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய பழையமாணவர் சங்கக்கிளை அங்குரார்ப்பணம்



(சிகரம்)

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மறவன்புலோ கிராமத்தின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு மறவன்புலோ சகலகலா வல்லி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம், வெளிநாடுகளிலுள்ள இந்தப் பாடசாலையின் பழைய மாணவர்களை ஒன்றிணைத்து புதிய கிளை ஒன்றை உருவாக்கியுள்ளது.

இக்கிளை நேற்றுமுன்தினம் புதன்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலையின் பழைய மாணவர்சங்க தாய்ச் சங்கத்தின கீழ் செயற்படவுள்ள இந்தக் கிளைச் சங்கமானது, அதன் செயற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கில், கிராமத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்க உள்ளது.

பழைய மாணவர் சங்கம் பல மாதங்களாக மேற்கொண்ட தொடர் சந்திப்புக்கள் மற்றும் புலம்பெயர்ந்தோருடனான கலந்துரையாடல்களின் பின்னரே கிராமத்திலிருந்து வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்ற இளைஞர்களின் ஆதரவுடன், மேற்படி வெளிநாட்டுக் கிளையினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சட்டநாதர் மனோகரன் (பிரான்ஸ்) பழைய மாணவர் சங்கத்தின் இந்த புதிய கிளையின் தலைவராகவும், செல்லக்கிளி ஆனந்தராஜன்(ஜேர்மனி) உப தலைவராகவும், சச்சிதானந்தம் பாலராஜ்( ஜேர்மனி) பொருளாளராகவும், கனகரத்தினம் தனேந்திரன் (சுவிஸ் ) செயலாளராகவும், இரகுநாதன் சர்வேந்திரன் (இத்தாலி)உபசெயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மறவன்புலோ கிராமத்தில் நடைபெற்றுவரும் சகல கட்டுமானங்களுக்கும் தன்னாலான பங்களிப்புக்களை நல்கி வருவதுடன், இநதக் கிராமத்தின் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டில் அதிக முனைப்புடன் செயலாற்றி வரும் சகலகலாவல்லி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கமானது இன்றுவரை அயராது சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாம கல்விவலயத்தினால் ஆரம்பக்கல்வி, தமிழ், சுகாதாரமும் உடற்கல்வியும், தொழில்நுட்பம், நாடகமும் அரங்கி யலும் ஆகிய பாடங்களுக்கான சேவைக்காலஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளது.

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு 1 அல்லது வகுப்பு 2-1ஐச் சேர்ந்த பின்வரும் தகைமைகளைக்கொண்டவர்கள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

குறிப்பிட்ட பாடத்தினை (அல்லது அப்பாடம் சார்ந்த ஏற்புடைய பாடத்துறை) ஒரு பாடமாகக்கொண்டு பட்டம் பெற்றிருப்பதோடு விண்ணப்பிக்கும் பாடத்தில் விண்ணப்பதாரி 07 வருடங்களுக்கு குறையாத கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல்வேண்டும் அத்துடன் பட்டப்பின்கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்றவராகவும்இருத்தல் வேண்டும் (கல்விமாணிப்பட்டதாரிகளுக்கு பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ்தகைமையிலிருந்து விலக்களிக்கப்படும்.

அல்லது விண்ணப்பிக்கும் பாடத்துறையில்அரசினர். ஆசிரிய கலாசாலையில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் ஆசிரிய பயிற்சி பெற்றிருப்பதோடு விண்ணப்ப முடிவுத்திகதியன்று குறித்த பாடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராக 10 வருடங்களுக்கு குறையாது தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்து பட்டம் பெற்றவர்களுக்கு பயிற்சித்துறையும் பட்டமும் அக்குறிப்பிட்ட பாடத்தை சார்ந்ததாக இருக்குமிடத்து பட்டப்பின் டிப்ளோமாச் சான்றிதழ் தகைமையிலிருந்து விலக்களிக்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் மாதிரி விண்ணப்பப்படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று இரு பிரதிகளில் தெளிவாக பூர்த்தி செய்து அதிபரூடாக எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலிகாம வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# சமுர்த்தி சங்கங்கள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 5 பிரதேச செயலர் பிரிவுகளில் 4 சமுர்த்திச் சங்கங்கள் மற்றும் 3 சமுர்த்தி மகா சங்கங்கள் உட்பட 7 சமுர்த்திச் சங்கங்கள் இன்று 10 ஆம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேச செய லர் பிரிவில் யாழ்ப்பாணம் சமுர்த்தி மகாசங்கம், தெல்லிப் பளை பிரதேச செயலர் பிரிவில் அளவெட்டி சமுர்த்தி வங்கிச் சங்கம், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி மகா சங்கம் மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்கமும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உடுப்பிட்டி சமுர்த்தி வங்கிச் சங்கம், மரு தங்கேணி பிரதேச செயலர் பிரிவில் மருதங்கேணி சமுர்த்தி மகா சங்கம், அம்பன் சமுர்த்தி வங் கிச் சங்கம் என்பன திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா சிறப்பு விருந் தினராகக் கலந்துகொண்டு இந் தச் சங்கங்களை திறந்துவைக்க வுள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் மற்றும் அரச அதிகாரிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (பா,116)



மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் 5ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ள கோண்டாவில் சி.சி.ரி. எம்.தமிழ்கலவன் பாடசாலையின் வேலைத்திட்ட ஆரம்ப வைபவத்தில் நல்லூர் பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச அமைப்பாளருமான அ. இரவீந்திரதாஸன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைக் காணலாம்.

# பதிவிறக்கப் பெட்டகம்

கவிதை ஒரு நுண்அனுபவம். கவிதை புரிவதற்கு முந்திய நிலைமையிலேயே, கவிதையின் உட்பொருளும் விஸ்தீரணமும் விளங்கிவிடுவதற்கு முன்னமே, கவிதையுடன் ஓர் உறவு ஏற்பட்டு விடுகிறது. **– எலியட்**

ஒரு புது முயற்சியாக, யாப்பிலக்கணத்தை உதறியெழுந்த தமிழ்க் கவிதை, தன் நவீனத் தன்மையின் அடிச்சரடாக, புதிய இலக்கணத்தை, புதிய பார்வையைக் கைக்கொண்டு, அரைநூற்றாண்டுக்கும் மேல் ஓடிவிட்டது. கால்வாயாக ஆரம்பித்தது, இன்று அகண்ட காவேரியாய்ப் பழசாகக் கூடப் போகத் தொடங்கிவிட்டது. **– ந.பிச்சமூர்த்தி**

உண்மையில் உயிர் ததும்பும் நவீன கவிதைக்குச் சமமான அளவில், பழசானவையும் இருக்கின்றன. நவீன கவிதை நகர்ந்து நகர்ந்து வந்து சேர்ந்திருக்கும் இடத்தையும், நகர்ந்த பாதையையும், அதன் வரலாற்றில் செயற்பட்ட கருதுகோள்களையும் இன்றைய வாசகன் கவனம் கொள்ள வேண்டும். இம்முயற்சியை மேற்கொள்ளாத வாசகனுக்கு, நவீன உடையில் திரியும் செய்யுள்கள் எவை, சற்றுப் பழைய பிரயோகங்களைக் கொண்டிருந்தாலும் புதிய கவிதைகள் எவை என்று நிர்ணயித்துக் கொள்வது சிரமமான வேலைதான். “கவிதை” என்னும் வடிவத்தைப் பற்றிய தர நிர்ணயம் – நவீன கவிதையின் பலவிதமான நூதனப் போக்குகளுக்கும் வாசக மனத்தைத் திறந்து வைக்க உதவிகரமாக இருக்கும். **– யுவன் சந்திரசேகர்**

கவிதை வலியில் ஒரு சுகம் இருக்கிறது. அதனை கவிஞர்கள் மட்டுமே அறிவார்கள். **– வி.கௌபர்**

சங்கக் கவிதைகளிலிருந்து கவிதை நுணுக்கமும் கூர்மையும் கற்றுக் கொள்ளலாம். காவியங்களிலிருந்து பலவகைப்பட்ட சொல்லும் விதமும், கவிதையை வளர்த்தெடுத்துச் செல்லும் வழிவகையும், விரிவான கதை சொல்லும் முறையும் தெரிந்து கொள்ளலாம். பக்திப் பாடல்களிலிருந்து உணர்ச்சி பாவமும் ஒலிநயமும் எளிமையையும் பழத்துக் கொள்ளலாம். சிற்றிலக்கிய வகைகளிலிருந்து வெவ்வேறுபட்ட கவிதையாக்க உத்திகளைப் பயின்று கொள்ளலாம். கவிதைத் தொழில்நுட்பத்திற்கான பயிற்சிகளைப் பெற உதவும் ஆதாரங்கள் இவை. **– விக்ரமாதித்யன்**

அறிந்தவற்றில் தொடங்கி அறியாத, அறியவே முடியாத ஒன்றில் முட்டிச் செயலிழப்பவை கவிதைகள். **– பிரமிள்**

உணர்ச்சியின் விம்மலில்தான் இன்றைய கவிதை நம்பிக்கை கொண்டிருக்கிறது. வெளிப்படும் உணர்ச்சியை விட வெளிப்படாத உணர்ச்சிதான் வலுவானது என்று இன்றைய கவிதை நம்புகிறது. புதிய கவிஞர்கள் அவர்களுக்கு முந்திய கவிஞர்கள் கண்டடைந்த உண்மைகளையும் அழகுகளையும் கூசாமல் துறக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். **– சுந்தர ராமசாமி**

கவிதையில் அழகுக்கான முயற்சிகள் (உவமை, உருவகம், படிமம், அலங்காரம்) எதுவும் தேவையில்லை. மனித வாழ்க்கையின் அடிப்படையை எங்கோ ஒரு இடத்தில் தொட்டுவிடுவதில் கவிதை இருப்பதாகத் தோன்றுகிறது. **– யவனிகா ஸ்ரீராம்**

கவிஞனின் அந்தரங்க உணர்ச்சிநிலை, அவனது சிந்தனையின் வீரியம், இவற்றோடு அவன் பிரத்தியேகமாக உருவாக்கும் அழகியல் கோணம் இவற்றின் வழியாக ஒரு கவிதை, கவிதையாக நிறுவப்படுகிறது. இம்மூன்று அம்சங் களின் கலப்பு விகிதத்தில் தென்படும் வித்தியாசங்களே ஒரு கவிஞனிடமிருந்து இன்னொரு கவிஞனை வேறுபடுத்திக் காட்டுகின்றன. **– ஆனந்த்**

மொழியின் உச்சநிலைகள் நிகழும் தளம் என்ற வகையிலும் வாழ்வை வாழ்வுக்கு அப்பால் சென்று தொகுத்து நோக்கும் ஒரு சாத்தியக்கூறு என்ற வகையிலும் எனக்கு கவிதை முக்கியமாக இருக்கிறது. **– ஜெயமோகன்**

புல்வெளிகளோடும், மரங்களோடும், பறவைகளோடும், மீன்களோடும், மான்களோடும், கற்களோடும், கருமுகில்களோடும், மலைகளோடும், ஆறுகளோடும் உரையாட – வாழ்ந்து, மோதி, மகிழ்ந்து, கவலைப்பட்டு, மடிகிற மக்கள் தொகுதிகளோடு புழுதியில் புழுதியாக மாற – பால்வெளிகளோடும் நட்சத்திரங்களோடும் உறவாட, வேறு வழி என்ன இருக்கிறது, கவிதையைத் தவிர. **– திலீப் ஜாவேரி**

கவலையின்றிப் பறந்து திரியும் சிட்டுக்குருவி எனது ஜன்னல் வழியே வரின், நான் என்னை மறந்து சிட்டாகவே மாறிவிடுகிறேன். **– கீட்ஸ்**

# கல்வி மேம்பாட்டில் ஆரம்ப, இடைநிலை பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டம்



மகிந்த சிந்தனையின் அடிப்படையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் நாட்டின கல்வி அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்காக 1000 இரண்டாம் நிலைப் பாடசாலைகளையும் 5000 ஆரம்பப் பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் கல்வி அமைச்சுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

'நம் நாட்டின் பிள்ளைகளுக்கு சிறந்ததையே பெற்றுக் கொடுப்போம்' எனும் தொனிப் பொருளின்கீழ் இந்நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நாடளாவிய ரீதியில் 1000 இடை நிலைப்பாடசாலைகளை ஏக காலத்தில் அபிவிருத்தி செய்வதுடன் 5000 ஆரம்பப் பாடசாலைகளை பிள்ளைகளின் சிநேகபூர்வப் பாடசாலையாக மாற்றுதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தினது முதன்மையான நோக்கமாகும். இடைநிலைப் பாடசாலைகளுக்கு ஊட்டப் பாடசாலைகளாக விளங்குகின்ற 5000 ஆரம்பப் பாடசாலைகளையும் சிநேகபூர்வப்பாடசாலைகளாக மாற்றுவதற்கு அந்தப் பாடசாலைகளினது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

பிரபல்யமான பாடசாலைகளில் மாணவர்களை சேர்ப்பதில் உள்ள போட்டித் தன்மைகளைக் குறைப்பதுவும் இந்நிகழ்ச்சித் திட்டத்தினது நோக்கமாகும். இந் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக பின்வரும வேலைகள் செயற்படுத்தக்கூடியவையென இனங காணப்பட்டுள்ளன. மின்சார வசதிகளை ஏற்படுத்தல், தண்ணீர் வசதிகளை ஏற்படுத்தல், மலசலகூடம் மற்றும் உடல் ஆரோக்கிய வசதிகளை அபிவிருத்தி செய்தல், பாடசாலை வேலி மற்றும் நுழைவாயிலை நிர்மாணித்தல், தற்போதிருக்கின்ற கட்டடங்களைத் திருத்துதல், வர்ணம் பூசுதல், பாடசாலை வளாகத்தை முன்மாதிரியான வீட்டுத் தோட்டமாக மாற்றுதல், பாடசாலைப் பெயர் பலகையைப் பொருத்துதல், முதலாம் தர மாணவர்களின் செயற்பாட்டு அறையை முறையாக நிர்மாணித்தல், விளையாட்டு முற்றத்தினை நிர்மாணித்தல், ஆசிரியர் விடுதியில் திருத்தங்களை மேற்கொள்ளல்.

இந்த அடிப்படையில் கல்வி அமைச்சினால் அடையாளம் காணப்பட்டுள்ள 1968. பாடசாலைகளினது அபிவிருத்தி

நடவடிக்கைகள் கடந்த புதன்கிழமை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ், வடமாகாண ரீதியாக யாழ்.மாவட்டத்தில் 61 பாடசாலைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில்13 பாடசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 19 பாடசாலைகளும் மன்னார் மாவட்டத்தில் 22 பாடசாலைகளும் மொத்தமாக 129 பாடசாலைகள் முதற்கட்டமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. வடமாகாண பாடசாலைகளின் அபிவிருத்தி திட்டமானது கௌரவ வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறீ அவர்களின் தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலின் கீழ் வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாண கல்வி அமைச்சு, மாவட்ட அரசாங்க அதிபர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப்பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம மட்ட அமைப்புக்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் என்பவற்றின் பங்களிப்புடன் இவ்வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப வைபவங்கள் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் 14 பாடசாலைகளும் இவ் ஆரம்ப பாடசாலைகளினது அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கென ஒவ்வொரு பாடசாலைக்கும் 5 இலட்சம் ரூபாபொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந் நிதியுடன் பெற்றோர், நலன்விரும்பிகள், சமூக நிறுவனங்கள் ஏனைய அரச திணைக்களங்கள் என்பவற்றினது உதவியுடன் இதனை விடக் கூடியபெறுமதியான வேலையைச் செய்ய முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந் நிகழ்ச்சித் திட்டத்தினை பாடசாலைஅபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தல் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.





# மீளாய்வுக் கூட்டம்

வடமராட்சி வலய மாணவர்களின் பெறுபேறுகளை உயர்த்துவதற்கான விசேட செயற்திட்ட மீளாய்வுக் கூட்டம் இன்று வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவலக புதிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதால் பாடசரலை அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தரம் 11 மாணவர்களின் இரண்டாம் தவணைக்கன புள்ளிப் பகுப்பாய்வுகளை கொண்டுவருவதுடன் பாடசாலைகளில் பால் வழங்கும் திட்டம் நடைபெறுகிறதா என உறுதிப்படுத்தி சீட்டு ஒப்படைக்காத பாடசாலைகள் உடனடியாக கணக்காளரிடம் ஒப்படைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (109)



மாத்தறை மாவட்டத்தில் இறந்தோர்களுக்கான உதவி வழங்கும் சங்கங்களுக்காக கூரைத்தகடுகள் மற்றும் உபகரணங்களை பெற்றுக் கொடுக்கும் செயல் திட்டமொன்று மாத்தறை சமாதி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நன்கொடை வழங்கும் வைபவம் ஒன்று தெவினுவற தும்மோதறையில் நடைபெற்றதோடு, மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சமாதி மன்றத்தலைவர், புத்திக பத்திரணவால் தெவினுவற தும்மோதறை இறந்தோர்களுக்கான உதவி வழங்கும் சங்கத்திற்கு உபகரணங்கள் நன்கொடை வழங்கப் படுவதைக்காணலாம்.

# சந்தேக நபர்களுக்குப் பதிலாக வேறு ஒருவர் கைது

(திருநெல்வேலி)

திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் கோயிலடி கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்களுக்குப் பதிலாக வேறு ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் இவ்வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது கொலையுண்டவரான புனேந்திரம் ரஜீவன் (வயது 21) என்பவரின் குடும்பத்தவரின் நலன்களைக் கவனிப்பதற்காக ஆஜரான சட்டத்தரணி ஷர்மினி விக்கினேஸ்வரன் இப்புகாரினை தெரிவித்தார்.

இவ்வருட யூன் மாதம் 18 ஆம் திகதி இரவு இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்த புவனேந்திரம் ரஜீவன் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு 4 தினங்களின் பின்னர் மரணமானார். இவரது மரணம் சம்பந்தமாக பொன்னம்பலம் நல்லைநாதன் என்பவரைக் கோப்பாய் பொலிஸார் கைது செய்து யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது இவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

நீதிமன்றில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேக நபர் ஆஜர்படுத்தப்பட்டார். இறந்தவரின் குடும்பத்தவரின் நலனைக் கவனிப்பதற்காக ஆஜரான சட்டத்தரணி ஷர்மினி விக்கினேஸ்வரன் மரண விசாரணை அறிக்கையின் படி இறந்தவர் கொலை செய்யப்பட்டுள்ளார் எனவும், இச் சம்பவத்துடன் வேறு இரண்டு சந்தேக நபர்களே தொடர்புபட்டிருந்தார்கள் என்பதற்கு போதிய ஆதாரங்கள் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

குறித்த இரண்டு சந்தேக நபர்களையும் அவர்களது பெயர் விபரங்களையும் தெரிவித்த சட்டத்தரணி அவர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்த வேண்டும் எனவும் விண்ணப்பித்தார்.

சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதவான் மா.கணேசராஜா வழக்கை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (137)

# கப்பலேந்தி மாதா ஆலய வருடாந்த திருவிழா

(வடமராட்சி கிழக்கு)

கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலய வருடாந்த திருவிழா இம்மாதம் முதலாம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. 6 ஆம் திகதி தொடக்கம் மாலை 6மணிக்கு திருச்செபமாலையும், அதனைத்தொடர்ந்து பூசைத்திருப்பலியும் மறையுரையும் இடம்பெறவிருக்கின்றன.

இம்மாதம் 14 ஆம் திகதி மாலை பூசைத்திருப்பலியும் தேவநற்கருணைப்பவனியும் இடம் பெறவிருக்கின்றன.


மறுநாள் புதன்கிழமை காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறவிருக்கின்றன. இத்திருவிழாவுக்கான ஒழுங்குகளை தாளையடி பங்குத்தந்தை அருட்திருகே. யேசுரட்ணம் அடிகளார் உதவிப் பங்குத்தந்தை அருட்திரு.யஸ்ரின் அடிகளார் ஆகியோருடன் ஆலய நிர்வாகத்தினர் அருட்பணிச்சபையினர் இணைந்து செய்து வருகின்றனர். (70)

5) இரண்டு ரூபாவில் எத்தனை 25 சத நாணயங்கள் உண்டு?

..................................................

6) 237, 115, 496, 325, 187 இவ்வெண்களை இறங்கு வரிசைப்படுத்தினால் நடுவில் வரும் எண் யாது?

..................................................

7) 

இவ் எண் சட்டம் காட்டும் எண் யாது

..................................................

8) 4837 இல் 8 இன் பெறுமானம் யாது?

..................................................

9) 4830 ml இல் தருக?

..................................................


10) இன்று சனிக்கிழமை ஆயின் நேற்று முதல்நாள் என்ன கிழமை?

..................................................

**11) ஒரு குறித்த பாடசாலையில் மாணவர் விரும்பும் உணவுகள் பற்றிய தகவல்களை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.**

| உணவு | பிள்ளைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| 1. இடியப்பம் | 75 | 35 |
| 2. [illegible] | 35 | 55 |
| 3. பாண் | 60 | 40 |
| 4. தோசை | 30 | 75 |

1) மேற்படி தகவல்களை சலாகை வரைபில் வரைந்து காட்டுக?



2) பாண் உணவை உண்ட ஆண்களை விட இடியப்பம் உண்ட ஆண்கள் எத்தனைபேர் அதிகம்?

..................................................

3) எல்லா உணவுகளையும் உண்ட ஆண்கள் எத்தனை பேர்?

..................................................

4) எல்லா உணவுகளையும் உண்ட பெண்கள் எத்தனை பேர்?

..................................................

**12) "உமது பாடசாலை பரிசளிப்பு விழா" பற்றி நான்கு சொற்களுக்குக் குறையாமல் பொருத்தமான எழுவாய் பயனிலையுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக.**

1) ..................................................
2) ..................................................
3) ..................................................
4) ..................................................
5) ..................................................
6) ..................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

நேரம் -1மணி 15நிமி



# கல்வி முரசு

இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**1) கீழே தரப்பட்ட பாடலை வாசிக்குக.**

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?

சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே.

கவிமணி.தேசிகவிநாயகம்பிள்ளை.

பாடல் அடிகளைக் கொண்டு 1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்கு விடைதருக.

1) "உடல்" என்ற கருத்தைத் தரும் சொல் ஒன்று எழுதுக?

..................................................

2) நோயாளிக்கு இனிய வாழ்வு தருவது எது?

..................................................

3) சுகம் என்பதன் எதிர்ச்சொல் தருக?

..................................................

4) இடமெங்கும் என்பதைப் பிரித்தெழுதுக?

..................................................

5) இரண்டாவது பாடலில் உள்ள அடுக்குமொழியினை எழுதுக?

..................................................

6) சுகம் எங்கு உண்டு எனக் கவிஞர் குறிப்பிட்டுள்ளார்?

..................................................

7) உலகில் இன்பம் உடையவர் யார்?

..................................................

8) "நீண்ட ஆயுள் பெறுவாய்" என்ற வாக்கியத்தின் எழுவாய் யாது?

..................................................

9) "பெறுவாய்" என்பதை நிகழ்காலத்தில் எழுதுக?

..................................................

10) இந்தப் பாடலைப் பாடியவர் யார்? ..................................................

**2) சொற்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

1) ஆச்சரியத்துடன் / அப்பெரியவரை / பார்த்தான் / சீடன்

..................................................

2) அதற்கு / எம்மில் / கண்டிக்குச் / பலர் / இல்லை / சென்றதே / முன்பு

..................................................

3) விசிவிட்டான் / தோலை / பாதையில் / வாழைப்பழத் / பாபு

..............................................................................................

4) மயிலின் / பாடியது / வானம்பாடி / பாட்டுப் / கூட்டத்தை / வாழ்த்திப்

..............................................................................................

5) தாத்தா / கழுதைமீது / இறங்கினார் / அமர்ந்திருக்க / கீழே

..............................................................................................

**3) வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப்பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.**

1) எங்கள் அப்பா கடையில்..................................................வாங்கி வரும்படி கூறினார்.

(வெத்திலை / வெற்றிலை / வெத்திலை / வெற்திலை)

2) நாம் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவதற்கு ..................................................அவசியம்.

(முயட்சி / முயர்ச்சி / முயற்சி / முயற்ச்சி)

3) தேங்காய் எண்ணெய் உண்டாக்கும் போது மீதியாக..................................................வரும்.

(புண்ணாக்கு / பின்னாக்கு / புன்னாக்கு / பிண்ணாக்கு)

4) முற்காலத்தில் விஞ்ஞானிகள் பல..................................................களில் ஈடுபட்டனர்.

(ஆராச்சி / ஆராட்ச்சி / ஆராட்சி / ஆராய்ச்சி)

5) கழுதைக்குத் தெரியுமா..................................................வாசனை.

(கருப்பூர / கர்ப்பூர / கற்பூர / கட்பூர)


**4) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.**

i) We buy..................................................from the books shop.

(Stamps, books, bags, Bread)

வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

ii) ..................................................



..................................................

**5) கருத்தினைத் தமிழில் எழுதுக.**

i) Good Evening :..................................................

ii) Please go there :..................................................

iii) What is that? :..................................................

**6) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைப் புள்ளிக் கோட்டின் மீது தமிழில் எழுதுக.**

1) மல்லி .................................... 2) புட்டுவ ....................................

3) வாடிவென்ன .................................... 4) பொன்ன ....................................

5) பொத்த ....................................



**7) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) இலங்கையின் தேசிய பறவை?
1) கிளி 2) காட்டுக்கோழி 3) புறா 4) வாத்து


2) பின்வருவனவற்றுள் ஒருவித்திலைத் தாவரம்.
1) வேம்பு 2) பலா 3) மா 4) வாழை


3) பின்வருவனவற்றுள் தாவர உண்ணி எது?
1) சிங்கம் 2) புலி 3) பசு 4) கரடி


4) மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று?
1) உணவு 2) கோயில் 3) மைதானம் 4) முற்றம்


5) தச்சுத் தொழிலாளி பயன்படுத்தும் உபகரணம்.
1) சாந்தகப்பை 2) குறடு 3) தூக்குக் குண்டு 4) உளி

**8) பின்வரும் தாவரங்களின் பெயர்களின் பெயர்களை எழுதுக.**
**(சீதேவியார் செங்கழுநீர், முள்முருங்கை, முருங்கை, நன்னாரி)**













1)........................ 2)........................ 3)........................ 4)........................

**9) பின்வரும் படங்களில் உள்ள பறவைகளின் பெயரை புள்ளிக் கோட்டில் எழுதுக.**
(சேவல், பருந்து, மரங்கொத்தி, வாத்து)









1)........................ 2)........................ 3)........................ 4)........................

**10) பின்வரும் வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1) ஒரு பிள்ளைக்குத் தினமும் காலை, மதியம், மாலை உணவாக இரண்டு பிஸ்கற்றுக்கள் வீதம் வழங்கப்படுகின்றது. ஐந்து நாட்களுக்கு வழங்க எவ்வளவு பிஸ்கற்றுக்கள் தேவை?

..................................................

2) பி.ப. 1.10 இற்கு கொழும்பு தரிப்பு நிலையத்துக்கு வரவேண்டிய பஸ் வண்டி பி.ப.12.50 இற்கு வந்து சேர்ந்தது எனின் எவ்வளவு நேரம் முந்தி வந்தது?

..................................................

3) 1 kg வாழைப்பழத்தின் விலை ரூ.32.00 ரூபா எனில் 500 g வாழைப்பழத்தின் விலை யாது?

..................................................

4) 120 புத்தகங்கள் நான்கு வகுப்புக்குச் சமனாகப் பிரிக்கப்பட்டன. ஒரு வகுப்புக்கு எத்தனை புத்தகங்கள் கிடைத்தன?

..................................................

# இலங்கை மீனவர் தொழில் செய்ய தமிழக மீனவர் ஒத்துழைக்க வேண்டும்

## மீன்வள அமைச்சக ஆலோசகர் தெரிவிப்பு



இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்சினையின்றி தொழில் செய்வது, தமிழக மீனவர்களின் கையில் தான் உள்ளது, என இலங்கையின் கடற்தொழில் நீரியல்வள அமைச்சக ஆலோசகர் அந்தோனி முத்து கூறினார்.

இராமேஸ்வரத்தில் நேற்று முன்தினம் நடந்த அனைத்து மீனவர் சங்க கூட்டத்தில் அவர் பேசியதாவது: இலங்கையில் சண்டை முடிந்து, 30 ஆண்டுகளுக்குப்பின் இப்போதுதான், எங்கள் மீனவர்கள், மீன்பிடித் தொழில் செய்ய தொடங்கி உள்ளனர். இவர்களுக்கு, தமிழக மீனவர்கள் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

கடந்தாண்டில் தமிழகத்தில் இருந்து வந்த மீனவ பிரதிநிதிகள் குழு அமைச்சர் ராஜித சேனாரத்னவை சந்தித்தபோது, பாக்கு நீரிணைக் கடலில், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி, தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதை, வீடியோ ஆதாரத்துடன் காண்பித்தார். தடை செய்யப்பட்ட வலைகள், கண்ணி வெடிகளுக்கு சமம். கடல் வளம் அழிவதுடன் எதிர்காலத்தில் கடலில் பல ஆபத்துகள் உருவாகும். இதனால் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துவதை, தமிழக மீனவர்கள் கைவிட வேண்டும்.

கடந்த 2010இல் இந்திய - இலங்கை மீனவர்களின், சமுதாய மேடை என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இதன் பிரதிநிதிகள் குழு, செயற்பாட்டுக்கு வரவில்லை. எதிர்காலத்தில் இக்குழு, முறையாக செயற்பட்டு, மீனவர் பிரச்னையை தீர்க்க, இரு நாட்டு அரசுகளையும் வலியுறுத்த வேண்டும். இலங்கை சிறைகளில் இந்திய மீனவர்கள் மரியாதையுடன் நடத்தப்படுகின்றனர். எதிர்காலத்தில் இருநாட்டு மீனவர்களும், கடல்பகுதியில் பிரச்சினையின்றி தொழில் செய்வது, தமிழக மீனவர்களின் கையில் தான் உள்ளது.

மேலும், இலங்கை சிறையில் உள்ள ஐந்து மீனவர்களை விடுதலை செய்வதும், தமிழக மீனவர்களின் முயற்சியால் மட்டுமே முடியும், என்றார். பின்னர் இந்திய, இலங்கை மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும்போது எல்லை மீறியதாக இருநாட்டு அரசுகளும், கைது நடவடிக்கையை தவிர்த்து மீனவர்களை எச்சரிக்க வேண்டும் என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# மழை பொய்த்தது ஏன்? இந்திரனுக்கு விளக்கக் கடிதம்



உத்தரப்பிரதேசத்தில் எதுவும் நடக்கலாம் என்று கூறப்படுவதை மெய்யாக்கும் வகையில் ஏன் மழை பொய்த்துப் போனது என்று விளக்கம் கேட்டு இந்துக்களால் மழையின் கடவுள் என்று நம்பப்படும் இந்திரனுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேசத்திலுள்ள ஹர்தோய் மாவட்டத்தின் நீதிமன்றத்தில் இருந்து துணை மாவட்ட நீதிமன்ற நீதவான் சத்ய பிரகாஷ் சர்மாவின் கையெழுத்துடன் அசலான அரசு முத்திரைகளுடன் நீதிமன்ற சொற்களை பயன்படுத்தி இந்திரனுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ள உறையின் மேலுள்ள பெறுநர் முகவரியில் சொர்க்கம் என்று எழுதப்ப்ட்டுள்ளது.

அந்நோட்டீஸில் சவாயாஜ்பூரில் கடந்த மூன்று நாட்களாய் மேக மூட்டம் இருப்பதாகவும் ஆனால் எதிர்பார்த்த படி மழை பெய்யவில்லை என்றும் ஏன் மழை பெய்யவில்லை என்பதற்கு உரிய விளக்கம் அனுப்புமாறும் கேட்டு கொள்ளப்பட்டுள்ளது. உரிய விளக்கம் குறிப்பிட்ட காலத்துக்குள் கிடைக்கப் பெறாத பட்சத்தில் நீதிமன்ற அவமதிப்பாக கருதி தண்டனை வழங்கப்படும் என்றும் எச்சரிக்கப்ப்ட்டுள்ளது.

நீதிமன்றத்தில் எழுதுவினைஞராக இருக்கும் ஸ்வந்திர குமாரிடம் இந்திரனிடம் நேரில் கொடுக்கும் படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. அவரோ தொழில் நுட்ப காரணங்களால் கொடுக்க இயலாது என்று திருப்பி அனுப்பியுள்ளார்.

# பயணிகள் பேருந்து பள்ளத்தில் விழுந்தது

## 31 பேர் ஸ்தலத்தில் பலி



திரிபுரா மாநிலத்திலிருந்து அசாம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் பேருந்து ஒன்று 80 அடி பள்ளத்தில் விழுந்ததில் 31 பேர் பலியாயினர்.

திரிபுரா தலைநகர் அகர்தலாவிலிருந்து அசாமின் கவுகாத்திக்கு சென்று கொண்டிருந்த இந்தப் பேருந்து, நேற்று அதிகாலை 4 மணியளவில் அசாம் எல்லையில் உள்ள தாம்செங் என்ற மலைப்பாதையான கிராமத்தில் உள்ள பள்ளத்தாக்கில் தலைகுப்புற கவிழ்ந்தது.


இந்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 31 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 27 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து குறித்து மீட்புக்குழுவினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதும் அவர்கள் விரைந்து வந்து பயணிகளை மீட்டனர்.

அவர்களில் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. எனவே பலி எண்ணிக்கை உயரும் அபாயம் உள்ளது

இந்தியச் செய்திகள்

# சச்சின், ரேகாவுடன் ஜனாதிபதி சந்திப்பு



நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பொறுப்பேற்றுள்ள பிரபலங்களான இந்தி நடிகை ரேகா, விளையாட்டு வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆகியோரை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.


அவரது அழைப்பை ஏற்று அவர்கள் ஜனாதிபதி மாளிகைக்கு சென்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை சந்தித்து பேசினார்கள்.

அவர்களுடன் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் ராஜீவ்சுக்லா உடன் இருந்தார்.

பிரபலங்களுடன் சுமார் 20 நிமிட நேரம் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி உரையாடினார்.

அப்போது அவர்கள் நாட்டின் எதிர்கால அரசியலமைப்பு, சுதந்திரதின வரலாறு மற்றும் நாடாளுமன்ற சட்ட நடவடிக்கைகள் பற்றி முழுமையாக விவாதித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# துணை ஜனாதிபதியாக அன்சாரி 2ஆவது முறையாக நாளை பதவியேற்பு



இந்தியாவின் துணை ஜனாதிபதியாக 2ஆவது முறையாக தெரிவுசெய்யப்பட்டுள்ள ஹமீது அன்சாரி நாளையதினம் பதவியேற்க உள்ளதால் அதற்கான விழா ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன.


நடந்து முடிந்த துணை ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி சார்பில் ஹமீது அன்சாரியும் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் ஜஸ்வந்த் சிங்கும் போட்டியிட்டனர்.

மொத்தம் பதிவாகிய 736 வாக்குகளில் 490 வாக்குகள் பெற்று ஹமீது அன்சாரி அமோக வெற்றி பெற்றார்.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜஸ்வந்த் சிங் 238 வாக்குகளே பெற்றார். இந்நிலையில் துணை ஜனாதிபதியாக இருக்கும் ஹமீது அன்சாரியின் பதவிக்காலம் இன்று வரை உள்ளது.

இந்தநிலையில் 2ஆவது முறையாக ஹமீது அன்சாரி துணை ஜனாதிபதியாக நாளை பதவியேற்க உள்ளார்.

முன்னாள் துணை ஜனாதிபதி டொக்டர் ராதாகிருஷ்ணனுக்கு பிறகு 2ஆவது முறையாக துணை ஜனாதிபதியாகும் பெருமையை அன்சாரி பெறுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.




# மனைவிக்கு மருத்துவமனை கட்டுகிறார் கஞ்சா கருப்பு!



கொமெடி நடிகர் கஞ்சா கருப்புக்கு விரைவில் வெளிவர இருக்கும் "கீரிப்புள்ள" 50ஆவது படம். தற்போதும் பத்துப் படங்களை கையில் வைத்திருக்கிறார். இவருக்கும் சிவகங்கையைச் சேர்ந்த சங்கீதாவுக்கும் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இவர்களுக்கு தருண் காந்தி என்ற ஒன்றரை வயது மகன் உள்ளான் பிசியோதெரவி டாக்டரான சங்கீதாவுக்கு மருத்துவ சேவை செய்ய ஆசை. அதனால் மனைவிக்காக கஞ்சா கருப்பு மதுரை அருகே உள்ள மேலூரிலும், மதகுபட்டியிலும் மருத்துவமனை கட்டி வருகிறார். கைதேர்ந்த மருத்துவர்களை பணியில் அமர்த்தி இரண்டு மருத்துவமனைகளையும் சங்கீதா நிர்வகிக்க இருக்கிறார். இதில் ஒன்று ஏழைகளுக்காக குறைந்த கட்டண மருத்துவமனையாகவும், மற்றையது உயர் தொழில்நுட்பங்களை கொண்ட சொகுசு மருத்துவமனையாகவும் உருவாக்க இருவரும் திட்டமிட்டிருக்கிறார்கள். இதுதவிர கஞ்சா கருப்பும் சமூக சேவையில் இறங்கியிருக்கிறார். மணப்பாறையில் உள்ள சாந்தி வனம் என்ற அநாதை இல்லத்தில் வளரும் 13 குழந்தைகளை தத்தெடுத்து வளர்த்து வருகிறார். அநாதை இல்ல குழந்தைகளின் உணவுச் செலவையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார். விரைவில் பள்ளிக்கூடம் கட்டும் திட்டம் ஒன்றையும் வைத்திருக்கிறார்.

# முகாம்களுக்கு பாதுகாப்பு!

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தங்கியுள்ள அகதிகள் முகாம்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்த வேண்டும் என்று தமிழக அரசு சார்பில், முகாம் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமீபத்தில் தமிழ் அகதிகள் முகாமில் 4 பேர் உயிரிழந்தது மற்றும் சிலர் தப்பிச் செல்ல முயன்ற சம்பவங்களைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன

# ஒரே நாளில் பொழிந்த ஆறு மாத மழை

# பிலிப்பைன்சில் இரண்டரை இலட்சம் பேர் தவிப்பு



பிலிப்பைன்சில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழையால் 50இற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

பிலிப்பைன்ஸ், சீனா உள்ளிட்ட நாடுகளில் கடந்த வாரம் சாயோலா என்ற புயல் தாக்கியது. இதில் பிலிப்பைன்சில் மட்டும் 50இற்கும் மேற்பட்டவர்கள் பலியாயினர்.

இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் பலத்த மழை பெய்து வருகிறது. ஆறு மாத காலத்திற்கு பெய்ய வேண்டிய மழை அளவு ஒரே நாளில் பெய்ததால், தலைநகர் மணிலாவில் கழுத்தளவுக்கு வெள்ளநீர சூழ்ந்துள்ளது. இதில் 20 பேர் பலியாகியுள்ளனர்.

இதனால் ஏற்பட்டுள்ள நிலச்சரிவாலும் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 25 இலட்சம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். பாடசாலை வியாபார நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன.

வீடுகளை வெள்ளம் சூழ்ந்ததால் பெரும்பாலானோர் கூரை மீது தங்கியுள்ளனர். இவர்களை மீட்கும் பணியில் தீயணைப்பு மற்றும் இராணுவ வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வீட்டை விட்டு சென்றால் பொருட்கள் திருடு போய் விடும் என்ற பயத்தால் மக்கள் வீட்டு கூரை மீது அமர்ந்துள்ளனர்.

80 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மணிலாவில் நான்கு பகுதிகளில் மோசமான அளவுக்கு வெள்ளம் பாதித்துள்ளதால் அந்தப் பகுதிகளில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மணிலாவில் நிலச்சரிவு ஏற்பட்டு ஏராளமான வீடுகள் புதைந்தன. இதில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த 9 பேர் பலியாகினர். பலரைக்காணவில்லை.

தெற்கு பகுதியில் 7 பேர் பலியாகி உள்ளனர். கடந்த 3 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சிரிய அதிபருக்கு துணை நிற்போம்



திடீரென தலைமறைவான சிரிய அதிபர் ஆசாத் சில நாட்களுக்கு பிறகு நேற்று முன்தினம் மீண்டும் தொலைக்காட்சியில் தோன்றினார். அவருடன் ஈரானின் சிறப்பு தூதர் சயீத் ஜலீலியும் இருந்தார்.


இவர் ஈரான் தலைவர் அயாதுல்லா அலி கொமெனியின் சார்பில் சிரியா வந்து அதிபர் ஆசாத்தை சந்தித்தார். அப்போது அவர் சிரிய அதிபர் பஷர்அல்- ஆசாத்துக்கு ஈரான் ஆதரவு தருவதாக அறிவித்தார்.

சிரியாவில் நடப்பது உள் நாட்டுப்பிரச்சினை. அதில் மற்றய நாடுகள் தலையிடுவது சரியல்ல. தற்போதுஅரசை எதிர்த்துப் போரிடும் புரட்சிப்படைக்கு துருக்கி, சவுதிஅரேபியா நாடுகள் ஆயுதம் வழங்கி வருகின்றன. இவர்களுக்கு அமெரிக்கா பின்னணியில் இருந்து இயக்கி வருகிறது. அவர்களின் இந்த செயற்பாடுகள் நல்ல நடவடிக்கை அல்ல.

சிரியாவில் மக்கள் ரத்தம் சிந்துவதற்கு இவர்கள் தான் காரணம். இதற்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டும். சிரியா வந்த ஈரான் யாத்ரீகர்கள் 48 பேர் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுள்ளனர். இதற்கு அமெரிக்கா பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில் இங்கு அவர்கள் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகின்றனர்.எந்த சூழ நிலையிலும் சிரியா அதிபருக்கு தான் ஈரான் துணை நிற்கும். எங்களது நட்பு அவருடன் தொடரும் என தெரிவித்தார்.

இதற்கு பதில் அளித்து சிரியா அதிபர் ஆசாத் பேசினார். அப்போது, நாட்டில் தீவிரவாதத்தை வேரறுத்து 17 மாதமாக நடைபெறும் உள்நாட்டு பிரச்சினைக்கு முடிவு கட்டுவேன் என உறுதி அளித்தார்

# ரஷ்யாவின் ரொக்கட் சோதனை தோல்வி



ரஷ்யா கடந்த செவ்வாய்க்கிழமை விண்ணில் செலுத்திய புரோட் டான்-எம் ரொக்கட் புவிவட் டப்பாதையில் செயற்கைக் கோளகளை நிலைநிறுத்த இயலாமல் தோல்வியடைந்தது.

ரஷ்ய விஞ்ஞானிகள் உருவாக்கிய புரோட்டான்-எம் ரொக்கட், கஜகஸ்தானில் உள்ள பைகானூர் ஏவுதளத்தில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை விண்ணில் செலுத்தப்பட்டது. அதில் இந்தோனேசியாவின் டெல்காம்-3 செயற்கைக்கோளும், ரஷ்யாவின் எக்ஸ்பிரஸ் எம்.டி.-2 செயற்கைக் கோளும் வைக்கப்பட்டிருந்தன.

எனினும், ரொக்கட்டில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக அதனால் இந்த 2 செயற்கைக்கோள்களையும் புவி வட்டப்பாதையில் நிலைநிறுத்த இயலவில்லை. இந்த ரொக்கட் பயணம் தோல்வியில் முடிந்ததாகவும், அதில் வைத்து அனுப்பப்பட்ட செயற்கைக்கோள்கள் காணாமல் போனதாகக் கருதப்படுவதாகவும் ரஷ்ய விண்வெளி ஆய்வு அமைப்பான ராஸ்காஸ்மாஸ் தெரிவித்துள்ளது

# சிரியாவில் வலுப்பெறும் மோதல்; போராளிகள் பகுதிக்குள் படையினர்



சிரியாவில் போராட்டக்காரர்கள் வசமுள்ள அலெப்போ மாவட்டத்தில் சிரியா அதிபர் பஷார்-அல் அசாத்துக்கு விசுவாசமான அரசு இராணுவ டாங்கிகள் நுழைந்துள்ளன.இதைத் தொடர்ந்து புதிய மோதல்கள் அங்கு உருவாகியுள்ளன.

இந்த மோதல்களில் மொத்தம் 13 பேர் உயிரிழந்தனர். இதனை சுதந்திர சிரியா இராணுவம் அறிவித்துள்ளது.அதிபரின் இராணுவம் கவச வாகனங்களுடன் அல்-மலாப் தெருவரை முன்னேறியுள்ளது. இப்போது சலாஹதீன் மாவட்டம் வரை போர் பரவியுள்ளது என்று அதிபருக்கு எதிரான படையின் கெமாண டர் வாசல் அயூப் தெரிவித்தார்.


அலெப்போ நகரின் வடமேற்கே பல்வேறு மாவட்டங்களில் அதிபரின் படை பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டு வருகிறது. இந்தத் தாக்குதலில் புதன் கிழமை அதிகாலை 12 'பேர் உயிரிழந்தனர். அதே மாகாணத்தில் மேலும் ஒருவர் உயிரிழந்தார். இதனை சிரியாவின் மனித உரிமைக்கான கண்காணிப்பகம் தெரிவித்தது. இராணுவத்தின் பீரங்கித் தாக்குதலின்போது, ஒரு வீட்டின் மீது குண்டு விழுந்தது. இதில், ஒரு பெண்ணும் 2 குழந்தைகளும் பலியாகினார்.

இந்தப் பகுதிக்கு அருகில் உள்ள கடார்ஜி, தாரிக்-அல்-பாப், ஷார் ஆகிய பகுதிகளிலும் கடும் தாக்குதல் நடந்து வருகிறது. எனவே, அலெப்போ நகரில் உள்ள பொதுமக்கள் குறித்து சர்வதேச பொது மன்னிப்புச் சபை கவலை தெரிவித்துள்ளது. 2011 மார்ச் முதல் போராட்டக்காரர்களை நசுக்க அதிபர் மேற்கொண்டுவரும் இராணுவ முயற்சிகள் எல்லை மீறி வருவதாக பொது மன்னிப்பு சபை அதிபரை எச்சரித்துள்ளது.

மோதிக்கொள்ளும் இரு பிரிவினரில் பொதுமக்கள் மீது எவர் தாக்குதல் நடத்தினாலும் அது பதிவு செய்யப்படும். எனவே, சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பேற்க வேண்டும் என்றும் சர்வதேச பொது மன்னிப்பு சபை இரு தரப்பினரையும் எச்சரித்துள்ளது.

உலகச் செய்திகள்

# நீதிமன்றில் ஆஜராகுமாறு பாக்.பிரதமருக்கு அழைப்பாணை



பாகிஸ்தான் அதிபர் சர்தாரி மீதான ஊழல் வழக்கை விசாரிக்க மறுக்கும் அந்நாட்டு பிரதமர் பர்வேஸ் அஷ்ரப், வரும் 27ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி மீதான ஊழல் வழக்கை விசாரிக்க, உச்ச நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும், பிரதமர் கிலானி நடவடிக்கை எடுக்கவில்லை. இதையடுத்து, அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எடுத்து, அதில் அவர் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டார். அதனால் கிலானி பதவியிழந்தார்.

இதையடுத்து, ராஜா பர்வேஸ் அஷ்ரப் புதிய பிரதமரானார். அவருக்கும் நீதிமன்றம் அதே உத்தரவை பிறப்பித்தது. சர்தாரி மீதான ஊழல் வழக்கு குறித்து விசாரிக்க சுவிஸ் நாட்டுக்கு கடிதம் எழுத வேண்டும் என்று பிரதமருக்கு நேற்று முன் தினம் வரை காலக்கெடு விதித்திருந்தது. இதேவேளை பிரதமரை காப்பாற்றுவதற்காக புதிய அவமதிப்பு சட்டத்தை அரசு கொண்டு வந்தது. அதன்படி, அவமதிப்பு வழக்குகளில் இருந்து பிரதமர் மற்றும் அரசின் முக்கியப் பிரமுகர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது.

இதை எதிர்த்து எதிர்க்கட்சிகள், உச்சநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்தன. இதை விசாரித்த நீதிபதிகள், புதிய சட்டத்தையும் இரத்து செய்து உத்தரவிட்டனர். இந்நிலையில், சர்தாரி மீது விசாரிக்க உத்தரவிட்ட வழக்கு, நீதிபதி ஆசிப் சயீத் கோஷா தலைமையிலான 5 நீதிபதிகள் பெஞ்ச் முன்பாக விசாரணைக்கு வந்தது. இந்த பிரச்சினை மிகவும் சிக்கலானது என்பதால், விசாரணையை செப்ரெம்பர் வரை ஒத்தி வைக்க வேண்டுமென அட்டர்னி ஜெனரல் இர்பான் காதிர் கோரினார்.

அதை ஏற்க மறுத்த நீதிபதிகள், வரும் 27ஆம் திகதி பிரதமர் அஷ்ரப், நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டுமென அவமதிப்பு வழக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளார்.

# எகிப்தில் மோதல் 20பேர் உயிரிழப்பு



எகிப்தின் சினாய் பிராந்தியத்தில் தீவிரவாதிகளின் வாகனங்கள் மீது எகிப்திய படையினர் ஹெலிகொப்டர் மூலம் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் முழமை நடத்தப்பட்ட இத்தாக்குதல்களில் 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக எகிப்திய அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய எல்லையிலுள்ள இப்பகுதியில் கடந்த ஞாயிறன்று எகிப்திய எல்லைக்காவல் படையினர் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தி 16 பேரைக் கொன்றதுடன் இரு கவசவாகனங்களையும் கடத்திக்கொண்டு இஸ்ரேலிய எல்லைக்குள் தப்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

பின்னர், இவற்றில் ஒரு வாகனம் வெடிப்பிற்குள்ளானது. மற்றொரு வாகனம் இஸ்ரேலிய படையினரால் அழிக்கப்பட்டது. இச்சம்பவத்திற்கு காரணமானவர்கள் தேடி அழிக்கப்படுவாரகள் என எகிப்திய ஜனாதிபதி சூளுரைத்திருந்தார். அதேவேளை ஹமாஸின் கட்டுப்பாட்டிலுள்ள காஸா பிராந்தியத்திலுள்ள தீவிரவாதிகள் மீது இஸ்ரேல் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நிறைவடையும் நிலையில் காரைநகர் வீடமைப்புத் திட்டம்

(காரைநகர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியின் கீழ் வன்னியில் இருந்து வந்து காரைநகர் நெய்தல் கிராமம் மடத்துவளவு சயம்புவீதி குடியிருப்பு பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டு வரும் 70 வீட்டுத்திட்டப் பணிகள் நிறைவடையும் நிலையிலிருப்பதாக ஈ.பி.டி.பி.யின் காரைநகர் பிரதேச அமைப்பாளரும், காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான வீ.கண்ணன் (ரஜனி) தெரிவித்தார்.

வீட்டுத்திட்டப் பணிகள் இடம்பெற்றுவரும் பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன், வீடுகளுக்கான கூரைத்தகடுகள், தீராந்தி மரங்கள் மற்றும் கட்டுமாணப்பணிகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டதுடன், இத்திட்டம் விரைவில் நிறைவடைந்து வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்படும் எனவும் காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் மாரிகாலத்தில் நெய்தல் கிராமம் மடத்துவளவு சயம்புவீதி குடியிருப்பு பகுதிகளில் மக்கள் குடிசைகளில் மழை வெள்ளத்திற்கு மத்தியில் வாழ்ந்து வந்ததாகவும், அப்போது அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்ட போது அடுத்த வருடம் மழை காலத்திற்கு முன்னர் நிரந்தர வீடுகளை அமைத்துத் த[illegible]வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தாம் தெரிவிததாகக் குறிப்பிட்ட ஈ.பி.டி.பி.யின் காரைநகர் பிரதேச அமைப்பாளர் வீரமுத்து கண்ணன், தற்போது இப்பணிகள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரின் பெருமுயற்சியின் காரணமாக நிறைவுக்கு வந்துள்ளமையையிட்டு மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

அத்துடன் இந்த வீட்டுத் திட்டப் பணிகளை விரைவில் முன்னெடுப்பதற்கு உதவிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஆகியோருக்கு அப்பகுதி மக்களின் சார்பாகத் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# 'இலங்கையர்' என்ற அடையாளத்தை முன்னிலைப்படுத்த அரசு விரும்புகின்றது

(கொழும்பு)

இன, மத, கலாசார வேறுபாடுகளுக்கு அப்பால் "இலங்கையர்" என்ற அடையாளத்தை முன்னிலைப்படுத்த அரசாங்கம் விரும்புகின்றது என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டமை நல்லிணக்கத்துக்கான வாய்ப்பை வழங்கியுள்ளது. இத்தனை மீள்கட்டுமானம், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் என்பவை மூலம் சாதித்துக்கொள்ளும் வாய்ப்பும் கிட்டியுள்ளது என்றும் அவர் கூறினார்.

இலங்கையின் யுத்த வெற்றி அனுபவத்தை சர்வதேச நாடுகளுடன் பகிர்ந்துகொள்ளும் இராணுவக் கருத்தரங்கு 2012 புதன் கிழமை கொழும்பில் ஆரம்பமானது. "நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நோக்கி" எனும் தொனிப்பொருளில் கொழும்பு கலதாரி ஹோட்டிலில் இன்று ஆரம்பமான இக்கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய இராணுவ தளபதி கூறுகையில்,

இன்று பல நாடுகள், பிரதானமாக மேற்கு நாடுகள் தம்மால் முடியாமல் போனதை, இலங்கை விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கூறுகின்றன. ஆயினும் ஜனாதிபதியின் துரித செயலணி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரின் வழிநடத்தலின் கீழ், இடம்பெயர்ந்தோரை மீளக்குடியேற்றுவதையும் வழமை நிலையை கொண்டுவருவதையும் 3 வருடங்களுக்குள் சாதித்துள்ளோம்.

தற்போது ஏற்பட்டுள்ள பெரும் முன்னேற்றங்கள், மீள்கட்டுமானம், மீள்குடியேற்றம், நல்லிணக்கம் என்பன அதற்காகப் பாடுபட்டோரின் அர்ப்பணிப்பாகும். ஆனால் இதை சர்வதேச சமூகம் அறிய முடியாமல் இருப்பது வருந்தத்தக்கது என்றார்.

## அபிவிருத்திக்கு....

உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடியிருந்தனர். இதன்போது உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பங்களிப்புடனான திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசுசார்பான நாடாளுமன்ற உறுப்பினர் தடை விதித்திருப்பதாக பத்திரிகை வாயிலாக வந்த செய்திகளின் பிரகாரம் நகரசபைத் தலைவரிடம் சபையின் ஆளும் கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் எதிர்க்கட்சித் தலைவர் பொன். தெய்வேந்திரன் ஆகியோர் கேட்டிருந்தனர்.

இதன்போது ஆளும் கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகர மரக்கறிச்சந்தை கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதற்காக நேரில் வந்து எங்களுடைய அலுவலகத்தில் நீண்ட நேரமாகப் கலந்துரையாடியதுடன், நெல்சிப் திட்டத்திற்கான நிதியை இந்த ஆண்டில் பெற்றுக்கொண்டதற்கிணங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரினுக்கும் (உதயன்) கடந்த மாத 10 ஆவது அமர்வில் தலைமை உரையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டிருந்தது. இன்று பார்க்கப்போனால் ஒருபுறம் போற்றுதலும் மறுபுறம் தூற்றுதலும் செய்வதாக வேடம் போடும் தலைமை என்றும் கூறியதுடன் நானும் மேற்படி கூற்றை வன்மையாக கண்டிப்பதாகவும் கூறினார்.

மேற்படி விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த நகரபிதா த.அனந்தராஜ் பல உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுடன் நானும் கலந்து கொண்டிருந்தேன். ஆனாலும் ஒவ்வொரு தலைவர்களும் தத்தமது பிரதேசம் மற்றும் நகரம் தொடர்பில் குறைநிறைகளை தெரிவித்தனர். நானும் எமது நகரசபைத் தலைவர் என்ற வகையில் கருத்துக்களை முன்வைத்து நகர அபிவிருத்தி தொடர்பான சபைத் தீர்மானம் எடுத்து நிறைவேற்றும் அதிகாரம் எமக்கில்லை.

நியமனங்கள் வழங்கும் அதிகாரமும் இங்கு இல்லை என்றும் அரசாங்கத்தின் நேரடி நிதி எதுவும் கிடைக்காத நிலையிலும் உலக வங்கியின் என்ரிப், நெல்சிப், கெயர் போன்ற திட்டங்களின் மூலம்தான் நகர அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மேற்கொள்ளப்படும் அபிவிருத்திக்கும் வடமாகாண ஆளுநரின் தலையீடு அதிகமாகின்றது. இதேபோன்று நான் படித்த பாடசாலையில் சென்று விழாக்களில் கலந்து கொள்ளும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது என்றுதான் கூறியிருந்தேன். அதற்காக அரச சார்பான நாடாளுமன்ற உறுப்பினர்களை நான் குற்றம் சுமத்தவில்லை என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

பின்னர் மேற்படி விடயங்கள் அறிக்கையிடப்படல் வேண்டும் என பொன்.தெய்வேந்திரம் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (116)

## வடக்கின்...

தமிழ்நாட்டு மக்களின் கரிசனையினையும் வெளிப்படுத்தினார்.

மேலும் தமிழ் பேசும் மக்களுக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆற்றிவரும் சேவையினை பெரிதும் வரவேற்ற கலாநிதி சுப்பிரமணியம் சுவாமி இப்பணியானது இக்காலகட்டத்தில் தொடரவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இச்சந்திப்பில் பிரபல ஊடகவியலாளர் கே.ரீ.ராஜசிங்கம் அமைச்சரின் இணைச்செயலாளர் க.ராஜ்குமார் (றொபின்) ஆகியோரும் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வயோதிபப்...

இது தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் தடயவியலாளர்கள் சடலத்தை பார்வையிட்டதுடன் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் சிலவற்றையும் மீட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த யாழ். மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி கணேசராஜா சடலத்தைப் பார்வையிட்டதுடன் பிரேதப் பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தவிட்டுள்ளார். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## டெங்குநோயை....

தற்போது மேற்கொள்ளப்படும் இரத்த பரிசோதனையின் மூலம் டெங்கு நோயாளி ஒருவரை அடையாளம் காண 48 மணித்தியாலங்கள் செல்கின்றன. இந்த இயந்திரம் முதல் முறையாக நேற்று கொழும்பு சிறுவர் சீமாட்டி வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## சமூக விழிப்புணர்வுக்...

பெண்கள் வன்முறை தொடர்பான சம்பவங்கள் நடைபெறச் சாத்தியமிருக்காது.

மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் இளைப்பாறிய பொலிஸ் அதிபர் இ.ஆனந்தராசா, மனித உரிமை ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பாக பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடலை நடத்தி உரிய நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் மனித உரிமை ஆணைக்குழு தற்போது கிளிநொச்சி மாவட்டத்தையும் தன்னுடன் இணைத்துக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கிளிநொச்சியிலும் இவ் ஆணைக்குழு நடமாடும் சேவையை நடத்தி அங்குள்ள மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து அதற்கு நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

மனித உரிமை ஆணைக்குழு தமக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது காணாமற்போதல் குறைவடைந்துள்ள நிலையில் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட 15 முறைப்பாடுகளில் 10 முறைப்பாட்டுக்குரியவர்கள் வீடு திரும்பியுள்ளனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டில் காணாமற்போனோர் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் சமுகமளிப்பவர்கள் குறைவாக இருப்பதுடன் சமுகமளிக்காமலும் உள்ளனர்.

சுமார் 180 இற்கு மேற்பட்டோர் பற்றியநிலைப்பாடுகள் தெரியாத நிலையில் அவர்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு அவ்வப் பகுதி கிராம அலுவலருடன் தொடர்புகொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று கூறினார். (வி,பா)

## முன்னாள் புலிகளுக்கு...

குறிப்பிட்ட அவர், இதுகுறித்து பாதுகாப்புச் செயலரை விளக்கமளிப்பார் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் அரசினால் சட்டநவடிக்கை எடுப்பதற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள 383 விடுதலைப் புலிகளுக்கும் ஜனாதிபதி பொது மன்னிப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டிருந்தார். அதற்குப் பதிலளித்த பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ, ஆயுதப் படைகளின் முதன்மையான கடமை நாட்டைப் பாதுகாப்பதாகும்.

நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் சக்திகள் மீள ஒருங்கிணைவதை ஆயுதப்படைகள் தடுக்க வேண்டியுள்ளது. புலம்பெயர்ந்துள்ள விடுதலைப் புலிகள் ஆதரவுத் தமிழர்களும் இலங்கையின் எதிர்ப்பு சக்திகளும் தான் இந்தியாவுக்குத் தவறான தகவல்களை வழங்கி வருகின்றனர்.

போருக்குப் பிந்திய சூழலில் அரசாங்கம் பல சவால்களை சந்திக்கிறது. ஒரே இரவில் எல்லாக் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்யமுடியாது என்று கூறியுள்ளார்.

உலகத்தில் இன்று அமைதியும், ஸ்திர நிலையும் உள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். மூன்று வருடங்கள் என்ற குறுகிய கால எல்லைக்குள் இந்த மாற்றம் எப்படி ஏற்பட்டது என்பதையே இந்த கருத்தரங்கில் நாம் பகிர்ந்து கொள்ளவுள்ளோம். இலங்கையில் மூன்று தசாப்தங்களாக இடம் பெற்ற யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் செய்ய வேண்டி இருந்த சில கட்டாய நடவடிக்கைகளை குறிப்பிட்டாக வேண்டும். ஐயாயிரம் சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடி அகழ்வை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதேவேளை புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் புனர்நிர்மாண நடவடிக்கைகளை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டியிருந்தது. உள்நாட்டில் இடம் பெயர்ந்த சுமார் 3 இலட்சம் பொது மக்களை மீள் குடியேற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருந்தது.

இறுதி யுத்தத்தை அடுத்து அரசாங்கத்திடம் சரணடைந்த 12 ஆயிரம் புலிகள் இயக்க முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்க வேண்டிய கடமை அரசை சார்ந்திருந்தது. நாடு முழுவதும் நியாயத்தை ஏற்படுத்த வேண்டி இருந்தது. தேசிய நல்லிணக்கம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது. மேற்குறிப்பிட்ட சகல செயற்பாடுகளையும் 3 வருட குறுகிய காலகட்டத்தில் குறிப்பிடத்தக்க வகையில் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றியமை குறிப் பிடத்தக்கது. யுத்தத்திற்கு பின்னர் இடம் பெற்ற சவால்களையும் இலங்கை அரசாங்கம் அதனை எவ்வாறு வெற்றி கண்டது என்பதையும் நான் உங்களுக்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இறுதி யுத்தம் முடிவுற்ற பின்னர் 295773 பொது மக்களை மீள் குடியேற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு ஏற்பட்டது. அவர்கள் தமது வீடுகளுக்கு செல்ல முடியாது இருந்தது. ஏனெனில் அவர்களது வீடுகள் அமைந்திருந்த நகரங்கள் கிராமங்கள் மனிதர்கள் வசிப்பதற்கான பாதுகாப்பான சூழல் இருக்கவில்லை. புலிகள் பின்னடைவு கண்டபோது மிதிவெடிகள், கண்ணிவெடிகள், பல்வேறு வகையான வெடி பொருட்களை புதைத்து விட்டுச் சென்றனர். எனவே கண்ணிவெடி களை அகழ்ந்து எடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு எமக்கு சவலாக அமைந்திருந்தது. இலங்கை இராணுவத்தின் பொறியியல் பிரிவும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் இதற்கு ஒத்துழைப்பை வழங்கின. 2012 ஜுன் மாத கணக்கெடுப்பின்படி 469275 மிதிவெடிகள் 1399 யுத்த தாங்கி கண்ணிவெடிகள், 388963 வெடிக்காத வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. எனினும் இன்னும் பல வெடி பொருட்களை மீட்கும் நடவடிக்கை பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வடக்கில் 2006 ஆம் ஆண்டு மனிதாபிமான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. 2009 ம் ஆண்டுக்கு பிறகு வடக்கின் நகரங்கள், கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள வசதிகளுக்கு ஏற்ப அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. அதேபோன்று வீடுகளை இழந்தவர்களுக்கு புதிதாக வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இராணுவத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் இத் திட்டத்திற்கு இந்திய அரசும் நிதி உதவி வழங்கி வருகிறது.

யுத்தம் முடிவுற்றதை அடுத்து வடக்கில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகளை மேற்கொள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி செயலணி ஒன்றை நியமித்து வடக்கின் வசந்தம் என்ற திட்டத்தின் கீழ் பாரிய அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

# மக்கள் ஓரணி திரளும்போது எதிர்பார்ப்பு வெற்றிபெறும்



தமிழ்பேசும் மக்களின் நலனை முன்னிறுத்தியதாக அரசியல் பணியினை முன்னெடுத்து வரும் எமது தலைவரின் வழியில மக்கள் ஓரணி திரளும்போது ஊர்காவற்துறைப் பிரதேசத்தினை சகல துறைகளிலும் சிறந்த முறையில் கட்டியெழுப்ப முடியுமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி.கமலேந்திரன் (கமல்) தெரிவித்தார்.

கடந்த 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஊர்காவற்துறை தனியார் பேரூந்து நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றறும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய யாழ். மாவட்ட அமைப்பாளர், தீவக பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளில் எமது தலைவர் கூடுதல் அக்கறை செலுத்தி வருவதுடன் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இவற்றில் சில அபிவிருத்திப் பணிகள் உடனடியாகவும் ஏனையவை கட்டம் கட்டமாகவும் இடம்பெறும் என தெரிவித்ததுடன் ஊர்காவற்துறைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளுக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் ஊர்காவற்துறைப் பிரதேசம் சிறந்த முறையில் கட்டியெழுப்பப் படும் எனவும் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய ஊர்காவற்துறை பிரதேச சபை தவிசாளர் ஜெயகாந்தன் ஊர்காவற்துறைப் பிரதேச சபைத் தேர்தலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வெற்றிபெற்று ஓராண்டு பூர்த்தியாகும் நிலையில் இன்றைய தினம் ஊர்காவற்துறைப் பிரதேச மக்களின் கோரிக்கைக்கு இணங்க 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தனியார் பஸ்தரிப்பு நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா இடம்பெறுவதாக தெரிவித்ததுடன் நெல்சிப் திட்டத்தின் கீழ் ஊர்காவற்துறை பிரதேச வீதி அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் ஊர்காவற்துறைப் பிரதேச மக்களின் நீர்த்தேவையை பூர்திசெய்யும் முகமாக அக்கா தங்கைக்குள புனரமைப்புப் பணிகளும் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார.

இந் நிகழ்வில் ஊர்காவற்துறைப் பிரதேச செயலர், ஊர்காவற்துறை பிரதேச மக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.




| Rank by Gold | Country | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 36 | 23 | 19 | 78 |
| 2 | அமெரிக்கா | 35 | 23 | 25 | 83 |
| 3 | பிரித்தானியா | 24 | 13 | 14 | 51 |
| 4 | தென்கொரியா | 12 | 7 | 6 | 25 |
| 5 | ரஷ்யக் கூட்டமைப்பு | 11 | 21 | 23 | 55 |
| 6 | ஜேர்மனி | 9 | 15 | 10 | 34 |
| 7 | பிரான்ஸ் | 8 | 9 | 11 | 28 |
| 8 | கங்கேரி | 8 | 4 | 3 | 15 |
| 9 | இத்தாலி | 7 | 6 | 5 | 18 |
| 10 | அவுஸ்ரேலியா | 6 | 12 | 9 | 27 |
| 11 | கசகஸ்தான் | 6 | 0 | 2 | 8 |
| 12 | நெதர்லாந்து | 5 | 5 | 6 | 16 |
| 13 | யப்பான் | 4 | 13 | 14 | 31 |

# வெள்ளாங்குளப் பகுதிக்கான நீர் விநியோகத் திட்டத்தை

## கைவிடுமாறு கோரிக்கை

(வேலணை)

முழங்காவில், பூநகரி ஆகிய கிராமங்களில் இருந்து மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வெள்ளாங்குளப் பகுதிக்கு குழாய் மூலமாகத் தண்ணீர் கொண்டு செல்வதற்கான வேலைத்திட்டமொன்றினை இலங்கை தேசிய நீர் வழங்கல் அதிகார சபையினர் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் இந்தத் திட்டமானது கிளிநொச்சி அரச அதிபருக்கோ, பிரதேச சபைக்கே தெரியப்படுத்தப்படவில்லை என்றும் இந்தத் திட்டத்தினை உடனடியாகக் கைவிடப்பட வேண்டும் எனக் கோரிக்கை ஒன்றினை முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தின் தலைவருமான சி.இராசநாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் அவரது கோரிக்கையில் பூநகரி, முழங்காவில் பகுதியில் உள்ள சுமார் 2000 குடும்பங்கள் இந்தத் திட்டத்தினால் பாதிக்கப்படுவார்கள் என்றும் கூறியுள்ளார். இவர் இத்திட்டத்தினை இடைவிடாது மேற்கொள்ளும் பட்சத்தில் மக்கள் ஒன்றிணைந்து போராடவேண்டிய நிலையும் ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளார். (05)

# ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் மூடப்பட்டது

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் நேற்று முதல் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளது. இதனையடுத்து நேற்று 3 மணியுடன் மாணவர்கள் அனைவரையும் பல்கலைக்கழக நிர்வாகம் அங்கிருந்து வெளியேற்றியுள்ளது. பத்து அம்ச கோரிக்கை களை முன்வைத்து பல்கலைகழக மாணவர்கள் கடந்த இரண்டு நாட்களாக வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்த நிலையில், ஊவா வெலலஸ்ஸ பல் கலைகழகத்தில் விஞ்ஞானமும் மற்றும் தொழிநுட்ப பீடம், முகாமைத்துவ பீடம், விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடங்கள் காலவரையறையின்றி மூடப்பட்டன.

குறித்த பல்கலைக்கழகத்தில் 1,852 மாணவர்கள் கல்வி கற்று வருகின்ற நிலையில், அங்கு 11 பாடநெறிகள் இடம்பெறுகின்றன. பல்கலைகழகம் ஆரம்பிக்கப்பட்டு ஏழு வருடங்கள் கடந்த நிலையில் மாணவர்களின் எதிர்ப்புக் காரணமாக காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்று நல்லை ஆதீனத்தில் பீடாரோஹண விழா

சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பாடுபட்ட நல்லைக் குருமணியின் இடைவிடா முயற்சியில் உருவானதே நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம். இந்த ஆதீனம் செய்கின்ற நல்ல அறப்பணிகள் சமூகவாழ் மக்களுக்குப் பெரிதும் துணைநிற்கின்றன.

இன்று இந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் குரு முதல்வராக விளங்குகின்ற இரண்டாவது குருமஹா சந்நிதானத்துக்குப் பீடாரோஹண விழா அனைத்து அடியார்களும் வணங்கும் வகையில் இன்று குருமூர்த்த ஆலயத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் பூசை வழிபாடுகள் இடம பெறவிருக்கின்றன.

விசேட மங்கள இசையுடன் மேளக்கச்சேரிகளும் நிகழும் இன்றைய பீடாரோஹண விழாவில் சுவாமிகளுக்குப் பூசையும் ஆராதனையும் இடம்பெற்றுப் பின்பு அருளாசி வழங்கலுடன் பட்டணப் பிரவேசமும் குடை,கொடி, ஆலவட்டத்துடன் சிறப்புக்களும் நிறைகுட வரவேற்பும் நடைபெறும்.

இந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் செயற்பாடுகள் 1966 முதல் சைவம் வளரவும் தமிழ் செழிக்கவும் பல்வேறு வகைகளில் பயன்தந்து நிற்கின்றன எனில் மிகையாகாது. கதாப்பிரசங்கம் ஒன்றினாலேயே சைவப்பணி செய்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அருமை பெருமையும் சொல்லில் அடங்காதவை.

நாவலர் பெருமானைப் போலத தோற்றமுள்ள இவரது முகப்பொலிவும் தேஜஸும் கண்டவுடனேயே கை தொழச் செய்துவிடும். நல்ல வசீகரத் தோற்றப் பொலிவுள்ள முதலாவது குருமஹா சந்நிதானம் எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்து விடும் பேச்சாற்றலும சங்கீத ஞானமும் வேறு யாருக்குமே இல்லாத ஒன்றாகும்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் இருபந்தைந்து நாள்களும் ஆலய முன்றலில் உள்ள தண்ணீர்ப் பந்தலில தொடராகக் கதை இடம்பெறும். அடியார்கள் பலர் இரவு 11 மணி வரையிலும் இருந்து இவரது பிரசங்கத்தைக் கேட்டுவிட்டுத்தான் இல்லம் செல்வார்கள்.

சைவத்தொண்டுக்கே தம்மை அர்ப்பணித்த ஆதீன சுவாமிகள் இலங்கையில் மட்டுமல்ல இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, இலண்டன், முதலாய இடங்களிலும் கதாப்பிரசங்கம் செய்து அளப்பரிய சேவை செய்தமை குறிப்பிடத்தக்கது.

பத்தியோடு இசைபாடி தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் தமிழ மக்கள் வாழும் இடங்களில் கதை செய்து சைவம் வளரப்பாடுபட்ட சுவாமிகளை நாங்கள் மறக்கக் கூடாது. அவரில்லையே நாம் இன்று சைவமக்கள் என்று கூறிக் கொண்டு நெற்றியில் விபூதி, துலங்க நடமாட முடியாது போயிருக்கும். ஆகவே "மணிஐயா" என்று அன்போடு அழைக்கும் பெருமைபெற்ற அவரை நினைவு கூர்வதோடு அவர் காட்டிய நேர் வழிப் பாதையில் நம்மையும் இடடுச்சென்று சன்மார்க்கத்தில் வாழ்வதே நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும்.

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அதிரடி; இரண்டு கடை உரிமையாளர் நீதிமன்றில்

உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு வகைகளை விற்பனைக்காக வைத்திருந்தார் எனக் குற்றம் சாட்டி திருநெல்வேலி பலாலி வீதியில் உள்ள உணவகம் ஒன்றின் உரிமையாளர் மீது யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குளிர்சாதனப் பெட்டியில் கொத்துறொட்டி, இறைச்சி, மீன், மிதிவெடி போன்றவற்றை ஒன்றாக வைத்திருந்தமைக்காகவும், சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை விற்பனைக்காக வைத்திருந்ததாகவும் இவர் மீது கொக்குவில் பொதுச் சுகாதார பரிசோதகர் க.அனுஷனால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கொக்குவில் பொற்பதி வீதியில் உள்ள பலசரக்கு வியாபாரக் கடையொன்றில் சோடா, பிஸகட், மிக்ஷர் போன்ற பொருட்களைக் காலாவதியான திகதி முடிவடைந்த நிலையிலும் அவற்றை விற்பனைக்காக வைத்திருந்தமைக்காக அதன் உரிமையாளர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யபட்டுள்ளது.

நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.மதனகுமார் நடாத்திய திடீர் சோதனை நடவடிக்கையின் போது கல்வியங்காடு பருத்தித்துறை வீதியில் உள்ள இரண்டு கடைகள் அகப்பட்டுக் கொண்டன. திகதி காலாவதியான பல பொருட்கள் இங்கு கைப்பற்றப்பட்டு இவற்றின் உரிமையாளர்கள் மீது வழக்குத் தொடரப் பட்டுள்ளது. (137)

கோலாகலமான திறப்பு விழா

அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்

Pearl snacks bakery & café

சுவையும், தரமும் நிறைந்த உங்கள் விருப்பத்திற்கேற்ற உணவுகள்.

இலக்கம்: 716, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(யாழ். மாநகர சபை ஆயுர் வேத வைத்தியசாலைக்கு முன்பாக)

(C/1704)



இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஆகஸ்ட் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.